விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 03 ஞாயிற்றுகிழமை (19.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உட்புகுத்து அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(B-3496)

## பொது மக்களின் காணிகளை

# வடக்கில் இராணுவம் விடுவிக்க கூடாது!

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா



**(கொழும்பு) பொது மக்களின் காணிகளை வடக்கில் இராணுவத்தினர் விடுவிக்கக்கூடாது என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

வடக்கில் பொதுமக்களின் காணிகளை மீள ஒப்படைப்பதற்காக இராணுவ முகாம்களை மூடி முகாம்களின் அளவைச் சுருக்கும் இராணுவத் தளபதியின் முடிவு முட்டாள்த்தனமானது என்று தெரிவித்துள்ளார் 15

## வயோதிபரை தாக்கிவிட்டு ஊரெழுவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு அம்மன் கோவிலடியில் வீடு புகுந்த கொள்ளைக் கும்பல், வயோதிபத் தம்பதியரை கடுமையாகத் தாக்கிவிட்டு நகை மற்றும் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

கொள்ளைக் கும்பலின் தாக்குதலால் காயங்களுக்குள்ளான வயோதிபத் தம்பதியர் யாழ்ப்பாணம் 16

### வடக்கில் வெவ்வேறு இடங்களில்

## மூன்று முதியவர்களும், சிறுவன் ஒருவனும் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் வெவ்வேறு பிரதேசத்தில் மூன்று முதியவர்களும் ஒரு சிறுவனும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு 2-ம் வட்டாரம் கோம்பாவில் பகுதியில் தோட்ட கிணற்றில் இருந்து வயோதிபரின் 15

### 87 கிலோ கிராம் கஞ்சா பொதிகள்

## காங்கேசன்துறை கடலில் கடற்படையால் மீட்பு

(பருத்தித்துறை)

காங்கேசன்துறை கடற்பரப்பில் மிதந்து வந்த 87 கிலோ 400 கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதிகளை கடற்படையினர் நேற்று அதிகாலை மீட்டுள்ளனர்.

கடல் ரோந்து சென்ற கடற்படையினராலேயே மேற்படி கஞ்சா பொதிகள் மீட் 16

### ஐ.நா முன்னாள் பொதுச் செயலாளர்

## கோபி அன்னான் காலமானார்



(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலரும், நோபல் 16

## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வெள்ளி இறுதி முடிவு

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல் தொடர்பிலான இறுதி முடிவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள எல்லை நிர்ணய அறிக்கை மீதான விவாதத்திற்கு பின்னர் முடிவாகும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் 15

## அரசை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - மனோ

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் பதவியை கோருவதை நிறுத்திவிட்டு, அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கூட்டு எதிர்கட்சியிடம் அமைச்சர் மனோ கணேசன் சவால் விடுத்துள்ளார்.

கண்டியில் நேற்று 02

## ஆவா குழுவினருடன் இணைந்து செயற்படும் மகனை காப்பாற்றுங்கள்

### பிரதி பொலிஸ்மா அதிபரிடம் தாயார் மன்றாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆவா குழுவினருடன் இணைந்து செயற்படும்தனது மகனை காப்பாற்றித்தருமாறு இளைஞர் ஒருவரின் தாயார் வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபரிடம் மன்றாட்டமாக கேட்டுள்ளார்.

வாள்வெட்டு வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்தும் விதமாக கடந்தவாரம் வட மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ தலைமையில்வாகன பேரணி ஒன்று நடத்தப்பட்டு தொலைபேசி 15

## காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பான

### இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்கும் வகையில் இடைக்கால அறிக்கை ஒன்றை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் எதிர்வரும் 30ஆம் திகதி அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவல 15

## தகைமை பெற்றவர் வடக்கில் இல்லை

### முதலமைச்சர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு வடக்கு மாகாண சபை அநீதி இழைத்துள்ளதாக பலர் கூறிவருகின்றனர். உண்மையில் வெற்றிடத்திற்கு ஏற்ற தகைமை உடையவர்கள் இல்லை என்பதால்தான் 15

### வித்தியா கொலை வழக்கு

## ஊடகவியலாளருக்கு சி.ஐ.டி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமாரை விடுவிக்க உதவியதாக பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான வழக்கின் விசாரணைகள் முற்றுப் பெற்று மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண ஊடகவிய 15

## பொலிஸாரின் சித்திரவதைக்கு நடவடிக்கைகள் எடுக்க விசேட பிரிவு உருவாக்கம்

(கொழும்பு)

மனித உரிமை தேசிய கொள்கையின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு விசேட பொறுப்பொன்று வழங்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் பிரதான விசாரணை அதிகாரி சட்டத்தரணி கலாநிதி மாரின்க சுமணதாஸ கூறினார்.

அதன்படி விசேட பிரிவொன்றை அமைத்து பொலிஸாரின் சித்திரவதைக்கு ஆளாவோர் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது இதன்கீழ் இடம்பெறும் என்று அவர் கூறினார்.

கைது செய்யப்படுகின்ற நபர்களுக்கு பொலிஸாரால் சித்திரவதை வழங்கப்படுவதாக சுமத்த 15

## இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும்

### ஐ.நா ஆணையாளரிடம் கோரிக்கை

(லண்டன்)

இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளர் மிச்சேல் பாச்லெட் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உலகத் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 7வது ஆணையாளராக நியமனம் பெற்றுள்ள மிச்சேல் பாச்லெட்டிற்கு உலகத் தமிழர் பேரவை வாழ்த்துக்களை தெரிவித்து அனுப்பியுள்ள செய்தியிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கப்படையினரால் கடந்த 2009ஆம் ஆண்டில் ஆயிரக்கணக்கான 02

### ஜனவரியில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாயின்

## நடைமுறையில் காணப்படுகின்ற சட்டமூலமே சாத்தியப்படும் - பிரதமர்



(கொழும்பு)

நடைமுறையில் காணப்படுகின்ற மாகாண சட்ட திட்டங்கள் ஊடாக செயற்பட்டால் மாத்திரமே ஜனவரி மாதம் 7 மாகாணங்களுக்கான தேர்தலை நடத்த முடியும். எனவே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் 02

Parcel.lk மகாராஜா பொதிகள் சேவை GTV Express SRI LANKA
aramex
Parcel.lk
GTV Express SRI LANKA
லண்டன் 450/-
கனடா 550/-
சுவிஸ் 450/-
1Kgக்கான கட்டணம்
ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்

(C-3544)

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338<br>021 4925024 | 021 4930099 | 024 4930200<br>076 6908961 | 021 4930330 |

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசாங்கம் நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டு சென்றுள்ளது

## கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

நாட்டின் தற்போதைய அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டை பொருளாதார, அரசியல் மற்றும் சமூக ரீதியாக ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டு சென்றுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை பறித்து, தேர்தலை திகதி அறிவிக்காமல் ஒத்திவைத்துள்ளது.

பொருளாதார பின்னடைவு உட்பட ஸ்திரமற்ற நிலையில், அரசாங்கம் தனது மூன்றாவது ஆண்டு நிறைவை அனுஷ்டிப்பதாகவும் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஞாயிறு மற்றும் போயா தினங்களில் மேலதிக வகுப்புகளுக்கு விரைவில் தடை

## புத்தசாசன அமைச்சர் காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவதை தடை செய்யும் அமைச்சரவைப் பத்திரம் மிக விரைவில் கொண்டுவரவுள்ளதாக புத்த சாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா அறிவித்துள்ளார்.

ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பிற்பகல் 2 மணி வரை மேலதிக வகுப்புக்களை நடத்துவது இந்த அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் தடை செய்யப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (ம)

# பிரதேச செயலகங்களில் இலத்திரனியல் ஆவண சான்று உறுதிப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு

இலத்திரனியல் ஆவண சான்று உறுதிப்படுத்தல் முறைமையை பிரதேச செயலக மட்டத்திற்கு விஸ்தரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கள் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIDA) நடைபெற்ற அரச பிரதிநிதிகளுக்கான மாநாட்டின் போது, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன முன்னிலையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.ரி. கொடிகார மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலத்திரனியல் ஆவணச் சான்று உறுதிப்படுத்தல் முறைமையை இலங்கையிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களுடன் இணைப்பதானது பொதுமக்கள் தமக்குத் தேவையான ஆவணப்படுத்தல் கருமங்களை கொழும்பிலுள்ள கொன்சியூலர் பிரிவுக்கு வருகை தராமல் தமக்கு மிக நெருக்கமான பிரதேச செயலகங்களில் பூர்த்தி செய்து கொள்வதனை சாத்தியப்படுத்தும்.

மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்திற்கு தற்போது வருகைத் தரும் வட மாகாண மக்கள் கூட இந்த பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்திற்கு பதிலாக தமக்கு அருகாமையிலுள்ள பிரதேச செயலகங்களுடாக சான்று உறுதிப்படுத்தல் வேலைகளை செய்து கொள்ள முடியுமாக இருக்கும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இலத்திரனியல் ஆவண சான்று உறுதிப்படுத்தல் முறைமையை பிரதேச செயலக மட்டத்திற்கு விஸ்தரிப்பதனை சாத்தியமாக்கும்.

ஆரம்பமாக காலி மாவட்டத்திலுள்ள 19 பிரதேச செயலகங்களில் ஒரு ஆரம்ப திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படும். தொடர்ந்து இந்த வசதியை இலங்கையிலுள்ள 332 பிரதேச செயலகங்கள் அனைத்திற்கும் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பத் திட்டத்திற்கு கனடா அரசாங்கம் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினூடாக 6.8 மில்லியன் ரூபாய் பெறுமதியான கருவிகளை அன்பளிப்புச் செய்திருக்கின்றது.

கைச்சாத்திடும் வைபவத்தின் போது உரையாற்றிய உள்விவகார அமைச்சர் வஜிர அபேவர்தன,

கனடா அரசாங்கத்தினால் ஆரம்ப செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு வழங்கப்பட்ட உபகரணங்களுக்கு நன்றியை தெரிவித்ததுடன் அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச செயலகங்களில். இலத்திரனியல் முறையில் ஆவணங்களை சான்று உறுதிப்படுத்தலை அமுல்படுத்துவதற்கு அவசியமான பங்களிப்பை விஸ்தரிக்குமாறு அனைத்து அரச பிரதிநிதிகளிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் கருத்து தெரிவித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம்,

பிரதேச செயலக மட்டங்களில் மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் ஆவண சான்று உறுதிப்படுத்தல் முறையானது பாரியளவு அந்நிய செலாவணியை நாட்டிற்கு ஈட்டித் தரும். புலம்பெயர் தொழிலாளர்கள் சமூகத்திற்கு வினைத்திறனான முறையில் சேவையாற்ற முடியும் என்பதை தெரிவித்தார். (ம)

# இலங்கையில் பொறுப்பு...

தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவ்வாறு தமிழர்கள் கொல்லப்படுவதை தடுப்பதில் ஐ.நா மிகமோசமான முறையில் தோல்வி கண்டிருந்தது. எனினும், தமது தோல்விகளை அடையாளம் கண்டு பரிகாரங்களைச் செய்வதற்கு ஐ.நா.வின் முக்கிய அதிகாரிகள் மேற்கொண்ட முன்முயற்சிகள் பாராட்டிற்குரியவை என உலகத்தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்ந்து பொறுப்புக்கூறுவதற்காக அப்போதைய ஐ.நா பொதுச்செயலாளர் பான் கீ மூன் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்திருந்தார். அத்தோடு இலங்கையில் இடம்பெற்றது போன்ற தவறுகள் மீண்டும் நிகழாதிருப்பதற்காக உள்ளக மீளாய்வு குழுவொன்றையும் நியமித்திருந்ததை உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் மேற்பார்வையின் கீழ் இலங்கையைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு 2019 ஆம் ஆண்டு மார்ச் அமர்வுகள் மிகவும் முக்கியமானவை என உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. ஐ.நா இந்த விடயத்தில் இழைக்கக்கூடிய எவ்விதமான தவறும் மனித உரிமைகளை மீறிச் செயற்படுகின்ற நாடுகளுக்கு பிழையான முன்னுதாரணத்தை வழங்கிவிடும் எனவும் தெரிவித்துள்ளது. (ம)

# நடைமுறையில் காண...

களை ஒத்திவைக்கும் நிலைப்பாட்டில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 5ஆம் திகதி 7 மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் அறிவித்தல் விடுத்திருந்தது. ஆனால் தேர்தல் முறைமை குறித்து அறிவிக்கப்படாத நிலையில் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் அதனை தீர்மானிப்பதற்கான அறிவுறுத்தலை வழங்கியிருந்தது.

இந்நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனவரியில் தேர்தலை நடத்த வேண்டுமாயின் செப்டெம்பர் மாதம் இறுதிக்குள் தேர்தல் முறைமை குறித்து அரசாங்கம் தீர்மானித்து அதனை அறிவிக்க வேண்டும் என கூறியிருந்தது.

ஆனால் தேர்தல் முறைமை தொடர்பில் இது வரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத நிலையிலேயே பிரதமர் ரணில்விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்தவார இறுதியில் இடம்பெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து பிரதமர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ஆனால் நடைமுறையில் காணப்படுகின்ற தேர்தல் முறைமை ஊடாகவே தேர்தலை நடத்துவது எளிதான விடயமென்பதுடன் தேர்தலை காலம் கடத்தாமல் நடத்த முடியும் என்பதனை பிரதமர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது. விவாதத்தின் பின்னர் கட்சி தலைவர்கள் கூட்டத்தைத் கூட்டி இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளமை குறிப்படத்தக்கதாகும். (ம)

# அரசை அமைக்க...

இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பை கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கி, தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண இடமளிக்குமாறும் அவர் கூட்டு எதிர்க்கட்சியிடம் கோரியுள்ளார்.

அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற முயற்சிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வூறான ஒரு நிலைமை ஏற்படும் போது, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனே பதவியை விட்டுக் கொடுப்பார் எனவும் அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தை கைப்பற்றுவதாக கூறிவந்தவர்கள் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# படகுகள் விடுவிக்கப்பட்டமைக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்ப்பு

இலங்கை கடற்படையினரினால் கைப்பற்றப்பட்ட 28 படகுகளும் நீரியல் வளத்துறையின் யாழ் அதிகாரியின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டதாக கடற்றொழிலாளர்கள் குற்றம்சாட்டினர்.

வடமராட்சி கிழக்கு பகுதியின் நாகர் கோவில் கடற்பரப்பில் நேற்று சனிக்கிழமை அதிகாலை சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த 28 படகுகளை மடக்கிப் பிடித்த கடற்படையினர் அதில் பயணித்த 81 பேரினை கைது செய்திருந்தனர்.

நீரியல் வளத்திணைக்களத்தினரிடம் ஒப்படைப்பதற்காக அவர்களை வரவழைத்த போது நீரியல் வளத்திணைக் களத்தின் யாழ்ப்பாணத்திற்கு பொறுப்பான அதிகாரி இரவில் அட்டை பிடிப்பதற்கான அனுமதி இருப்பதாக தெரிவித்ததையடுத்து பிடிக்கப்பட்ட படகுகள் நேற்று சனிக்கிழமை பற்பகல் 2.15 மணியளவில் கடற்படையினரின் பருத்தித்துறை முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டன. (ம-60)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
இ.இராமசுவாமி
பெருமாள்



ஆண்டுகள் இரண்டானாலும்
இதயத்தை விட்டு அகல
மறுக்கும் உங்கள் நினைவுகள்!
பசி இல்லை,
பட்டினி இல்லை,
ஆனால் நீங்களும் இல்லையே!
என்றோ
ஒருநாள் சந்திக்கக் காத்திருக்கும்.

(C-3555)

பண்டித்தறை நெல்லியடி
உங்கள் குடும்பத்தினர்

## பதவி வெற்றிடம்

01.கணினி வடிவமைப்பாளர்
02.Customer care
} பெண்கள்

551, K.K.S Road, Jaffna
0761923444,
0212214221, 0217223313

(5409)

## பணிப்பெண் தேவை

இரு வயோதிபர்கள் கொண்ட குடும்பத்துடன் தங்கி நின்று பணிபுரிய பணிப்பெண் தேவை. வேதனம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 0788762626

## FLY BIRD COLLEGE

(F) லை (B) பேர்ட் கல்லூரி

**சிங்கள வகுப்புகள் ஆரம்பம்**

- உங்களது இடத்திலிருந்தே சிங்களம் கற்றுக்கொள்வதற்கோர் அருமையான சந்தர்ப்பம்.
- அரச மற்றும் தனியார் துறையில் பணியாற்றுபவர்கள்.
- இவ் வருடம் சிங்கள மொழி பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள்.
- பல்கலைக்கழக மாணவர்கள்.
- மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள்.

இன்றே தொடர்பு கொள்ளவும்:-**எம்.பி.தீபன்**
FLY BIRD COLLEGE கிளிநொச்சி
T.P:0777079558

(கி-3552)

## வீடு விற்பனைக்கு

K.K.S வீதி, கோண்டாவில் மேற்கில் தபாற்கந்தோருக்கு முன் ஒழுங்கையில் 100m தூரத்தில் 1600 சதுரஅடி விஸ்தீரணமுள்ள 4 1/4 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புபவர்கள் வீட்டினை பார்வையிட்ட பின் தொடர்பு கொள்ளவும்.

T.P:-0778543441

(5398)

## வேலை வாய்ப்பு

SAMSUNG
SINGHAGIRI (PVT) LTD.

(SAMSUNG)
(SINGHAGIRI (PVT) LTD)

- பெண், ஆண்
- O/L சித்தி பெற்றவர்

No.90 Main Street, Nelliady
0214927016, 0775767555

(கி-3553)

'அமெரிக்க விவசாயிகள் பாதிக்கப்பட்டால் பரவாயில்லை'

## கோதுமை மாவுக்கான வரியை அதிகரிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படாமல் அமெரிக்காவிலுள்ள விவசாயிகளுக்கு சிறிது பாதிப்பு ஏற்பட்டது பரவாயில்லையென விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு கோதுமை மாவுக்கான வரியை அதிகரிக்கவுள்ளோம். அடுத்து வரும் போகத்தில் அறுவடை செய்யப்படும் அனைத்து நெல்லையும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக வேண்டி தனது அமைச்சு பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளது. எந்த விவசாயியும் பாதிக்கப்படாதவாறும் சிரமப்படாதவாறும் நெல் கொள்வனவு செய்யப்படும்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு கோதுமை மாவுக்கு வரி விதிப்பது தவறாகாது என தான் கருதுவதாகவும் அமைச்சர் அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடமராட்சியில் கடலட்டை பிடித்த 81 பேர் நேற்று அதிகாலை கைது

## 28 படகுகளும் பறிமுதல்– கடற்படை நடவடிக்கை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில்சட்டவிரோதமான முறையில் 28 படகுகளில் வந்து கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த 81 பேர் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை கடலட்டை பிடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட 28 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. நேற்று சனிக்கிழமை அதிகாலை வடமராட்சி கிழக்கு பகுதியின் நாகர் கோவில் கடற்பரப்பில், நீரியல்வளத் திணைக்களத்தினரின் அனு மதியை மீறி இரவு வேளை கடலட்டை பிடித்துக் கொண்டிருந்தவர்களின் படகு களை அவதானித்த கடற் படையினர் அவர்களை சுற்றிவளைத்தனர்.

இதில் சட்டவிரோத மான முறையில்கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த 28 படகுகளை பறிமுதல் செய்ததோடு, அதிலிருந்த 81 பேரையும் கைதுசெய்தனர்.


கைது செய்யப்பட்ட வர்கள் முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, புத்தளம், வடமராட்சி கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் களை நீரியல்வளத்திணை க்களத்தினரிடம் கடற்படையி னர் ஒப்படைக்கவுள்ளனர்.(இ-60)

# புதிய அரசியலமைப்புக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்த மைத்திரி இரகசியத் திட்டம்

## விக்கிரமபாகு கருணாரட்ன காட்டம்

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பை மறுசீரமைக்கும் பணியை முழுமைப்படுத்தாது ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்த முற்படுவது தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள நவசம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரபாகு கருணாரட்ன, ஜனாதிபதியின் இவ்வாறான அரசியல் திட்டங்கள் மிகவும் கீழ்த்தரமான செயல்கள் என்றும் கடுமையாகசாடியுள்ளார்.



தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தத் தீர்வு காண்பதற்கான அதிகாரப் பரவலாக்கல் உள்ளிட்ட பல முக்கிய மாற்றங்களை உள்ளடக்கி அரசியல் யாப்பை மறுசீரமைப்பதாக வாக்குறுதி அளித்து ஆட்சிபீடம் ஏறிய தேசிய அரசாங்கம், அது தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ள ஆரம்பக்கட்ட அறிக்கையையும் கலந்துரையாடாது கிடப்பில்போட்டுள்ளதாகவும் விக்கிரமபாகு கருணாரட்ன கடும்கண்டனம் வெளியிட்டுள்ளார்.

புதிய அரசியல் யாப்பு தொடர்பிலான ஆலோசனைகளுக்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு, தனது கலந்துரையாடல்களை முடித்துக்கொண்டு அனுமதிக்காக அரசியல் யாப்பு வழி நடத்தல் குழுவிற்கு அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றது. வழி நடத்தல் குழுவில் இந்த அறிக்கை ஆராயப்பட்டு,பின்னர் அரசியல் சாசன சபையாக மாற்றப்பட்டுள்ள பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால், அதற்குப் பின்னர் எந்தவொரு முன்னேற்றமும் இருப்பதாக நாம் காணவில்லை. அதற்கு முற்றிலும் மாறான நிகழ்வாக மிக விரைவில் தேர்தலொன்றை நடத்த வேண்டிய தேவையும் எழுந்திருக்கின்றது.

இந்தத் தேர்தல் மாகாண சபைகளுக்கான தேர்தலாக அன்றி ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஆறு மாதங்களில் அதாவது எதிர்வரும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலத்தை முடித்துக் கொண்டு முன்கூட்டிய ஜனாதிபதித் தேர்தலொன்றை அறிவித்தால் என்ன நடக்கும் என்ற கேள்விகள் எழுந்திருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலை நடத்தவதற்காக மிகவும் அவசர அவசரமாக பல நடவடிக்கைகளில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடியகின்றது. இது மிகவும் கவலைக்குறிய நிலைமையாகும்.

ஏனெனில்தற்போது நடைமுறையிலுள்ள சர்வாதிகார ஆட்சியைக் கொண்ட அரசியல் யாப்பை மாற்றியமைத்து, அதிகாரப் பரவலாக்கலையும் ஜனநாயக மற்றும் மனிதஉரிமைகளையும் உறுதிப்படுத்தும் புதிய அரசியல் யாப்பை தயாரித்து நடை முறைப்படுத்துவதே இந்த அரசாங்கத்தின் வாக்குறுதியாகும். ஆனால் மக்களுக்கு வழங்கப்பட்ட இந்த வாக்குறுதியை புறந்தள்ளிவிட்டு இவ்வாறு செயற்படுவது மிகவும் கீழ்த்தரமான செயலாகும். குறைந்தபட்சம் ஜே.வி.பியினர் முன்மொழிந்துள்ள 20 ஆவது அரசியல்யாப்புத் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி அதன்மூலம் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறைமையை முடிவுக்கு கொண்டுவந்த தன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லலாம். ஆனால், இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் விடுத்து, அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலமான 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பின் தெகிவளை மற்றும் கல்கிசை பகுதிகளில் வைத்து 11 தமிழ் இளைஞர்கள் வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் யுத்தத்தில் மாத்திரமன்றி அதற்கு வெளியிலும் கொடூரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை உறுதி செய்வதாக அமைந்திருப்பதாகவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

தற்போது சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது வலுவடைந்து வருகின்றது. குறிப்பாக 11 தமிழ் இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கடற்படை அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதன்மூலம் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பல்கலை.மாணவர்கள் 14 பேர் பகிடிவதையால் உயிரிழப்பு!

## உயர்கல்வி அமைச்சர் தகவல்



(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை காரணமாக இதுவரை 14 மாணவர்கள் உயிரிழந்திருப்பதாக உயர்கல்வி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கலாசார அமைச்சு நடத்திய ஆய்வொன்றின் மூலம் இத்தகவல் வெளியாகியுள்ளதாக கலாசார அமைச்சில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், பகிடிவதைகள் காரணமாக ஆயிரத்து 989 மாணவர்கள் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறியுள்ளதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

“இந்நாட்டில் மிகப்பெரிய பாதாள உலகம் இருப்பது பல்கலைக்கழகத்தினுள் மட்டும்தான். பகிடிவதை காரணமாக 91 ஆயிரம் மாணவர்கள் பெரும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். இதன் காரணமாக மனோ ரீதியாக மட்டுமல்ல உடல் ரீதியாகவும் இந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களுக்கு பாலியல், உடல் ரீதியான வதை செய்யப்படுகிறது. இந்த நிலைமையை சரியான முறையில் புரிந்துகொண்ட முன்னாள் உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரண, 1998 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க பகிடிவதைச் சட்டத்தை நிறைவேற்றித் தந்துள்ளார். இந்த சட்டம் சில காலம் முடங்கிக் கிடந்தது. எனினும், இந்தச் சட்டத்தை மிகத் தீவிரமாக நடைமுறைப் படுத்தவும் அதனூடாக கடும் தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவும் விசேடமாக ஆகக்குறைந்தது 10 வருடங்கள் சிறைத் தண்டனையை பெற்றுக்கொடுக்கவும் கூடிய விதத்தில் இதனை நடைமுறைப்படுத்துவோம்.

இதேவேளை, பல்கலைக்கழகத்தின் பெயரில் உண்டியல் மூலம் பணம் சேகரித்து வருபவர்கள் அதனை கொண்டு மது அருந்துவதையே செய்து வருகின்றனர். எனவே, இவ்வாறானவர்களுக்கு பணம் வழங்க வேண்டாம் என பொது மக்களிடம் கோரி நிற்கின்றேன்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கீத் நொயர் கடத்தல் தொடர்பில் கோத்தபாயவிடம் வாக்குமூலம்



(கொழும்பு)

துப்பாக்கியைக் காட்டி ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலத்தைப் பெற்றுள்ள நிலையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் வாக்குமூலம் பெற அழைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த 2008 ஆம்ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி இரவு 10 மணியளவில் கீத் நொயர், தெகிவளை வைத்தியா வீதியில், ஆயுத முனையில் கடத்திச் செல்லப்பட்ட போது, த நேஷன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லலித் அழகோன், அப்போதய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் முடியாமல் போயுள்ளது.

இதன் பின்னர், அப்போது அரசாங்கத்தில் பொது நிர்வாக அமைச்சராக இருந்த கரு ஜெயசூரியவை ஒருவர் தொடர்பு கொண்டு கீத் நொயர் கடத்திச் செல்லப்பட்டுள்ள சம்பவம் குறித்து தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து கரு ஜெயசூரிய உடனடியாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தொடர்பு கொண்ட போதிலும் அவர் உறங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எப்படியாவது ஜனாதிபதியிடம் பேச வேண்டும் என கருஜெயசூரிய கூறியதையடுத்து, மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி இணைப்புக்கு வந்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவிடம் பேசிய கரு ஜெயசூரிய, ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் அதனை திட்டமிட்டு எவரோ செய்துள்ளதாகவும் கீத் நொயருக்கு ஏதேனும் நடந்தால், தான் அரசாங்கத்தில் இருந்து விலக நேரிடும் எனவும் கூறியுள்ளார். இதன் பின்னர் பதிலளித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, “கரு, குழம்பிக் கொள்ள வேண்டாம், அதனை நான் தேடிப்பார்க்கின்றேன்” எனக் கூறியுள்ளார்.

இதன் பின்னர், மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ,\அன்றைய இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தா விதாரன, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியதன் பயனாக, கீத் நொயர், மல்வானை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஹோலி மீண்டும் அசத்தல்

## இந்தியா ஓட்டங்கள் குவிப்பு




நொட்டிங்காம் டெஸ்டில் தனி ஒருவனாக அசத்திய இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி சதத்தை நழுவ விட்டார். ரகானே அரைச் சதம் கடந்து கைகொடுக்க முதல் நாள் முடிவில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டியில் வீழ்ந்த இந்திய அணி 0-2 என பின்தங்கி உள்ளது. மூன்றாவது டெஸ்ட் நொட்டிங்காமில் நடக்கிறது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இந்திய அணியில் முரளி விஜய், குல்தீப் நீக்கப்பட்டு ஷிகர் தவான், பும்ரா இடம் பிடித்தனர். விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக்கிற்குப்பதில் ரிஷாப் பண்ட் அறிமுக வாய்ப்பு பெற்றார். இங்கிலாந்து அணியில் கர்ரன் நீக்கப்பட்டு ஸ்ரோக்ஸ் இடம் பிடித்தார்.

### நல்ல ஆரம்பம்

இந்திய அணிக்கு ஷிகர் தவான், லோகேஷ் ராகுல் ஜோடி சிறப்பான ஆரம்பம் தந்தது. இவர்களின் ஆட்டம் நம்பிக்கை தந்த நிலையில் தொல்லையாக வந்தார் வோக்ஸ். முதல் விக்கெட்டுக்காக 60 ஓட்டங்களை சேர்த்தபோது, இவரது 'வேகத்தில்' தவான் (35) ஆட்டமிழந்தார். லோகேஷ் ராகுலும் (23) இவரிடமே விக்கெட்டை பறிகொடுத்தார். இரண்டு பவுண்டரி அடித்த புஜாரா (14) வோக்சின் 'பவுன்சரில்' சரிந்தார்.

### ரகானே அரைசதம்

அணித்தலைவர் ஹோலி - ரகானே ஜோடி பொறுப்புடன் விளையாடியது. டெஸ்ட் அரங்கில் 18ஆவது அரை சதம் எட்டிய ஹோலி, வழக்கம்போல எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு அச்சம் கொடுத்தார். தன் பங்கிற்கு ரகானே 13ஆவது டெஸ்ட் அரைச் சதம் அடித்தார். ரகானே (81) பிரோட் பந்தில் குக்கின் மின்னல் வேக பிடியில் (0.493 வினாடி) ஆட்டமிழந்தார். திறமையாக விளையாடிய ஹோலி 97 ஓடடங்களில் ரஷித் பந்தில் ஸ்ரோக்சிடம் பிடி கொடுத்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். வந்த வேகத்தில் ரிஷாப் இரண்டாவது பந்தில் சிக்சர் அடித்து டெஸ்ட் அரங்கில் ஓட்டக்கணக்கை ஆரம்பித்தார். பாண்ட்யா 18 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில், இந்திய அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரிஷாப் பண்ட் (22) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்துசார்பில் வோக்ஸ் 3, அண்டர்சன் ஒரு விக்கெட்டை கைப் பற்றினர்.

2ஆம் நாளாட்டம் இன்றாகும்.

### கறுப்பு பட்டை

சமீபத்தில், இந்திய அணி முன்னாள் தலைவர் அஜித் வடேகர் காலமானார். இவருக்கு இரங்கல் தெரிவிக்கும்விதமாக, நேற்று இந்திய அணி வீரர்கள் கையில் 'கறுப்பு பட்டை' அணிந்து விளையாடினர்.

### 291ஆவது வீரர்

டெஸ்ட் போட்டியில் அறிமுக இடம் பிடித்தார் இந்திய விக்கெட் காப்பாளர் ரிஷாப் பண்ட். இவருக்கு, அணித் தலைவர் ஹோலி தனது கையால் தொப்பி வழங்கி கௌரவித்தார். இதன் மூலம், இந்திய அணிக்காக டெஸ்டில் களமிறங்கி 291வது வீரரானார்.

### 60 ஓட்டங்கள்

ஷிகர் தவான், லோகேஷ் ராகுல் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 60 ஓட்டங்கள் சேர்த்தது. இதனையடுத்து, இத்தொடரில் ஒரே இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய ஜோடி யானது. இதற்கு முன், முதல் டெஸ்டின் முதல் இன்னிங்சில் அணித் தலைவர் ஹோலி, உமேஷ் ஜோடி (10ஆவது விக்கெட்) 57 ஓட்டங்கள் குவித்ததே அதிகபட்சம்.

### 5ஆவது இளம் வீரர்

இப்போட்டியில் ரிஷாப் பண்ட் (20 வயது, 318 நாள்) அறிமுகமானார். இதனையடுத்து, இந்திய அணிக்கு டெஸ்டில் விக்கெட் காப்பாளராக இளம் வயதில் அறிமுகமான வீரர்கள் பட்டியலில் ரிஷாப் 5ஆவது இடம் பிடித்தார். முதலிடத்தில் பார்த்திவ் படேல் (17 வயது, 152 நாள்) உள்ளார்.

◆ ஓட்டுமொத்தமாக இந்திய அணிக்காக களமிறங்கிய 3ஆவது விக்கெட் காப்பாளரானார். பார்த்திவ் படேலுக்குப்பின் விளையாடிய 2ஆவது இடது கை துடுப்பாட்ட வீரர் - விக்கெட் காப்பாளர் என்ற பெருமை பெற்றார் ரிஷாப்.

### இரண்டாவது இடம்

இங்கிலாந்து மண்ணில் சர்வதேச போட்டிகளில் அதிக அரைச் சதம் (8) அடித்த இந்திய அணித் தலைவர்கள் வரிசையில் அசாரை முந்திய ஹோலி (8) 2ஆவது இடம்பிடித்தார். முதலிடத்தில் தோனி (10) உள்ளார்.

### 13 இன்னிங்ஸ்

இந்திய வீரர் ரகானே, டெஸ்டில் 13 இன்னிங்சிற்குப்பின் முதல் அரை சதம் அடித்துள்ளார். கடைசியாக, 2017 ஓகஸ்டில் இலங்கைக்கு எதிரான கொழும்பு டெஸ்டில் 132 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

### 3000 ஓட்டங்கள்

இந்திய வீரர் ரகானே 61 ஓட்., எடுத்த போது, டெஸ்ட் அரங்கில் 3 ஆயிரம் ஓட்டங்களை (81 இன்னிங்ஸ்) எட்டினார். இந்த இலக்கை எட்டிய 22ஆவது இந்திய வீரரானார்.

### 10 ஆண்டு

கடந்த 2008 ஓகஸ்ட் 18ல் இலங்கைக்கு எதிராக தம்புள்ளயில் நடந்த ஒரு நாள் போட்டியில் ஹோலி இந்திய அணியில் அறிமுக மானார். நேற்றுடன், இவர் சர்வதேச அரங்கில் தடம்பதித்து 10 ஆண்டு நிறைவு பெற்றது.

# வண்ணமயமான ஆரம்ப விழா

## 18வது ஆசிய விளையாட்டுக்கள் ஆரம்பம்



அணிவகுத்து வரும் இலங்கை அணி வீரர்கள்

இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் ஆசிய விளையாட்டு கோலாகலமாக ஆரம்பமானது.

ஆசிய நாடுகள் பங்கேற்கும் 18 ஆவதுஆசிய விளையாட்டு இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் நேற்று ஆரம்பமாகியது.

மொத்தம் 45 நாடுகளில் இருந்து 12,062 நட்சத்திரங்கள் பங்கேற்கும் இதில் 40 வகையிலான விளையாட்டில் 465 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

தொடக்க விழா நேற்று ஜகார்த்தாவின் கெலோரா பங்கர்னோ ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ் மைதானத்தில் நடந்தது. 4000 நடன கலைஞர்கள் பங்கேற்றனர்.

இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, ஜகார்த்தாவின் போக்குவரத்து சிக்கலில் இருந்து மீண்டு 'பைக்கில்' மைதானத்துக்கு வந்தது எல் லோரையும் கவர்ந்தது. இது இங்கு நிலவும் போக்குவரத்து சிக்கலை எடுத்துக்காட்டும் வகையில் இருந்தது.

### இந்தியா வருகை

பிறகு நட்சத்திரங்கள் அணிவகுப்பு ஆரம்பமாகியது. அகர வரிசைப்படி முதலில் ஆப்கானிஸ்தான் வந்தது. இந்திய அணி 9 ஆவதாக வந்தது. சமீபத்திய கொமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்ற இளம் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, இந்திய தேசியக் கொடி ஏந்தி வந்தார். இந்திய வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் பேன்ட், கோட் அணிந்து வந்தனர். போட்டியை நடத்தும் இந்தோனேஷியா கடைசியாக வந்தது.

### களை கட்டியது

இந்தோனேஷியா இராணுவத்தின் கொடி பிரிவினர் தேசியக் கொடி ஏற்றினர். பாடகர் துளஸ் தேசிய கீதம் பாடினர். ஜனாதிபதி ஜோகோ விடோடோ ஆசிய விளையாட்டு தொடங்குவதாக முறைப்படி அறிவிக்க, மைதானத்தில் ஆசியக் கொடி ஏற்றப்பட்டது.

தொடர்ந்து இந்தோனேஷிய கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. மைதானத்தில் 120 மீ., நீளத்தில் அமைக்கப்பட்டு இருந்த பிரமாண்டமான மலைகள், அருவிகள் சூழ்ந்த இயற்கை பின்னணியில் கலைஞர்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

ரெய்சா, விஸ்சி, ரோசா, கமாசியன் மத்யூஸ் உள்ளிட்டோர் இந்தோனேஷியாவின் பிரபல பாடல்களை பாட, ரசிகர்களும் இணைந்து கொண்டனர். ஜோய் அலெக்சாண்டர் பியானோ இசை, நிலவொளியின் பின்னணியில் புட்ரி அயு பாடினார்.

கடைசியில் 'இந்தோனேஷிய முன்னாள் பாட்மின்டன் வீராங்கனை சுசி சுசாந்தி, ஜோதியை ஏற்றி வைத்தார். வாண வேடிக்கை விண்ணை எட்ட மைதானம் தொடக்க விழா நிறைவடைந்தது.

### இணைந்த கைகள்

வடகொரியா, தென்கொரியா இடையிலான பகைமை மறைந்து வருகிறது. நேற்று நடந்த தொடக்க விழா அணிவகுப்பில் இரு நாட்டு வீரர், வீராங்கனைகள் ஒரே கொடியின் கீழ் இணைந்து வந்தனர். அனைவரும் ஒருவருக்கு ஒருவர் கைகளை பிடித்துக் கொண்டே வந்தனர்.

இதேபோல கலரியில் இருந்த இரு நாட்டு பிரதிநிதிகளும் தங்கள் கைகளை இணைத்து உயர்த்தியது, ரசிகர்களை மட்டுமல்ல உலகத்துக்கும் புதிய செய்தியாக இருந்தது. சர்வதேச போட்டிகளில் இரு அணிகளும் 11ஆவது முறையாக இணைந்து வந்தனர்.

### சிறிய அறை, இந்திய சாப்பாடு...

ஆசிய விளையாட்டு கிராமத்தில் விளையாட்டு நட்சத்திரங்கள் தங்கும் அறையில் போதிய வசதி இல்லாமல் உள்ளன. ஒரு சிறிய அறையில் மூன்று பெட், ஒரு பாத்ரூம் உள்ளதால் நெருக்கடியாக உள்ளதாம். அதே நேரம் இந்திய வீரர், வீராங்கனைகள் யாரும் எதுவும் கூறவில்லை. ஏனெனில் இங்கு இந்திய உணவு வகைகள் கிடைப்பதால் பெரும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### ராட்சத திரையில்..

ஆசிய விளையாட்டு முதன் முறையாக இரு மைதானங்களில் நடக்கிறது. இதனால் ஜகார்த்தாவில் நடந்த தொடக்க விழா, பலேம்பாங் கில் உள்ள மற்றொரு மைதானத்தின் ராட்சத திரையில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

# 2016 நவம்பர் – 2018 ஒகஸ்ட்

# 7 ஆயிரத்து 147 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப்பகுதியில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் இயங்கி வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணி வெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழுள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகமாலையிலும் ஐந்து இலட்சத்து 97 ஆயிரத்து 107 சதுர மீற்றர் பரப்பளவில் (597,107 Sqm) இருந்து 7ஆயிரத்து 147 அபாயகரமான வெடிபொருடகளை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையா ளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.



மேலும் இந்நிறுவனம் இரண்டு இலட்சத்து 26 ஆயிரத்து 764 (226,764 Sqm) நிலப்பரப்பினை மக்களின் பயன்பாட்டிற்காக அரசாங்கத்திடம் கையளித்துள்ளது.

கண்ணிவெடியகற்றுதல் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசகர் றொலி இவன்ஸ மற்றும் தேசிய கண்ணிவெடி அகற்றுதலுக்கு பொறுப்பதிகாரி மகிந்த விக்ரமசிங்க அடங்கிய குழுவினர் கடந்த 4 ஆம் திகதி இந்நிறுவனத்திற்கு வருகை தந்ததுடன் நிறுவன அலுவலகம் மற்றும் கண்ணி வெடியகற்றும் தளம் என்பவற்றை பார்வையிட்டனர்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)


## உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

ISO 9001:2008 CERTIFIED

SLIM BRAND EXCELLENCE

British Way English Academy

## British Way® English Academy

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

எந்த மாற்று வழியுமில்லை British Way

இதுவே வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான உலகின் தலைசிறந்த இடம்...

• NITTAMBUWA • GALLE • MATARA • ANURADHAPURA • KANDY • KURUNEGALA • KIRIBATHGODA • BANDARAWELA
• NUGEGODA • GAMPAHA • NEGOMBO • POLONNARUWA • RATHNAPURA • JAFFNA • EMBILIPITIYA • KALUTARA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

04th, 06th of September, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும், தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

23rd of September, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

### KIDS' Class — Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

Contact (Jaffna Branch) 021 300 55 55

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)


## இராசி பலன்

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.

**மேடம்:** இறை வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்கள் வழியில் விரயங்கள் அதிகரிக்கலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**கும்பம்:** எதிர்கால நலன்கருதி புதிய திட்டமொன்றை தீட்டுவீர்கள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், உடல் நலன் சீராகும்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | புத. ராகு |
| செவ். கேது | கிரகநிலை | | சூரி |
| சனி | சந் | குரு | சுக் |

சந்திராஷ்டமம்

பரணி, கார்த்திகை

**19.08.2018**

ஆவணி 3, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

அட்டமி காலை 6.27 மணிவரை

அனுசம் முன்னிரவு 11.57 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

ஆவணி ஞாயிறு

வளவன்

**மகரம்:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தன வரவு திருப்திகரமாக அமையும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வாகன சுகமுண்டு, தொலைபேசித் தகவல் நெஞ்சம் நெகிழ வைக்கும், தாயின் உடல் நலன் சீராகும்.

**தனுசு:** பயணத்தால் பலன் கிடைக்கும், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.


**விருச்சிகம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

# 530 மில்லியன் ரூபா செலவில்

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமையவுள்ளது குவைத் செம்பிறைச்சங்க மீள்வாழ்வு சிகிச்சை நிலையம்



(யாழ்ப்பாணம்)

குவைத் நாட்டினது செம்பிறைச் சங்கத்தின் நன்கொடையில் (Generous Donation of Kuwait Red Crescent Society, Kuwait) அமையவுள்ள குவைத் செம்பிறைச்சங்க மீள்வாழ்வு சிகிச்சை நிலை யத்திற்கான (Kuwait Red Crescent Rehabilitation Centre Teaching Hospital Jaffna) அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன, பிரதி சுகாதார அமைச்சர் பைசல் காசிம், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் முதலான பலர் கலந்து கொண்டனர்.

குவைத் நாட்டினது செம்பிறைச் சங்கத்தினால் வழங்கப்படுகின்ற இலங்கை ரூபா 530 மில்லியன் நன்கொடை நிதியுதவியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அமையவுள்ள இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தை அமைக்கும் திட்டமானது 3 பகுதிகளைக் கொண்டது. கட்டட வடிவமைப்பு மற்றும் நிர்மாணம், மருந்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கல், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் இயன் மருத்துவர் ஆகியோருக்கான பயிற்சி வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையைத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

குவைத் செம்பிறைச் சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் கிலால் முசைட் அல் சேயர் (Dr.Hilal Mussaed Al Sayer, President of Kuwait Red Crescent Society, Kuwait) என்பவரால் இந்த நன்கொடையானது "மெடிசொலூசன்" வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு (Medisolution pte. ltd.) வழங்கப்பட்டு "மெடிசொலூசன்" நிறுவனத்தின் ஊடாக இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படுகின்றது.

இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலைய கட்டட நிர்மாணம் 2018 ஜூலையில் ஆரம்பமாகி 2019 செப்டெம்பரில் பூர்த்தியாகுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. 2019 ஒக்ரோபரில் பூரணமாக்கப்பட்ட கட்டடம் முழுமையான உபகரணத் தொகுதிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படும்.

2021 ஒகஸ்ட் மாதத்தில் நிறைவுறும் வகையில் 3 வருட விசேட பயிற்சி நெறியும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்தில் என்பு முறிவு, மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பு மற்றும் நீண்டகாலமாக படுக்கையில் உள்ளவர்களுக்கான சிகிச்சைகள் (Orthopaedic and Rheumatology). இயன் மருத்துவர்களின் (Physiotherapist) உடற்பயிற்சிகள், என்பு முறிவு, உடல் அவயவ பாதிப்புக்குள்ளானவர்களுக்கு செயற்கை அவயவ வடிவமைப்பு நிபுணர்களின் சேவைகள் (Prosthetist and Orthotist), விசேட தேவை உள்ளோருக்கான தொழில் வழிகாட்டு நிபுணர்களின் (Occupational Therapist) உடற்பயிற்சிகள், சிகிச்சைகள் என்பன வழங்கப்படும்.

இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் செயற்பட ஆரம்பித்ததும் விபத்து மற்றும் அனர்த்தங்களின் போது பாதிப்புக்குள்ளானவர்களுக்கான சிகிச்சைக்குப் பிந்திய இயன்மருத்துவர்கள், தொழில் வழிகாட்டும் சிறப்பு நிபுணர்களின் சேவைகள் நவீன மருத்துவ உபகரணங்களின் உதவியுடன் சிறந்த முறையில் வழங்கப்படும் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## தெற்கிற்கு பிடிக்காது எனவே வடக்கில்

# பிரிவினைவாதம் பற்றிப்பேச அனுமதிக்க முடியாது -சரத்



(கொழும்பு)

நாம் வடக்கில் விடுதலைப்புலிகளை ஒழித்துள்ளோம். எனவே தற்போது பிரிவினை வாதம் பற்றி பேச அனுமதிக்க முடியாது என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாங்கள் புலிகளை அழித்துள்ளோம். சமாதானம் நல்லிணக்கத்திற்கான பின்னணியைதோற்றுவித்துள்ளோம். அப்பகுதியில் அபிவிருத்தியை செய்வதற்கான நிலையையும் உருவாக்கியுள்ளோம்.


ஆனால் இது போதாது என்று அங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள் சபைக்கு காண்பிக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் பிரிவினைவாதம் பற்றி பேசுகின்றார்கள். அதற்கு அனுமதிக்க முடியாது. தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அதை விரும்ப மாட்டார்கள். அனுமதிக்கவும் மாட்டார்கள்.

அதிகாரப் பகிர்வு வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும். ஆனால் அதற்கு பெரும்பான்மைகள் அதிகமாக இருக்கின்றன. தமிழ் மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் ஆர்வமாக இருக்கின்றார்களே தவிர அரசியலில் இல்லை.

அவர்கள் என்ன கேட்கின்றார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களின் தேவைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். அரசியல்வாதிகளின் தேவைப்பாடுகளை அல்ல எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் சகல இடங்களிலும் இராணுவத்தின் பிரசன்னம் இருக்க வேண்டும். இராணுவம் தெற்கில் தான் இருக்க வேண்டும். வடக்கில் இருக்கக்கூடாது என்று கூற முடியாது. இராணுவத்தினர் அகற்றப்படவும் மாட்டார்கள் என சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-7)

## 800 மெகாவோல்ட் மின் பிறப்பாக்கி மூலம் நல்லூர் உற்சவகாலத்தில் மின் விநியோகம்






(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலத்தில் தடையின்றிய மின் விநியோகத்துக்கான ஏற்பாடுகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

உற்சவ காலத்தில் இடையறா மின் விநியோகத்துக்கென இலங்கை மின்சார சபையின் வட மாகாணப் பிரதிப் பொதுமுகாமையாளரின் விசேட ஏற்பாட்டின் பேரில் கொலன்னாவையிலிருந்து 800 மெகாவோல்ட் கொள்ளளவு கொண்ட மின் பிறப்பாக்கி கொண்டுவரப்பட்டுள்ளதாவும் தினமும் இரவு 10 மணிவரை ஆலயச் சுற்றாடலுக்கான முழு விநியோகமும் இந்த மின் பிறப்பாக்கியின்மூலம்மேற்கொள்ளப்படுவதாகவும் இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய மின் அத்தியட்சகர் எஸ். அருள்நாதன் தெரிவித்தார். (இ-9)

## மோட்டார் சைக்கிளை கைவிட்டுவிட்டு தப்பியோடிய கொள்ளையர்கள்!

### மந்திகையில் நேற்று அதிகாலை சம்பவம்



(கரணவாய்)

வர்த்தக நிலையத்தை உடைத்து உள்நுழைய முற்பட்ட கொள்ளையர்கள் வர்த்தகர்கள் விழிப்படைந்ததால் தமது கொள்ளை முயற்சியினையும் கைவிட்டு தாம் பயணித்த மோட்டார்சைக்கிளையும் கைவிட்டு சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் மந்திகை சிலையடிக்கு அருகாமையிலுள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றிலே இக்கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையத்தின் ஓட்டினை கழற்றி கொள்ளையர்கள் இறங்கியதை அங்கிருந்த வர்த்தகர் தெரிந்து கொண்டு ஏனைய வர்த்தகர்களுக்கும், அயலில் உள்ளவர்களிற்கும் தகவல் வழங்கியுள்ளார்.

இதனால் கொள்ளை முயற்சியினையும் கைவிட்டு தாம் பயணித்த மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு கொள்ளையர்கள் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதுடன் கொள்ளையர்கள் கைவிட்டு சென்ற மோட்டார் சைக்கிள் பருத்தித்துறை பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (இ-60)

## வன்முறைகளுடன் தொடர்புடைய ஆவாகுழு குறித்து தகவல் வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை

# 50 ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அதிக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும் பிரதேசங்களின் தகவல்களை இரகசிய முறையில் தொலைபேசி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தெரிவிக்குமாறு வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ். தலைமைப்பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் ஓரளவிற்கு குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வன்முறைச் சம்பவங்கள் மற்றும் ஆவா குழுவினரை கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம் பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் பொலிஸாரின் அறிவுறுத்தல்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் 5 ஆயிரம் பொது மக்களிடம் விநியோகம் செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியதுடன் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த பொது மக்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

அதேநேரம் மானிப்பாய் மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

எனவே, வன்முறைச் சம்பவங்கள் மற்றும் ஆவா குழுவினரைக் கட்டுப்படுத்த தகவல் அறிந்த பொது மக்கள் தொலைபேசி மூலமும் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் முகவரிக்கும் தனிப்பட்ட முறையில் இரகசியமாகத் தகவல்களை வழங்கினால் வன்முறையாளர்களைக் கட்டுப்படுத்த இலகுவாக இருக்குமென்றும் இவ்வாறான தகவல்களை தந்துதவுமாறும் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-101)

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தில்லையம்பலம்சுந்தையா கதிரேசுவின் சமய,சமூக கல்விப் பணிகளைப் பாராட்டி ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் கௌரவிப்பு நிகழ்வு ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய இராசபாதி திருமண மண்டபத்தில் இன்று மாலை 4 மணியளவில் ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் ஏ.வி.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறும். இதில் ஆசியுரையினை மூத்த நயினார் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ க.கிருஸ்ணேஸ்வரக் குருக்கள் வழங்குவார். (இ

# மன்னார் பொது மீன் சந்தையில் மின்சார உபகரணங்கள் திருட்டு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் நகர சபைக்குட்பட்ட பொது மீன்சந்தையானது கடந்த மாதம் நகர சபையின் நிதி யுதவியுடன் குடிநீர், மின்சார வசதிகள் என்பன செய்து கொடுக்கப்பட்டன.

மீன் சந்தையில் புதிதாக புரனமைக்கப்பட்ட மின்சார உபகரணங்கள் இனம் தெரியாத நபர்களால் களவாடப்பட்டுள்ளன.

மன்னார் மத்திய பகுதியில் காணப்படும் குறிப்பிட்ட மீன் சந்தையானது பல வருடங்களாக மின்சாரம் நீர் வசதி இன்றி காணப்பட்டமையை தொடர்ந்து கடந்த மாதங்களில் நகர சபையினால் தற்காலிகமாக செய்து கொடுக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த வாரங்களில் இனம் தெரியாத நபர்களினால் பல ஆயிரம் பெறுமதியான மின் உபகரணங்கள், மின் ஆளிகள், மின் சுற்றுக்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

மேலும் குறித்த மீன் சந்தையில் பின் பகுதி கதவு ஒழுங்கான நிலையில் இல்லை எனவும் இரவு நேரங்களில் விலங்குகளின் தங்குமிடமாகவும் குறித்த காணப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாகவும் மீன்சந்தை தொடர்பாகவும் உரிய கவனம் செலுத்துமாறும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (2)

## வேலைவாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை

01. Billing Staff - யாழ்ப்பாணம் (பெண்)

தகைமைகள்
- A/L சித்தி.
- ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
- யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. Packing Staff - கொழும்பு (ஆண்)

தகைமைகள்
- கொழும்பில் பணியாற்றுவதற்கான தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.
- வயது எல்லை 18 - 30
- உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்பு:- 077 427 5311, 076 253 4275

(சி-3489)

## V CHILLI POWDER மிளகாய்த்தூள்

சுத்தமான முறையில் தரமாக யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த்தூள்.

சைவ, அசைவ உணவுகளுக்கு ஏற்றபடி தயாரித்துக் கொடுக்கப்படும்.

**Home Delivery Available**

வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் பிரத்தியேகமாக பொதி செய்தும் கொடுக்கப்படும்.

விதானை வளவு
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

V Darling Sweets
TP No:- 077 944 7977, 077 508 4685

## மகாதேவ ஆச்சிரமம்

Regd.No.HA/04/KL02 of 25.11.1980

ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொ.இல:021 324 3443, 077 459 4283, 077 431 9281

இலங்கை வங்கி S/AC.82791221 கிளிநொச்சி.

**ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் சமாதித் திருக்கோயில் திருப்பணி.**



மெய்யன்பர்களே!

சற்குருநாதனின் சமாதித்திருக்கோயில் 25ஆனி 2018 இல் அடிக்கல் நாட்டப்பட்டு, வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றது.சற்குருநாதனின் முதலாம் ஆண்டு குருபூசைக்கு முன்னர் கும்பாபிஷேக நிகழ்வை நடத்த தீர்மானித்துள்ளோம். நிதிவளம் போதாமையால் தங்கள் வசம் நிதிப் பங்களிப்பை நாடியுள்ளோம். தங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பை, இலங்கை வங்கி ஊடாக அல்லது நேரில் செலுத்தி சற்குருநாதன் திருப்பணியை நிறைவு செய்வீர்களாக.

குருபாதம் பணிந்து குறைகளை போக்குவோம்.

சற்குருநாதன் பணியில்
அறங்காவலர்,
நிர்வாக உறுப்பினர்கள்.

(சி-3364)

## கிருஷ்ணா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
## KRISHNA SIDDHA AYURVEDA VAIDYASALAI

DR.T.KRISHANAPAHAVAN GOVT REGD.NO:10329

**சித்த ஆயுர்வேத வைத்தியம்**

**குழந்தைப் பாக்கியம் இயற்கையாகப் பெற**
திருமணமாகிப் பல வருடங்களாகியும் குழந்தை கிடைக்காத பெண்களுக்கு மாதவிலக்கை ஒழுங்குபடுத்தி கர்ப்பப்பையிலுள்ள கிருமிகளை, நீர்க்கட்டிகளை அகற்றி குழந்தை உருவாக வகை செய்யப்படும்.

**இராஜவசீகரணலேகியம்**
நரப்புப் பலவீனமுள்ள ஆண்,பெண்களுக்கு சக்தியைக் கொடுத்து திருப்திகரமான தாம்பத்தியத்தை அனுபவிக்க உதவும்.இந்திரியத்தில் உயிர் அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

**கிருஷ்ணா நேத்திர சிந்தாமணித் தைலம்**
பெண்களுக்கு நீண்ட அழகிய கூந்தலைத் தருவதோடு சொடுகு, மயிர் கொட்டுதலையும் கட்டுப்படுத்தி, கண்களுக்கு கூர்மையான பார்வையும் படிக்கின்ற மாணவர்களுக்கு நல்ல ஞாபகசக்தியையும் தரும். மொட்டைத்தலை இளைஞர்களும் பாவித்துப் பலன் பெறலாம்.

புற்றுநோய், தோல் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்த சுத்திச் சூரணம், இதய நோய், சளி ரோகங்கள், நீரிழிவு, மூட்டு வாத வலிகள், மூலநோய், அசுத்த நீரினால் ஊதிப் பெருத்த உடலைக் குறைக்கவும், மெல்லிய தோற்றமுள்ள உடலை அழகான தோற்றத்தைப் பெறவும், சிறப்பு வைத்தியங்கள் உண்டு. நீண்டகால நோய்களால் அவதிப்படுபவர்கள் தங்கள் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொண்டால் பலன் பார்த்து பரிகாரம் சொல்லப்படும்.

**குறிப்பு: தூர இருந்து வருபவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொண்டு வரவும்.** (5396)

இல.11, 3 ஆம் குறுக்குத் தெரு,
கண்டி றோட், வவுனியா தொ.இல.: 077 972 3369

## விற்பனைக்கு

வவுனியா, மதவு வைத்த குளத்தில் 5 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்கு.

077 563 1415

(சி-3519)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## விற்பனைக்கு

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள கரைச்சிக் குடியிருப்பில் 6 1/2 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

0774861948

(சி-3536)

## வேலையாள் தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டவேல்ல செய்வதற்கு ஆடு, மாடு வளர்ப்பில் அனுபவமுள்ளவர்கள் தேவை. குடும்பமாக தங்குவதற்கு வசதியுண்டு. சம்பளம் 30,000/-, சாப்பாடு, தங்குமிடம் உண்டு.

தொடர்புகளுக்கு :- 077 168 1697, 076 620 5322

## மணி விழா வாழ்த்து

கணிதம் - இரா.அருட்செல்வம் ஆசிரியர்



கணித பாடத்தினை கனிவுடன் கற்பித்தவர்- எங்கள்
கணித ஆசான் இரா.அருட்செல்வம் ஆசிரியர்
கணித பாடத்தினை நேசிக்க செய்தவர்-எங்கள்
கண்ணெதிரில் உலாவரும் -இறை அருட்செல்வம்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்- இவர் எங்கள்
எண்ணத்தில் உயிர்வாழும்- இரா.அருட்செல்வம்
இரவு-பகல் பாராது கற்பிக்கின்றவர்- எங்கள்
இதயத்தாமரையில் வீற்றிருக்கும்-இரா.அருட்செல்வம் ஆசிரியர்

congratulations

என்றும் அன்புள்ள மாணவன்
குணராஜா கந்தரூபன்
கணிதபாட ஆசிரியர் (யா/யூனியன் கல்லூரி,தெல்லிப்பழை)

(5399)

## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:15 சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/330 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ Demo<br>தொ.இ: G/529 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 55 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: B/346 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 59 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/547 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 9 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/5841 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 74 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Diploma<br>தொ.இ: G/563 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 75 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்<br>தொ.இ: B/7179 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/2206 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

# முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னகொட கைதாக வாய்ப்பு

(கொழும்பு)

**நாட்டில் போர் நடைபெற்ற காலத்தில் 11 இளைஞர்கள், கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பான வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்தால் முன்னாள் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவை கைதுசெய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கொழும்பு மற்றும் அதன் புறநகரப் பகுதிகளிலிருந்து 11 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் வழங்கு விசாரணைகளில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகி இருந்த ஹெட்டியாராச்சி முதியன்சலாகே சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி என்ற முன்னாள் கடற்படை அதிகாரியை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் அண்மையில் கைதுசெய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் பல முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா, ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்ட சம்பவம் குறித்து முன்னாள் ஜனாதிபதியிடம் வாக்குமூலம் பெறுவது சம்பந்தமான ஆவணத்தை முன்னாள் ஜனாதிபதியிடம் கையளிக்கச் சென்றவேளையில், கொழும்பு கோட்டை லோட்டஸ் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த சந்தேக நபரை கைதுசெய்தது முக்கியமான சம்பவம் என கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்ன நீதிமன்றத்தில் கூறியிருந்தார்.

நீதிமன்றத்தில் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா சமர்ப்பித்த பீ. அறிக்கையில், வேறு பெயர்களில் உலாவும் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு முன்னாள் கடற்படை அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

கடற்படையினர் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளவர்கள் இந்த இரண்டு சந்தேக நபர்களா? என்பதைக் கண்டறிய விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பீ. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

11 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான தோன் நிலந்த சம்பத் முனசிங்க என்ற நபருக்கு எதிராக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, கடந்த 2009 ஆம் ஆண்டு மே 28 ஆம் திகதி



அன்றைய கொழும்பு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

தோன் நிலந்த சம்பத் முனசிங்க, கரன்னகொடவின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றியவர்.

11 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் மற்றும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களை முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னகொட அறிந்திருந்தும், தனிப்பட்ட காரணம் ஒன்றுக்காக சம்பத் முனசிங்கவை இலக்கு வைத்து மாத்திரம் முறைப்பாடு செய்தமை குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பல தகவல்களை உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி 18 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இது சம்பந்தமாக விரிவான அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

இதனிடையே தற்போது முப்படைகளின் தலைமை அதிகாரியாக கடமையாற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி ரவிந்திர விஜேகுணரத்ன சம்பந்தமான தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் வெளிநாடு தப்பிச் செல்ல உதவினார் எனறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விஜேகுணரத்ன மீது குற்றம் சுமத்தியுள்ளது.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டுகாணாமல்ஆக்கப்பட்ட சம்பவம்தொடர்பாககைது செய்யப்பட்டிருந்த கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க உள்ளிட்ட சந்தேக நபர்கள் பிணையில் விடுவிடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சந்திப்பு



(டில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை அமைச்சர் லைக்ஷ்மன் கிரியெல்ல சந்தித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் இறுதிக் கிரியையில், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையில் அவர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தமது டுவிட்டர் தளத்தில் இந்தத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது, இலங்கையின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பங்களிப்பை இரு நாடுகளின் அமைச்சர்களும் நினைவுகூர்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த சந்திப்பு குறித்த மேலதிக தகவல் எதனையும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் வெளியிடவில்லை. (இ-7)

# எவ்வித தகுதி தராதரம் பாராது குற்றவாளிகளுக்குத் தண்டனை

## ஜோன் அமரதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தகுதி தராதரம் பாராது குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி சம்பந்தமாக சட்டத்தை அமுல்படுத்த முடியுமா? என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே வேட்பாளராக நிறுத்தத் தகுதியானவர் எனவும், அவரைத் தவிர தகுதியான நபர்கள் எவருமில்லை எனவும் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். (இ-7)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.08 19

❖1895-கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.

❖1919-ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஆப்கானிஸ்தான் முழுமையான விடுதலை அடைந்தது.

❖1946-கல்கத்தாவில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் 3000 பேர் கொல்லப்பட்டனர்.

❖1953-பனிப்போர்: அமெரிக்காவின் சிஐஏயின் உதவியுடன் ஈரானின் முகமது மொசாடெக்கின் அரசு கவிழ்க்கப்பட்டு ஷா முகமது ரேசா பாலாவி தலைமையில் அரசு உருவாக்கப்பட்டது.

❖2002 - உருசியாவின் எம்.ஐ-26 ரக உலங்கு வானூர்தி செச்சினியத் தீவிரவாதிகளின் ஏவுகணையால் தாக்கப்பட்டதில் 118 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

❖1869-ஐசாக் தம்பையா, இலங்கைத் தமிழ்க் கல்விமான், இறையியலாளர் (இ. 1941)

❖1887-சத்தியமூர்த்தி, இந்திய அரசியல்வாதி(இ. 1943)

❖1895-செ. சுந்தரலிங்கம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1985)

❖1907-சுவரண் சிங், இந்திய அரசியல்வாதி (இ. 1994)

❖1918-சங்கர் தயாள் சர்மா, இந்தியாவின் 9ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1999)

❖1929-ச. அகத்தியலிங்கம், தமிழக மொழியியலாளர் (இ. 2008)

❖1950-சுதா மூர்த்தி, இந்திய சமூக சேவையாளர், எழுத்தாளர்

❖1953-ஆ. பு. வள்ளிநாயகம், வரலாற்று வரைவாளர், எழுத்தாளர் (இ. 2007)

❖1967-சத்ய நாடெல்லா, இந்திய-அமெரிக்கத் தொழிலதிபர்

❖1977-சுவலட்சுமி, வங்காளத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

❖1927-சுவாமி சாரதானந்தர், சுவாமி இராமகிருட்டிணரின் நேரடிச் சீடர் (பி. 1865)

❖1982-வைணு பாப்பு, இந்திய வானியலாளர் (பி. 1927)

❖2013-பெரியார்தாசன், தமிழகப் பேச்சாளர், பேராசிரியர்

❖2014-அடையார் கே. லட்சுமணன், பரதநாட்டியக் கலைஞர், நடன ஆசிரியர் (பி. 1933)

❖2014-ஜேம்ஸ் ஃபோலி, அமெரிக்க புகைப்படக் கலைஞர் (பி. 1973)

### சிறப்பு நாள்

❖ஆகத்து புரட்சி நாள் (வியட்நாம்)

❖விடுதலை நாள் (ஆப்கானித்தான், பிரித்தானியாவிடம் இருந்து 1919)

❖உலகப் புகைப்பட நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 70 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 280 | 180 | 180 | 200 | 160 |
| தக்காளி | 100 | 80 | 60 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 150 | 140 | 70 | 160 | 160 |
| கரட் | 200 | 380 | 220 | 480 | 500 |
| பூசணி | 80 | 60 | 55 | 100 | 60 |
| புடோல் | 50 | 60 | 40 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 90 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 130 | 180 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 60 | 70 | 55 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 80 | 140 | 160 |
| பீற்றூட் | 150 | 80 | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 160 | 180 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 80 | 55 | 120 | 30 |
| போஞ்சி | 200 | 180 | 220 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 50 | 100 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 30 | 40 | 45 | 60 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 140 | — | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 90 | 160 | 100 |
| முள்ளங்கி | 50 | 50 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 25 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 120 | 80 | 30 |

# தொடரும் மோசமான வானிலையால் நாடளாவிய ரீதியில் 700 வீடுகள் சேதம்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 12 மாவட்டங்களில் வீசிய கடும் காற்றால் சுமார் 700 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு தினங்களிலேயே இச்சேதங்கள் பதிவாகியிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

காற்றின் காரணமாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நுவரெலியா, கண்டி, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி, புத்தளம், கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காற்றின் வேகம் தொடர்ந்தும் அதிகரித்து காணப்படுவதாக வானிலை அவதான நிலையத்தை மேற்கோள்காட்டி, அனர்த்த முகாமைத்துவ நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், மத்திய, வட-மேற்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களில் 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் வழியாக கொழும்பிலிருந்து காங்கேசன்துறை மற்றும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடல் காற்றின் காரணமாக கொந்தளிப்பாக இருக்கும் என்பதால் கப்பலோட்டிகளையும், மீனவர்களையும் அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மலையகத்தில் ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற மண்சரிவை தொடர்ந்து பாதுகாப்பு எச்சரிக்கை காரணமாக குறித்த பகுதியூடான வீதி மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வறுமையிலிருந்து மீட்டெடுக்க

# கிழக்கில் 30 கிராமங்களில் 300 மில்லியன் ரூபா முதலீடு



(திருமலை)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவிற்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. திருகோணமலையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தினுடைய அபிவிருத்தி தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இதன்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆளுநர் தெளிவுபடுத்தியதாகவும் இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்ததாகவும் குறித்த சந்திப்பின் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

651 தொண்டராசிரியர்களுடைய பெயர்ப் பட்டியல் சிபாரிசுடன் மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தன்னுடைய பதவிக்காலத்தினுள் கிழக்கு மாகாணத்தில் 1700 பட்டதாரிகளுக்கும் 351 டிப்ளோமாதாரர்களுக்கும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 10ஆம் திகதி கந்தளாயில் ஜனாதிபதி தலைமையில் 159 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

சுகாதாரத்துறை உள்ளூராட்சி நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் விவசாய அமைச்சில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப தற்போது நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வறுமைக்குட்பட்ட கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கிழக்கு மாகாணத்தில் 30 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்காக 300 மில்லியன் நிதி முதலீடு செய்யப்படவுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் விவசாய அபிவிருத்திக்குத் தேவையான வளங்கள், வீதி அபிவிருத்தி அரச நிர்வாகத்தில் கிழக்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல் உட்பட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் சகல மக்களுக்கும் சமத்துவமான அபிவிருத்தியை மேற்கொள்வது தமது நோக்கமாக அமைவதாக கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார். (இ-7)

## "பழிவாங்கியே மூன்றாண்டுகளைப் பூர்த்தி செய்த எமனாட்சி"

# மகிந்த ஊடகவியலாளர்களின் நண்பரே அன்றி பகைவர் அல்ல

## பிரசன்ன எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர்களின் நண்பரே அன்றி பகைவர் அல்ல எனவும், இது அனைவரும் ஏற்றுக்கொண்ட விடயம் எனவும் கூட்டு எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்திச் சென்று தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியிடம் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வது முற்றிலும் அரசியல் ரீதியான பழிவாங்கல் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக மக்களுக்காக எதனையும் செய்ய முடியாத இந்த எமனாட்சி அரசாங்கம், முன்னாள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரசியல் ரீதியாகப் பழிவாங்கியே தனது மூன்றாவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்க, நெருங்க மைத்திரி மற்றும் ரணில் ஆகியோரின் கால்கள் நடுங்கத் தொடங்கியுள்ளன.

எவ்வாறான அரசியல் ஒடுக்குமுறைகளை மேற்கொண்டாலும் இன்னும் ஒரு வருடத்திற்குள் மகிந்த தலைமையில் மக்கள் சார்பு அரசாங்கம் ஆட்சிக்கு வருவதை எவராலும் தடுக்க முடியாது எனவும் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரச சேவையில் நிலவுகின்ற சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு வேண்டும்

(கொழும்பு)

புதிய சம்பள ஆணைக் குழுவால் அரச சேவையில் தற்போது நிலவுகின்ற சம்பள முரண்பாடுகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய சம்பள ஆணைக் குழுவின் நோக்கம் மற்றும் இலக்கை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# அனைவரும் ஒன்றாக வாழலாம் ஆனால் சிங்களவர்களுக்கே நாடு

## மேர்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

பண்டையகால மன்னர்கள் செய்தது போல், சிங்களவர்களின் அபிமானத்தை தக்க வைத்துக் கொண்டு சகல இனங்களும் மதங்களும் ஒன்றோடு ஒன்றாக கைகோர்த்துக்கொள்ள வேண்டும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது வீட்டில் நேற்று முந்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பௌத்த மதம் பாதுகாக்கப்பட்டால்மட்டுமே அனைவரும் பாதுகாக்கப்படுவார்கள் என்று கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறினார்.

புத்த பகவானின் போதனைகளின்படி நாம் எந்த மதத்திற்கும், இனத்திற்கும் எதிராகச் செயற்பட முடியாது.

எனினும் புலம்பெயர் தமிழர்களுக்கும் பிரபாகரனுக்கு தேவையானதையும் செய்ய முடியாது. நாம் அனைவரும் ஒன்றாக வாழும் மக்கள்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் மக்கள். ஆனால், நாட்டின் உரிமை சிங்களவர்களுக்கே இருக்கின்றது. அதனை எவராலும் இல்லாமல் செய்ய முடியாது.

சந்திரிகா அம்மையாரின் நல்லிணக்கம் என்பது என்ன, அவர்கள் வெளிநாடுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களிடம் பணத்தை பெறுகின்றனர். அந்தப் பணம் வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்படுகிறது.

அதில் வாழ்கின்றனர். அப்படியான நல்லிணக்கம் எமக்கு எதற்கு. நல்லிணக்கத்தை கோர வேண்டியது அவர்களே. நாங்கள் அல்ல.

நல்லிணக்கத்தை கோரி அவர்களிடம் சென்று ஏன் மண்டியிட வேண்டும். இலங்கையில் எவரும் எங்கும் வாழ முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

மைக்கேல் வேதநாயகம்



தோற்றம் 16.12.1942

மறைவு 19.08.2017



இல்லறம் செழிக்க இடைவிடாமல் உழைத்த உத்தமரே அப்பா
வாழ்ந்த நாட்களை வசந்தமாக்கி விட்டுச் சென்ற வாடாமலரே
உதிர்ந்தது நீங்கள் மட்டுமல்ல உடைந்தது எங்கள் இதயமும் தான்
வளர்பிறையாய் உம் குடும்பம் வளர
தேய்பிறையாய் தேய்ந்து போன தியாகச் சுடரே...!
எங்கள் உணர்வோடு கலந்த உறவே உங்கள் பிரிவின் நினைவால்
கனத்த இதயத்துடன் வாழ்கின்றோம். அதனால் உணர்வின் வலியை
எங்கள் கண்ணீரின் அஞ்சலியாக தருகின்றோம்.

இல. 09,
சாந்த நிலையம்,
உடுவில், சுன்னாகம்.

(5406)

தகவல்:
குடும்பத்தினர்
077 583 3788

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2018 - 16.09.2018

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

## இராஜயோகம் வருகின்றது!






விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசி நாதன் சூரியன் பலம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். சூரியபலம் நன்றாக இருக்கும் பொழுது காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். கெடுதல்கள் எல்லாம் விலகிஓடும். தீர்த்த யாத்திரை முதல் திருமண யோகம் வரை கைகூடும். உற்சாகம் ஊற்றெடுக்கும். தொழில் அற்புதமாக நடக்கும். அதிகமான இலாபம் வரும். விற்பனை செய்ய இடம் வைத்திருப்பவர்கள், அது விற்பனையாகி நீங்கள் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு இலாபம் வரப் போகிறது. பொன்னும் பொருளும் குவியப் போகிறது. எனவே மாதம் தொடங்கும் பொழுதே சூரியனுக்கும் அம்புலிக்கும் அஷ்ட லட்சுமிகளுக்கும் உரிய வழிபாடுகளைச் செய்யுங்கள்.

தனாதிபதியோடு ராகு இருப்பதால் வாய்ப்பிருக்கும் பொழுதெல்லாம் துர்க்கையை வழிபாடு செய்து துயரங்களை போக்கிக் கொள்ளுங்கள். பஞ்சம ஸ்தானத்தில் வீற்றிருக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகப் போகின்றார். அங்காரகனும் வக்கிர நிவர்த்தியாகப் போகிறார். இந்த இரண்டு நிகழ்வுகளும் இந்த மாதம் நடைபெறப் போவதால் வளர்ச்சி அதிகரிக்கும். வாங்கிய கடனைக் கொடுக்க வழி பிறக்கும். கொடுத்த கடன் வசூலாகும். இதுவரை பொருளாதாரப் பிரச்சினையை சந்தித்திருப்பீர்கள்.

### சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான், மாதத் தொடக்கத்தில் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். ஓகஸ்ட் 20ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். பஞ்சம ஸ்தானத்தில் சனி பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில், பிள்ளைகள் வழியில் வந்த பிரச்சினைகள் சுமுகமாகும். பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமாக பலமுறை பஞ்சாயத்து வைத்தும் முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது உரிய விதத்தில் பங்கு கிடைத்து உள்ளம் மகிழப் போகிறீர்கள். எதிரிகள் விலகுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரம் இது. மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு ஏற்பட்டு அகலும். சனி வக்கிர நிவர்த்தியான பிறகு திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, பெரிச்சிக்கோவில் போன்ற தலங்களுக்குச் சென்று சனி பகவானை வழிபடுங்கள்.

### புதனின் பெயர்ச்சிக் காலம்

இம்மாதம் புதனின் சாரத்தில் 3 விதமான மாற்றங்கள் நிகழ்கின்றது. முதலில் ஓகஸ்ட் 28 ஆம் திகதி உங்கள் இராசிக்குப் புதன் செல்கின்றார். பிறகு செப்டெம்பர் 3 ஆம் திகதி அஸ்தமனம் அடைகிறார். அதன்பிறகு செப்டெம்பர் 15ஆம் திகதி கன்னி இராசிக்குச் சென்று உச்சம் பெறுகிறார். சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கும்பொழுது புத ஆதித்ய யோகம் உருவாகிறது. யோகங்களில் இது ஒரு மிகச்சிறந்த யோகமாகும். குறிப்பாக குழந்தைகளின் கல்வி சம்பந்தமாகவும் கடல்தாண்டிச் சென்று பணிபுரிவது தொடர்பாகவும் எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசியல் பதவியில் உள்ளவர்களுக்கு அதிகார பதவியும் பொறுப்புகளும் வந்து சேரும். பணப்புழக்கம் நன்றாகவே இருக்கும்.

### சுக்கிர பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி துலாம் இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். அந்த வீடு அவருக்குச் சொந்த வீடாகும். அதுமட்டுமல்ல அங்குள்ள குருவோடு அவர் இணைகிறார். இந்த குரு-சுக்கிர சேர்க்கை உங்களைப் பொறுத்தவரை மிகுந்த யோகத்தை கொடுக்குமென்றே சொல்லலாம். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் கைகூடும். புகழ்மிக்கவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பிடிக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தொழில் வெற்றி நடைபோடும். கடைதிறப்பு விழா, கட்டடத் திறப்பு விழாக்களில் ஆர்வம் கூடும். தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி


உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதி பதியாகவும் யோகம் செய்யும் கிரகமாகவும் விளங்குபவர் செவ்வாய். அவர் வக்கிர நிவர்த்தியாகும் பொழுது நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். அந்த நிகழ்வு செப்டெம்பர் 6 ஆம் திகதி நிகழவிருக்கின்றது. எனவே அதன் பிறகு மாதக் கடைசி வரை மணியான நாட்கள் தான். சகோதர ஒற்றுமை பலப்படும். பூமி வாங்கும் யோகம் கைகூடும். வைத்திருக்கும் சொத்துகளை விற்பதில் தாமதம் ஏற்படுகின்றதே என்று கவலைப் பட்டவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாகவே அமையும்.

இம்மாதம் நவக்கிரகத்தில் உள்ள சூரியனை ஞாயிறு தோறும் வழிபடுவதோடு, விநாயகர் சதுர்த்தியன்று விக்னேஸ்வரர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் மாதமாகும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். சூரிய பலம் நன்றாக இருப்பதால் காரியத் தடை அகலும். கட்டடத் துறை, மருந்து, மரம், உணவுப் பொருட்கள் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிக இலாபம் காண்பர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவார்கள். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும். பிள்ளைகளின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார மேம்பாடு அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குரு-சந்திர யோகம், புத ஆதித்ய யோகம் போன்றவை இடம் பெறும் இம்மாதத்தில், பெற்றோர் வழியிலும் மற்றோர் வழியிலும் உங்களுக்கு கூடுதலாகவே ஆதரவு கிடைக்கும். ஐங்கரன் வழிபாடு அமைதியை வழங்கும்.

## விரயங்கள் குறைய விழிப்பு தேவை!






விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் சுக்கிரன் நீச்சம் பெறுகிறார். தனாதிபதியாகவும் 9 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படலாம். வீண் விரயங்களில் இருந்து விடுபட எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. விரயாதிபதி சூரியன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.

இதற்கிடையில் மாதத் தொடக்கத்தில் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருக்கிறது. ஓகஸ்ட் 20 ஆம் திகதிக்கு மேல் அது வலுவடைகிறது. எனவே எவ்வளவுதான் திசாபுத்தி உங்களுக்கு வலுவாக இருந்தாலும், கோச்சாரம் அவ்வளவு சிறப்பாக இல்லை. உங்கள் இராசிநாதன் மட்டும் இலாப ஸ்தானத்தில் ராகுவோடு இணைந்திருக்கிறார். எனவே எதிர்பார்ப்புகள் ஓரளவுதான் நடைபெறும்.

பலமிழந்த கிரகங்களுக்குரிய திசை உங்களுக்கு நடைபெறுமேயானால் பலவித வழிகளிலும் உங்களுக்கு துயரங்களே வந்து ஆட்கொள்ளும். எனவே இதுபோன்ற காலங்களில் தொழில் சம்பந்தமான முடிவெடுத்தாலும் சரி. குடும்ப முன்னேற்றம் கருதி முடிவு எடுத்தாலும் சரி அருகிலிருக்கும் பெரியவர்களையோ அல்லது குடும்ப உறுப்பினர்களையோ கலந்து ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது. பழைய உறவுகள் உங்களை விட்டு விலகலாம். புதிய உறவுகள் உங்களிடம் வந்து சேரும்.

பட்டங்களும் விருதுகளும் பெறுவதற்காக படிக்கும் நிலையில் இருப்பவர்களுக்கு திட்டங்கள் திசைமாறிப் போகும். கடன் சுமையில் தத்தளிக்காமல் இருக்க கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பது உத்தமம். அர்த்தாஷ்டமச் சனிக்கு பரிகாரமாக வடக்கு நோக்கிய ஆனைமுகப்பெருமானையும் விஸ்வரூப ஆஞ்சநேயரையும் வழிபட்டு வருவது நல்லது. மேலும் ஆவணி சதுர்த்தியில் விநாயகரை வழிபட்டால் சாதகமான பலன் நடைபெறும்.

### சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் இதுவரை வக்கிர இயக்கத்தில் இருந்தாலும் நன்மைகளை ஓரளவேனும் வழங்கியிருப்பார். ஆனால் இம்மாதம் ஓகஸ்ட் 20ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். அர்த்தாஷ்டமச் சனி பலம் பெறுவதால் அதிக விரயங்கள் ஏற்படலாம். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. உத்தியோகம், தொழிலில் வேலைப்பளு கூடும். கல்விப் பணியை தொடர முயற்சி செய்தவர்களுக்கு, எதிர்பார்த்த படிப்புக் கிடைக்காமல் போகலாம். குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். உற்றார், உறவினர்களின் பிரியம் குறையலாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வதே நல்லது.

### புதனின் பெயர்ச்சிக் காலம்

ஓகஸ்ட் 28ஆம் திகதி உங்கள் இராசி நாதன் புதன் சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதன்பிறகு செப்டெம்பர் 3ஆம் திகதி அஸ்தமனம் அடைகின்றார். செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசிக்குச் சென்று உச்சம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோசம் பெற்ற கிரகம் புதன் என்பதால், இந்த மூன்று நிலைகளிலும் முன்னேற்றத்தையே வாரி வழங்குவார். குறிப்பாக ஆரோக்கியத் தொல்லை அகலும். ஆதாயம் கூடுதலாகக் கிடைக்கும். வெளிநாட்டு யோகம் விரும்பும் விதத்தில் அமையும். தீர்த்த யாத்திரைகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். தொல்லை கொடுத்து வந்த தூரத்து உறவினர்கள் இனி நல்லவர்களாக மாறுவர்.

### சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்

ஓகஸ்ட் 28ஆம் திகதி உங்கள் இராசிக்குத் தனாதிபதியாகவும் பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் தனது சொந்த வீடான துலாம் இராசிக்குள் அடியெடுத்து வைக்கிறார். எனவே ஓகஸ்ட் 28ஆம் திகதிக்கு மேல் அற்புதமான பலன்கள் அரங்கேறப் போகிறன்றன. மங்கல ஓசை மனையில் கேட்கும். தங்கு தடைகள் விலகும். பண நெருக்கடி அகன்று கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி

செப்டெம்பர் 6ஆம் திகதி செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. 3, 8இற்கு அதிபதி பலம்பெறுவதால் முன்னோர் சொத்துகளில் முறையான பங்கீடுகள் கிடைக்காது. உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலகலாம். கடன் சுமை கூடிக் கொண்டே செல்லும். இடம், பூமி விற்பனையில் சில சிக்கல்கள் ஏற்படலாம். பத்திரப் பதிவில் கவனம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு விருப்பமில்லாத இடங்களுக்கு மாறுதல் கிடைக்கும். இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப் பெருமானை வழிபடுவதோடு, சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயரை வழிபடுவது அனுகூலம் தரும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!


எண்ணங்கள் நிறைவேறுவதில் எண்ணற்ற தடைகள் ஏற்படும் மாதம் இது. வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமே விரும்பும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும். பணிபுரியும் பெண்களுக்கு பக்கத்தில் இருப்பவர்களின் அனுசரிப்பு குறையும். வீண் வம்பு வழக்குகளில் சிக்காமல் இருப்பது புத்திசாலித்தனம். பணநெருக்கடி அதிகரிக்கும். விரயங்கள் மேலோங்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக்கொள்வது நல்லது. தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. சகோதரர்களில் ஒருசிலர் மட்டுமே உங்களோடு உறவாட முன்வருவர். எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்யும் சூழ்நிலை உருவாகும். மருத்துவச்செலவு உண்டு. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். விநாயகரையும் குருவையும் வழிபாடு செய்வதன் மூலம் மகத்தான வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

# ராஜீவ் காந்தியால் உயிர் பிழைத்தேன்

## வாஜ்பாய் வெளிப்படுத்தல்





(டில்லி)

தான் உயிரோடு இருப்பதற்கு ராஜீவ்காந்திதான் காரணம் என்று வாஜ்பாய் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கட்சி வேறுபாடு இல்லாமல் அனைத்துத் தலைவர்களிடமும் அன்பாக பழகியதற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகள் உள்ளன. வேறு கட்சித் தலைவர்களாக இருந்தாலும் அவர்கள் செய்த உதவிகளை வாஜ்பாய் ஒரு போதும் மறந்தது இல்லை.

அவரது சுயசரிதை புத்தகமான "த அன்டோடு வாஜ்பாய்' என்ற புத்தகத்தில் அவர் தனக்கு உதவி செய்த மறக்க முடியாத தலைவர்களை பட்டியலிட்டுள்ளார். அதில் ராஜீவ் காந்திக்கு முதலிடம் கொடுத்துள்ளார்.

நான் உயிரோடு இருப்பதற்கு ராஜீவ்காந்திதான் காரணம் என்று ஒளிவுமறைவு இல்லாமல் கூறியுள்ளார். ராஜீவ் காந்தியை புகழ்ந்து அந்த புத்தகத்தில் வாஜ்பாய் கூறியிருப்பதாவது,

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த சமயத்தில் எனக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. என்னைப் பரிசோதித்த வைத்தியர்கள் சிறுநீரகப் பாதிப்பு உருவாகி இருப்பதாகத் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் சிகிச்சை பெற்றால்தான் அந்த சிறுநீரக பிரச்சினையை முழுமையாக தீர்க்க முடியும் என்றும் வைத்தியர்கள் கூறினார்கள். நான் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் காலை பிரதமர் வீட்டிலிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ராஜீவ் காந்தி பேசினார். அவர் என்னிடம் இந்தியா சார்பில் நியூயோர்க் சென்று ஐ.நா. சபை கூட்டத்தில் பங்கேற்க இருக்கிறேன். என்னுடன் அரசியல் கட்சிகள், அதிகாரிகள் குழுவும் வரவுள்ளது. நான் அந்தக் குழுவில் உங்களது பெயரையும் சேர்த்து இருக்கிறேன்.

நீங்கள் என்னுடன் நியூயோர்க் வாருங்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அங்குள்ள வைத்தியசாலையில் சேர்ந்து உங்களது சிறுநீரகப் பிரச்சினைக்கு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுங்கள் என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த குழுவில் இடம்பெற்று நானும் சென்றேன். ஐ.நா. கூட்டத்தில் பங்கேற்ற பிறகு நியூயோர்க்கில் உள்ள வைத்தியசாலையில் சேர்ந்து சிகிச்சை பெற்றேன். அப்போதும் ராஜீவ் காந்தி என்னிடம் தொலைபேசியில் பேசினார்.

"நீங்கள் நன்றாக முழுமையாக குணம் அடைந்த பிறகுதான் இந்தியாவுக்குத் திரும்பி வரவேண்டும். நல்ல முறையில் சிகிச்சை பெற்று வாருங்கள்" என்றார். அவர் உதவியால் நான் பெற்ற சிகிச்சைதான் இன்று என்னை உயிரோடு வைத்திருக்கிறது.

இவ்வாறு வாஜ்பாய் மறக்காமல் ராஜீவ்காந்திக்கு நன்றி தெரிவித்து புத்தகத்தில் எழுதியுள்ளார். (இ-7)

# நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை தெய்வீக இசையரங்கு நடைபெறுகிறது.

இதில் இன்று திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் நெறியாள்கையில் குழு இசை இடம்பெறும். பாட்டு இ.பிரபு, கு.அனுசன், வை.பிரதீபன், பா.செந்தூரன், செ.பாலமுருகன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம்- ம.லோகேந்திரன், கடம் அ.செல்வரட்ணம் ஆகியோர் வழங்குவர்.

**இசைக்கச்சேரி**

பாட்டு- சந்திரிக்கா ரவிக்குமார், வயலின்- கே.வேலதீபன், மிருதங்கம்- வ.ரமணா, முகர்சிங்- சி.செந்தூரன் ஆகியோர் வழங்குவர். (இ

# 'சைவமும் சித்த மருத்துவமும்' விசேட சொற்பொழிவு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிகோவில் மஹோற்சவத்தையொட்டி கதிர் தொலைக் காட்சியின் ஏற்பாட்டில் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் தினமும் மாலை 4.30 மணியிலிருந்து ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

இதில் இன்று "சைவமும் சித்த மருத்துவமும்" எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி ஜெ.ஜெயலன் சொற்பொழிவாற்றுவார். (இ

# மகிந்தவின் குடும்ப ஆட்சி மீள வந்துவிடக்கூடாது

## அசாத் சாலி வலியுறுத்து



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியோ அல்லது மகிந்த குடும்ப ஆட்சியோ மீண்டும் இலங்கையில் வந்துவிடக் கூடாது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கடந்த 11 வருடங்களாக சிறுபான்மையின மக்களான தமிழர்களும் முஸ்லிம்களும் அனுபவித்த துன்பங்களை மக்கள் மறக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைந்த கூட்டணியினையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக, மக்கள் கடந்த காலங்களில் கண்டு அஞ்சிய வெள்ளை வான் கலாசாரம், கடத்தல்கள் என்பன இல்லாமல் போயுள்ளன. ஊடக சுதந்திரம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், மகிந்தவின் ஆட்சி இலங்கையில் மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாதென அசாத் சாலி மேலும் தெரிவித்தார்.(இ-7)

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# பேரறிவாளன் மனு மீதான விசாரணை ஒக்டோபர் மாதத்துக்கு ஒத்திவைப்பு



(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் தரப்பு விரிவான வாதங்களை முன்வைக்க காலஅவகாசம் கோரிய மனு மீதான விசாரணையை ஒக்டோபர் மாதத்துக்கு ஒத்திவைத்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக அமைக்கப்பட்ட பல்நோக்கு சிறப்பு விசாரணை முகாமை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் வரை தனக்கான சிறைத் தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று பேரறிவாளன் தரப்பில் உச்ச நீதிமன்றில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு உச்ச நீதிமன்றில் நீதிபதிகள் ரஞ்ஜன் கோகாய், நவீன் சின்கா, கே.எம்.ஜோசப் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது, பேரறிவாளன் தரப்பில் சட்டத்தரணிகள் கோபால் சங்கரநாராயணன், பிரபு ராமசுப்பிரமணியன் ஆகியோர் ஆஜராகி ராஜீவ் காந்தியை கொல்வதற்கு பயன்படுத்தியதாகக் கூறப்படும் வெடிகுண்டு பற்றிய விசாரணை அறிக்கையின் நகல் ஒன்றை 'சீல்' வைக்கப்பட்ட உறையில் வைத்து சி.பி.ஐ. தரப்பில் உச்ச நீதிமன்றில் ஏற்கனவே தாக்கல் செய்திருப்பதாகவும் இந்த மனுவின் மீது விரிவான விசாரணைக்கும், தங்கள் தரப்பில் விரிவான வாதங்களை முன்வைக்க அவகாசம் வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் இந்த மனுவை ஒக்டோபர் மாதத்தில் விரிவான விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக உத்தரவிட்டனர். (இ-7)




## தமிழ்க் கடவுளே நீ வாழ்க

அலங்காரக் கந்தனே
ஆனைமுகன் தம்பியே
இன்னல்களைத் தொலை தூரம் விரட்டுபவனே
ஈன்ற தாயைப் போல எம்மைக் காப்பவனே
உலகையெல்லாம் ஆள்பவனே
ஊர்தோறும் வீற்றிருந்து அருள்பவனே
எமக்கு என்றும் துணையாய் இருப்பவனே
ஏணி போல எம்மை வாழ்வில் உயர்த்துபவனே
ஐயமின்றி வாழ வழி காட்டுபவனே
ஒன்பது கோள்களும் வழிபடும் இறைவனே
ஓடிடும் துன்பங்கள் உன் பார்வை பட்டாலே
ஔவைக்குப் பழம் தந்த தமிழ்க் கடவுளே
போற்றி! போற்றி!!

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## கணபதிக்கு இளையவன்

கணபதிக்கு இளையவனே
கார்த்திகேயன்
காலமெல்லாம் உன்னைச் சரணடைந்தோம்
கற்பூர வாசனையை முகர்ந்திடுவோம்
கல் மனதை கசிய வைப்பாய் குமரேசா
கண்ணீரினால் துன்பமெல்லாம்
கரைய வைப்பாய்
கலங்கரை விளக்காய்
ஒளிர்ந்திடுவாய் வேலவா
காலத்தின் கோலம் எல்லாம் நீயறிவாய்
கார்காலத்தில் மயிலாட்டம் நாமறிவோம்

பா.கலாதேவி
சண்டிலிப்பாய்

## கலங்கரை விளக்காய் நிற்பான்

நல்லையிலே வீற்றிருக்கும்
எங்கள் கந்தசுவாமி
நாள்தோறும் நாம் காண
வீதிவலம் வருவான்
சொல் எடுத்துக் கவி புனைந்து
தூய தமிழ் மணம் கமழ
புகழ் மாலை சூட்டி
தோத்தரித்து வரவேற்போம்
வேல் கையில் ஏந்தி
வேடர் குல வள்ளியும்
தேவர் குல நங்கை தேவயானையும்
இருமருங்கும் இணைந்திருக்க
எழிலாக வலம் வருவான்
கால் பற்றிச் சரணடைந்து
கதி அவனே என்றிருந்தால்
கவலை கொண்ட எம் இனத்திற்கு
கலங்கரை விளக்காய் நின்று
காலமெல்லாம் காத்திடுவான்.

ஏழாலை மு.இந்திராணி


## நல்லைக் குமரப் "பா"

எண்ணெட் டாகும் கலைகளிலும்
எழுதுங் கவிதை யூற்றினிலும்
பண்பட் டவனே உறைந்திடுவான்
பலவாய்க் கருத்தில் நிறைந்திடுவான்
புண்பட் டெவரும் நெஞ்சினிலே
பூசித் தவனை நேசித்தால்
கண்பட் டுடனே முன்வந்து
காக்கும் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

## சிறந்த படங்களை காட்சிப்படுத்துங்கள்

# நல்ல சிந்தனைகளைத் தூண்டக்கூடிய பாடல்களை பேருந்துகளில் ஒலிபரப்புங்கள்



## வடக்கு முதலமைச்சர் வேண்டுகோள்

(வவுனியா)

பேருந்துகளில் சினிமாப்பாடல்களை ஒலிபரப்பும் போதும் சினிமாப்படங்களை காட்சிப்படுத்தும் போதும் மக்களுக்கு நல்ல சிந்தனைக்களை ஏற்படுத்தக்கூடிய அறிவு சார்ந்த பாடல்களாக அமைந்திருக்க வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். மாறாக இரட்டை அர்த்தம் கொண்ட ஆபாச சிந்தனைகளைத் தூண்டக் கூடிய பாலியல் கலாசாரங்களையும் பாலியல் சிந்தனைகளையும் தூண்டக்கூடிய பாடல்களை ஒலிபரப்புவதை அனைத்து பேருந்து உரிமையாளர் சங்கங்களும் ஒன்றாக இணைந்து தடுக்க வேண்டும். அதேபோன்று வாள்வெட்டுக் கலாசாரங்கள், ரவுடித்தனமான படங்களைத் தவிர்த்து கருத்தாழமிக்க நகைச்சுவைகளுடன் கூடிய சிறந்த படங்களை காட்சிப்படுத்துவதையே மக்கள் விரும்புகின்றார்கள் என வடக்கு மாகாண சபை முலதமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையளார் சங்கத்தின் இருபதாவது ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் வவுனியா கொரவப்பொத்தானை வீதியிலுள்ள றோயல் கார்டனில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில், வடமாகாணத்தில் தற்போது ஏறத்தாழ ஆயிரம் பிரத்தியேகப் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தபபட் .டுள்ளதுடன் மாவட்ட ரீதியாக சங்கங்களை அமைத்து இலங்கை போக்குவரத்துச்சபையுடன் இணைந்த நேரக் கட்டுப்பாடுகளுக்கு அமைய சேவைகளை ஆற்றிவருவது போற்றுதற்குரியது.

பொது மக்களுடன் தொடர்புடைய போக்குவரத்துச் சேவையை மிக நிதானமாக ஒழுக்கக்கட்டுப்பாடுகளுடன் விபத்துக்கள் பல ஏற்படாத வகையில் நீங்கள் சிறப்பாக முன்னெடுத்து வருவதை இத் தருணத்தில் பாராட்டுகின்றேன்.

தனியார் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் அரச போக்குவரத்துச் சேவைகள் ஆகியவற்றின் சேவைகளுக்கான நேர அட்டவணை 60:40 என்றவகையில் தயாரிக்கப்பட்டபோதும் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்களில் இவ்வாறான நேர அட்டவணைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற போதும் எமது பகுதிகளில் இவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமை வருத்தத்திற்குரியது. இவ் விடயம் தொடர்பாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட வடமாகாண போக்குவரத்து ஆணைக் குழு இவ் விடயங்களை சீர தூக்கி ஆராய்ந்து பார்த்து இலங்கை போக்கு வரத்துச் சபையுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு நல்ல முடிவிற்கு விரைவில் வருவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

தற்போதைய பேருந்துகளில் புறப்படும் இடம், சேரும் இடம் இரண்டு இடங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் எங்கிருந்து புறப்பட்டு எங்கு செல்கின்றது என்பதை கண்டு பிடிப்பதற்கான வழிமுறைகள் என்னவென்று தெரியவில்லை. உதாரணமாக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்கின்ற பேருந்தில் வவுனியா-யாழ்ப்பாணம் என்ற பெயர்ப்பலகை காணப்படும். மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்கு செல்கின்ற போதும் அதே பெயர்ப் பலகையான வவுனியா-யாழ்ப்பாணம் என்கிற பெயர்ப் பலகையே காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இது மக்களுக்கு மயக்கத்தைத்தருவன. இது தொடர்பில் நீங்கள் சற்றுக் கவனம் எடுக்கவேண்டும்.


உங்கள் பேருந்துகளில் பயணிகளின் சௌகரியத்திற்காகவும், மகிழ்ச்சியான பயணத்திற்காகவும் சினிமாப் பாடல்களை ஒலிபரப்புவதும் சினிமாப் படங்களைக் காட்சிப் படுத்துவதும் வரவேற்கத்தக்கதே. ஆனால் இப் பாடல்கள் மக்களுக்கு நல்ல சிந்தனைகளை ஏற்படுத்தக் கூடிய அறிவுசார்ந்த பாடல்களாக அமைந்திருப்பதே பொதுவாக மக்களால் எதிர்பார்க்கப்படுகிறது. மாறாக இரட்டை அர்த்தம் கொண்ட ஆபாச சிந்தனைகளைத் தூண்டக் கூடிய மற்றும் நவீனம் என்ற பெயரில் பாலியல் கலாசாரங்களையும் பாலியல் சிந்தனைகளையும் தூண்டக்கூடிய பாடல்களை ஒலிபரப்புவதை அனைத்து பேருந்து உரிமையாளர் சங்கங்களும்ஒன்றாக இணைந்துதடுக்கலாம். அதேபோன்று வாள்வெட்டு கலாசாரங்கள், ரவுடித்தனங்கள், சோம்பல் தன்மைகளைப் பிரதிபலிக்கும் படங்களைத் தவிர்த்து கருத்தாழம் மிக்க நகைச் சுவைகளுடன் கூடிய பல நல்ல படங்களைக் காட்சிப் படுத்துவதையே எமது மக்கள் விரும்புகின்றார்கள். படங்களையும் பாடல்களையும் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை பொறுப்புள்ளவர்களிடம் விட்டால் பேருந்தில் பயணம் செய்பவர்கள் வெட்கப்படத் தேவையில்லை என்று கருதுகின்றேன். பேருந்துகளில் பயணம் செய்யும் பலரின் கருத்தையே இங்கு நான் பிரதிபலிக்கின்றேன்.

உங்கள் சாரதிய ஒழுங்கும் மக்கள் பாதுகாப்பும் 100% உறுதிப்படுத்தப்பட வேண்டும். தற்போது நடைபெறுகின்ற ஒன்று இரண்டு விபத்துக்களைக்கூட இல்லா தொழிப்பதற்கு நீங்கள் பாடுபட வேண்டும். சுமார் 20-30 வருடங்களுக்கு முன்னர் இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிகள் சிறந்த சாரதிகளாக இனங்காட்டப்பட்டிருந்தனர். ஆனால் இன்று அந்த நிலையில்லை. போட்டித் தன்மை காரணமாக வீதி ஒழுங்கு சைகைகள், சமிக்ஞைகள் ஆகியவற்றைப் புறக்கணித்து நினைத்தவாறே நிறுத்துவது, எடுத்த மாத்திரத்தில் இயக்குவது, பின்பார்வை கண்ணாடிகளை முறையாக உற்று நோக்காது இயக்குவது போன்ற பல குறைபாடுகள் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வாறான குறைகளை நீக்க நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும். நவீன அரசியல் கலாசாரத்தின் கீழ் அரசியல் முன்னெடுப்புக்களைக் கொண்டு செல்வதற்கு உங்கள் போன்ற சங்கங்கள் பாவிக்கப்படுகின்றன. அரசின் சுமுக நிலையைக் குழப்புவதற்கு பொது அமைப்புக்கள், தொழிலாளர் சங்கங்கள், பிரத்தியேக பேருந்து சேவை நடத்துநர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் தூண்டிவிடப்படுகின்றார்கள். இவ்வாறான கபட நாடகங்களுக்கு நீங்கள் பலிக்கடாக்களாகாமல் சுயமான சிந்தனையுடன் உண்மையானதும் அவசியமானதும் பொது மக்களுக்கு நன்மை கிடைக்கக் கூடியதுமான முன்னேற்ற கரமான செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபடுவீர்கள் என் பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. உங்கள் தனியார் பேருந்த் உரிமையாளர் சங்க வவுனியா கிளை சிறப்புடன் செயலாற்ற அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (2)




## மின்கம்பத்துடன் மோதுண்டு மோட்டார் சைக்கிள் விபத்து

### -இருவர் காயம்-



(பனிக்கன்குளம்)

வவுனியா குருமன்காட்டில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிள் கடும் சேதமடைந்துள்ளதுடன்மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் சிறுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் குருமன்காட்டிலிருந்து புளியங்குளம் பயணித்த போது குருமன்காடு காளி கோவில் வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியினருகிலிருந்த மின்கம்பத்துடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். மின்கம்பத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிள் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(2-281-250)

## மீள்குடியேறியுள்ள முள்ளிக்குளம் மக்களுக்கு மருத்துவமுகாம்

(மன்னார்)

மீள்குடியேறிய முள்ளிக் குளம் கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனின் ஏற்பாட்டில் நேற்று சனிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது.

முள்ளிக்குளம் கிராம மக்கள் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் தமது சொந்தக் கிராமத்தில் மீள் குடியேறியுள்ளனர். தற்போது வரை நூறு குடும்பங்கள் தற்காலிக கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்,வயோதிபர்கள் என நூறு குடும்பங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் தற்காலிக கூடாரங்களினுள் வாழ்ந்து வருகின்றனர்.





குறித்த மக்கள் மருத்துவ வசதிகளைப்பெற்றுக் கொள்ள சிலாபத்துறை வைத்தியசாலைக்கே சென்று வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் முள்ளிக்குளம் கிராம மக்கள் மற்றும் முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லோறன்ஸ் லியோ ஊடாக தமது கிராமத்தில் மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ள வடமாகாண சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கு அமைவாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணியாளர்கள் மற்றும் மருத்துவ வசதிகளுடன் நேற்று முள்ளிக்குளம் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று அங்குள்ள பாடசாலை ஒன்றில் இலவச மருத்துவ முகாமை மேற்கொண்டனர்.

வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனுடன் இணைந்து மடு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ராஜன் மெம்பேட் வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டதோடு, மருந்துப் பொருட்களையும் வழங்கி வைத்தனர். (2)

அனைவரையும் திருப்திப்படுத்த நினைக்காதீர்கள். அது உங்களால் முடியாது. உங்களை திருப்திப்படுத்தும் வேலைகளில் கவனம் செலுத்துங்கள்.

*- ரொபேர்ட் கியோசாகி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு வீட்டுத்திட்டம் சீனாவுக்கா - இந்தியாவுக்கா இதோ பட்டிமன்றம் ஆரம்பமாகிறது

எதை எடுத்தாலும் ஏதோவொரு பிரச்சினையைக் கிளறிவிடுகின்ற நிலைமைதான் காணப்படுகிறது.

இதற்குக் காரணம் யார் என்பதற்கு அப்பால், இப்படியான பிரச்சினைகளை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டியவற்றை இல்லாமல் செய்வது அல்லது காலதாமதமாக்குவது என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே மேற்படி பிரச்சினைகள் நடந்தாகின்றன.

வடக்கின் குடிநீர் விநியோகம் என்ற விடயம் வந்தபோது, இரணைமடுக்குளத்திலிருந்து குடிதண்ணீர் வழங்குவது என்ற விவகாரம் சூடுபிடித்து கடல்நீரைச் சுத்திகரிப்பது என்றளவில் நிலைமை அப்படியே இருக்கிறது.

இருந்தும் நிலத்தின் கீழ் குடிநீர்க் குழாய்களைப் பொருத்துகின்ற பணி நடைபெறுவது ஓரளவுக்கு மன ஆறுதலைத் தருகிறது எனலாம்.

இதற்குப் பின்னர் வீட்டுத்திட்டத்தில் பொருத்து வீடா? கல்வீடா? என்ற பட்டிமன்றம் நீண்ட காலம் நீடித்தது.

அமைச்சர் சுவாமிநாதன் தரப்பு பொருத்து வீடு என்று வாதிட; வடக்கு மாகாண முதலமைச்சர் தரப்பு கல்வீடு என்று எதிர்வாதம் புரிய; நடுவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த விடயத்தில் தலையிட்டார் எனினும் அவரின் தீர்ப்பு என்ன என்பது இன்னும் அறியப்படாததாக உள்ளது.

இதுதான் என்றால், வடக்குக்கான பொருளாதார மையம் என்ற புதியதொரு விவகாரம் தலைதூக்கியது.

பொருளாதார மையத்தை வவுனியாவில், ஓமந்தையில், தாண்டிக்குளத்தில் எங்கே? நிறுவ வேண்டும் என்ற பட்டிமன்றம் மூன்று அணியாகப் பிரிந்து நடந்தது.

இப்போது பொருளாதார மையத்துக்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் போய் விட்டது.

இவை தவிர, இப்போது வடக்குக்கான வீட்டுத்திட்டத்தை இந்தியாவிடம் கொடுப்பதா? சீனாவிடம் கையளிப்பதா? என்ற பிரச்சினை எழுந்துள்ளது.

மாரிகாலம் ஆரம்பமாகின்ற இக்கட்டத்தில் மக்கள் தகரக்கொட்டகைக்குள் முடங்கிக் கிடக்கின்ற நேரத்தில்; எவ்வளவு விரைவாக வீடுகளைக் கட்டி மக்களைக் குடியமர்த்த முடியுமோ அந்தளவுக்கு வேலையை விரைவுபடுத்துவதென்றால், இங்கோ வீட்டுத்திட்டத்தை இந்தியரிடம் கொடுப்பதா? சீனாவிடம் 'வழங்குவதா? என்ற பட்டிமன்றம் நடக்கத் தொடங்கி விட்டது.

இந்தப் பட்டிமன்றம் இப்போதைக்கு தீர்ப்பைத் தருமா என்பது கேள்விக்குறிதான்.

என்ன செய்வது எங்களுக்குள் ஒற்றுமை இல்லை; எங்களுக்குள் புரிந்துணர்வு இல்லை; அரசிடம் ஆணித்தரமாகப் பேசுகின்ற துணிவு நம்மிடம் அறவே இல்லை.

இந்நிலையில் இவ்வாறான வாதப் பிரதிவாதப் பிரச்சினைகள் மேலெழுகின்றன.

இவற்றுக்கெல்லாம் முடிவு காண்பது பற்றி நம் அரசியல் தலைவர்கள் சிந்திக்கப் போவதுமில்லை.

இவ்வாறான நிலையில், வடமராட்சி கிழக்கில் கடல் அட்டை பிடிப்பதில் சிங்களக் கடற்றொழிலாளர்கள் நுழைவு; முல்லைத்தீவில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றம்; தமிழர் தாயகத்தில் புத்த விகாரைகள் அமைப்பு என்ற புதிய பிரச்சினைகள் முளைவிடுகின்றன.

நாங்கள் எங்களுக்குள் மோதிக் கொண்டால் இதுதான் நடக்கும் என்பதற்கு இதை விட்ட வேறு எடுத்துக்காட்டுகள் வேண்டாமே.

# முரண்பட்ட நேர அட்டவணை தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் கரிசனை

முரண்பட்ட நேர அட்டவணை காரணமாக ஏற்பட்ட தவறுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில் கவனஞ் செலுத்தவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், இம்முறை உயர்தரப் பரீட்சையில் சில பாடங்களுக்கு தோற்ற முடியாதுபோன பரீட்சார்த்திகளுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்கவுள்ளதாக பரீட்சை ஆணையாளர நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முரண்பட்ட நேர அட்டவணை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டமையே காரணமாகும்.

இருப்பினும், சரியான நேர அட்டவணை உள்ளடக்கிய பரீட்சைக்கான அனுமதி அட்டை அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் வழங்கப்பட்டிருந்தன. இந்த நேர அட்டவணையை பரீசீலனை செய்திருந்தால் இவ் வாறான சிக்கல் ஏற்பட்டிருக்காது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மனிதாபிமான அடிப்படையில் பரீட்சார்த்திகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது. இடையூறுக்கு உள்ளான பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கும் நிவாரணம் தொடர்பிலான விடயங்கள் தற்போது திரட்டப்பட்டிருப்பதாக ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# உழவு இயந்திரப் பெட்டி கழன்றதில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பாலாவி பகுதியில் நேற்றுசனிக்கிழமை காலை உழவு இயந்திரப் பெட்டி கழன்றதில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் காலில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தி ஒன்றில் உழவு இயந்திரத்தை திருப்ப முற்பட்ட வேளையே உழவு இயந்திர பெட்டி கழன்று வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றவருடன் மோதியுள்ளது.

இச் சம்பவத்தில் பாலாவி தெற்கைச் சேர்ந்த 24 வயதான நேசராசா திலிசன் என்ற இளைஞனே காயமடைந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-30)

## தென்மராட்சி கொடிகாமம் பகுதியில்

# தென்னை மரத்திலிருந்து தவறுதலாக கீழே விழுந்த இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தென்னை மரத்தில் இருந்து தவறுதலாக கீழே விழுந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 31 வயதான இளைஞர் ஒருவரே முதுகுப் பகுதியில் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-30)

## தென்மராட்சி பகுதியில்

# விசக்கடிக்கு இலக்காகி நால்வர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த இரு தினங்களில் நால்வர் பாம்பு மற்றும் விஷ ஜந்து தாக்கத்திற்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிசசை பெற்று வருகின்றனர்.

மிருசுவிலைச் சேர்ந்த 23 வயதான ப.தயாபரன் பாம்புக் கடிக்கு இலக்கான நிலையிலும் வரணியைச் சேர்ந்த 56 வயதான ர.பத்மதேவி குளவிக் கொட்டிற்கு இலக்கான நிலையிலும், மட்டுவிலைச் சேர்ந்த 46 வயதான வி.பிரபாகரன், மிருசுவிலைச் சேர்ந்த 22 வயதான ப.ரஞ்சித் ஆகிய இருவரும இனந்தெரியாத விஷகடிக்கு இலக்கான நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறறு வருகின்றனர் (ம-30)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஸ்ரீ 108 வைணவத் திருத்தலங்கள்**

மதுரை
அழகர்கோவில
திருமோகூர்மதுரை
திருக்கோஷ்டியூர்
திருப்புல்லாணி
திருமயம்
திருப்பாற்கடல்
பரமபதம்

*(தொடரும்)*

# மதுரை மீனாட்சியின் மகோற்சவப் பெருவிழா

(புன்னாலைக்கட்டுவன்)

அச்செழு மத்தி திருவருள் மிகு நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி புதன் கிழமை பி.ப 3 மணிக்கு கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகவுள்ளது.

பதினொரு தினங்கள் நடைபெறவுள்ள இத்திருவிழாவில் பத்தாம் திருவிழாவான தேர் உற்சவம் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளதோடு மறுநாள் முதலாம் திகதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைஅறிவித்துள்ளது. (ம-78)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உங்களிடம் உள்ளதை எல்லாம் பிறருக்கு கொடுத்துவிட்டு பிரதிபலன் எதிர்பாராமல் வாழுங்கள்.
- நாம் உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் கடவுளுக்காகவே. அனைத்திலும் எப்போதும் கடவுளையே காணுங்கள்.
- ஒரு எஜமானனைப் போல கடமையைச் செய்யுங்கள். அடிமையைப் போல இருக்காதீர்கள். சுதந்திர உணர்வுடன் பணியாற்றுங்கள்.
- சாகின்ற நிலையிலும் கூட நாம், ஒருவர் யார் எப்படிப்பட்டவர் என்று கேள்வி கேட்காமல் உதவி செய்வது தான் கர்மயோகம்.
- சுதந்திர உணர்வு இல்லாத வரையில் மனதில் அன்பு தோன்றுவதில்லை. அடிமையாகி விட்டால் உண்மையான அன்புக்கு இடமே இல்லை.
- ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலைகளைச் செய்து கொண்டே இருங்கள். ஆனால் வேலைகளுக்குள் கட்டுப்பட்டு விடாதீர்கள்.
- வாழ்வில் மனிதன் உயர வேண்டுமானால் கடுமையான சோதனைகளைக் கடந்து சென்றாக வேண்டும்.

# புகையிரதப்பாதையின் பாலங்கள் புனரமைப்பு
## கொழும்பு–தலைமன்னார் சேவை இடைநிறுத்தம்

(மல்லாவி )

கொழும்பில் இருந்து தலைமன்னாருக்குரிய அனைத்து புகையிரத சேவைகளும் நேற்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் மூன்று மாதகாலத்துக்கு புகையிரதப் பாதையின் பாலங்களின் புனரமைப்பு வேலைகளுக்காக தற்காலிகமாக இடை நிறுத்தப்படவுள்ளதாக இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கும், தலை மன்னாரில் இருந்து கொழும்புக்குமான அனைத்து புகையிரத சேவைகளும் நேற்று சனிக்கிழமையுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் நோக்கி செல்லும் புகையிரத . வழித்தடத்தில் முறிகண்டிப் பகுதிக்கும் மன்னாருக்கும் இடையில் இருக்கும் புகையிரத பாதைப் பாலங்களின் திருத்தப் பணிகள் காரணமாகவே இந்த சேவைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. கொழும்பில் இருந்து தலை மன்னாருக்குரிய புகையிரத சேவைகள் அனைத்தும் மதவாச்சி வரை நடைபெறவுள்ளது.

இந் நிலையில், பயணிகள் நலன்கருதி மதவாச்சி புகையிரத நிலையத்தில் இருந்து தலைமன்னார் வரை புகையிரதப் பயணிகளுக்கான விசேட பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் புகையிரத சேவைகள் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# இரணைமடு குளத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட ஐவர் கைது
## தங்கூசி வலைகளும் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளத்தில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஐவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் பயன்படுத்திய தங்கூசி வலைகளும் மீட்கப்பட்டுள்ளன. இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தங்கூசி வலைகளின் பயன்பாடு நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு சட்டத்திற்கு விரோதமான முறையில் இரணைமடு குளத்தில் தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயன்படுத்திய 30 வலைகளையும் குறித்த நபர்களையும் கிளிநொச்சி நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாக இரணைமடு நன்னீர் மீன்பிடியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குளத்தில் மீன்பிடி இன்மையால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையில் இவ்வாறு தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் சிலர் ஈடுபடுவதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த முறையை முழுமையாக இல்லாது செய்வதற்கு அரசு தடைகளை பிறப்பித்துள்ள போதிலும், எவ்வாறு இவ்வாறான வலைகள் வருகின்றன என்பது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இரவு குறித்த குளத்தில் இவ்வாறு தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட நபர்களையும், அவர்கள் பயன்படுத்திய வலைகளையும் மீட்டுள்ளதாகவும் மீனவர்கள் குறிப்பிடுகின்றனர். (2)




# வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்

(குருமன்காடு)

நல்லாட்சி அரசாங்கத்தின் மூன்று ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வவுனியாவில் வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

வவுனியா, மாவட்டத்தின் தரணிக்குளம் பகுதியில் அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ராகுலன் தலைமையில் இந்நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டு வீடுகளுக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

நல்லாட்சி எனப்படும் தேசிய அரசாங்கத்தின் மூன்று வருட பூர்த்தியை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 100 மாதிரி கிராமங்கள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதற்கமைய வவுனியா மாவட்டத்தில் தரணிக்குளம் புதியநகர் மற்றும் மகாறம்பைகுளம் பகுதிகளிலுமாக ஐந்து மாதிரி கிராமங்களுக்கு அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டிருந்தது. தரணிக்குளம் புதியநகர் பகுதியில் மூன்று மாதிரி கிராமங்களுக்குமாக மொத்தம் 143 வீடுகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# மன்னாரில் இலவச மருத்துவ முகாம்




(மன்னார்)

மன்னார் அடம்பன் கறுங்கண்டல் ஆலயத்தில் ஒருநாள் இலவச மருத்துவ முகாம் அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலவச மருத்துவ முகாமில் மூக்கண்ணாடிகள் வழங்கல், ஏனைய நோய்களுக்கும் வைத்தியர்களினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் இதயத்தில் இலங்கை மிஷனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒருநாள் இலவச மருத்துவ முகாமில் கறுங்கண்டல் ஆலயத்தின் பங்குத்தந்தை, அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்தனர். (2-281)

# கிளிநொச்சி வைத்தியசாலையில்
# மகப்பேற்று மருத்துவர் இன்மையால் அவதி; மாற்றீடாக சிங்கள வைத்தியரையேனும் தாருங்கள்
## அமைச்சர் அனந்தி சசிதரன் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மரவட்ட வைத்தியசாலையில் மகப்பேற்று மருத்துவர் இன்மையால் மக்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் அவதிப்படுகின்றனர். மாற்றீடாக சிங்கள வைத்தியர்களையேனும் தாருங்கள் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் குறித்த விடயம் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அண்மைக்காலமாக மகப்பேற்று மருத்துவர்கள் இன்மையால் கர்ப்பிணிப் பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது பெண் நோயியல் தொடர்பான பிரச்சினைகளிற்கும் முகம் கொடுத்துவரும் அவர்களுக்கான தீர்வு தொடர்பில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் என்ற வகையில் பெண்களின் இந்த பிரச்சினை தொடர்பில் உங்கள் கருத்து என்ன என ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அண்மையில் இவ்வாறான பிரச்சினை மன்னாரில் காணப்பட்டது. இதன் காரணமாக அவசர சிகிச்சைக்காக வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு நோயாளர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும் அனுப்பப்பட்டனர். இது வடக்கு மாகாணம் தழுவிய பாரிய பிரச்சினையாக உள்ளது.

மக்களின் வரிப்பணத்தில் கல்வி கற்று பின்னர் வேறுமாகாணங்களில்சேவையாற்றிவரும் மருத்துவர்கள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு பல்வேறு மருத்துவம்சார் பிரச்சினைகள் வடக்கில் காணப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் நாம் மத்திய சுகாதார அமைச்சருக்கு எழுத்துமூலம் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்து வருகின்றோம்.

ஆனால் இன்றுவரை குறித்த விடயம் தீர்ந்ததாக இல்லை. இந்த நிலையில் மக்களின் நலன்கருதி சிங்கள வைத்தியர்களையேனும் தற்காலிகமாக பணிக்கமர்த்தி, தற்காலிக தீர்வையேனும் பெற்றுத் தாருங்கள் என அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையில் பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர்கள் எவரும்இல்லாத நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களை அடிப்படை வசதிகள் கூட இல்லாத முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டமை தொடர்பில் பல்வேறு தரப்புக்களும் விசனம் வெளியிட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் ஆளணி மற்றும் பௌதீக வளங்களை உரிய முறையில் வழங்க இதுவரை மத்திய அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காது வைத்தியசாலையில் இருக்கின்ற ஆளணி வளங்களை திட்டமிட்டு வேறு வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்து வருகின்றது.

இதனால் இங்குள்ள மக்கள் மருத்துவத் தேவையை நிறைவுசெய்யமுடியாது பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாகவே கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய இரண்டு பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்களில் ஒருவரை மத்திய சுகாதார அமைச்சு பொலநறுவைப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்ததுடன் அந்த வெற்றிடத்திற்கு அடுத்த மாதம் வெளிநாடு ஒன்றிற்கு மேலதிக மருத்துவக் கற்கைக்கு செல்லும் வைத்தியர் ஒருவரை நியமித்திருந்தது.

குறித்த வைத்தியர் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு விடுமுறையில் சென்றுள்ளார். இதேவேளை ஏற்கனவே கடமையில் இருந்து மற்றைய வைத்தியரும் கடமைக்கு சமூகம் அளிக்காத நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாய்மார் அவசர சிகிச்சைப்பிரிவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளே இல்லாத முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-315)

# ஐந்து நெல் உலரவிடும் மேடைகள் 2.5 மில்லியன் ரூபா செலவில் அமைப்பு
## முல்லை. மாவட்ட மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் மூலம் 2.5 மில்லியன் ரூபா செலவில் ஐந்து நெல் உலர்த்தும்மேடைகள் அமைக்கப்பட்டு வருவதாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ. உகநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயத்தை நவீனமயமாக்கல் மற்றும் விவசாயத்தை ஊக்குவித்தல்போன்ற செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் கூடுதலான விவசாயக் கிராமங்களில் காலபோகம் மற்றும் சிறுபோகத்தின் போது அறுவடைசெய்யும் நெல்லை உலர விடுவதற்கு போதிய நெல் உலர்த்தும் மேடைகள் இல்லாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரிடம் வினவிய போது, மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் மூலம் நெல் உலர்த்தும் மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் மூலம் முல்லைத்தீவுமாவட்டத்தின்கொல்லவிளாங்குளம் பகுதியில் இரண்டு நெல் உலர்த்தும் மேடைகள் ஐயன்கன்குளம், தண்ணிமுறிப்பு முறிப்பு ஆகிய பகுதிகளில் தலா ஒவ்வொரு நெல் உலரத்தும் மேடைகளுமாக மொத்தம் 5 நெல் உலர்த்தும் மேடைகள் சுமார் 2.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## ஆவா குழுவினருடன்...

இலக்கங்கள் அடங்கிய துண்டுப்பிர சுரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் நடைபெற்ற முன்னேற்றம் தொடர்பில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்த வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் மேற்குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தினார்.

குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு யாழ் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. கணிசமான முறைப்பாடுகளும் தகவல்களும் இதன்மூலம் எமக்கு கிடைத்துள்ளது. குறிப்பாக தாய் ஒருவர் அண்மையில் தொடர்புகொண்டு தனது மகன் ஆவா குழுவினருடன் இணைந்து செயற்படுவதாக தெரிவித்துள்ளார்.

அவரை காப்பாற்ற தான் முயன்றும் முடியாது போனதாக தெரிவித்த தாய், எப்படியாவது அவனை அந்த குழுவிலிருந்து காப்பாற்றி தம்முடன் ஒப்படைக்குமாறும் அவர் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இது போல பல தகவல்கள் எமக்கு கிடைத்து வருகின்றன. அவற்றை இரகசியமான முறையில் விசாரித்து நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (ம-9,101)

## மூன்று முதியவர்களும்...

சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருகையில்,

கோம்பாவில் பகுதியில் காணி ஒன்றினை உழவு செய்த உழவு இயந்திர உரிமையாளர் வித்தியாசமான மணம் வீசுவதனை தொடர்ந்து கிணற்றை நேற்று எட்டிப் பார்த்துள்ளார். இதன்போது கிணற்றில் மூன்று நாட்களுக்கு மேல் விழுந்த உடலம் ஒன்று காணப்பட்டுள்ளதை அவதானித்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் உடலத்தினை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கோம்பாவில் 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 78 அகவையுடைய சுப்பிரமணியம் கார்த்திகேசு என்பவரே கிணற்றில் இருந்து உடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் சந்நிதி கோவிலில் வழிபாட்டிற்கு சென்ற முதியவர் ஒருவர் சடலமாக வீடுதிரும்பிய சோகமான சம்பவம் வல்வெட்டித்துறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை மாடந்தை பகுதியைச் சேர்ந்த கந்தசாமி கனகரத்தினம் (வயது-66) வயோதிபர் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு நேற்று சனிக்கிழமை வழிபடச் சென்றுள்ளார்.

அங்கு அவர் மயங்கி விழுந்து மரணமடைந்ததாக கூறப்படுகிறது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணையினை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

வடமராட்சி யாக்கரு காட்டுப் பகுதியில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று சனிக்கிழமை மதியம் மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் துன்னாலை மத்தியைச் சேர்ந்த சிவகாமி பாலசுப்பிரமணியம் (வயது-70) என பொலிஸார் தெரிவித்தனர் .

கடந்த வியாழக்கிழமை இவர் வீட்டில் இருந்து புறப்பட்டவர் வீடு திரும்பவில்லை என மறுநாள் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை யாக்கரு காட்டுப் பகுதியில் சடலம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மேலும் வவுனியா கற்பகபுரம் பகுதியில் 9 வயது சிறுவன் ஒருவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த சிறுவனை காணவில்லை என தேடி வந்த நிலையில், வீட்டிற்கு அருகில் பயன்படாத நிலையில் உள்ள ஆட்டுக்கொட்டிலில் குறித்த சிறுவன் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளான்.

பின்னர் குறித்த சிறுவன் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சிறுவனின் மரணம் தொடர்பில் சந்தேகிப்பதாக, சிறியதந்தை கூறியதை அடுத்து, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-60,281)

## காணாமல் ஆக்கப்பட்...

கமானது இம்மாதம் 30ஆம் திகதி பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை அனுஷ்டிக்க தீர்மானித்துள்ளது.

கொழும்பில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் சமூக உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் உறவுகள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க உள்ளனர் என காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

## பொலிஸாரின் சித்திர...

ப்படும் குற்றச்சாட்டு மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை சம்பந்தமாக பிபிசியுடன் இடம்பெற்ற நேர்காணலில் அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

எதிர்வரும் மூன்று ஆண்டுகளை இலக்காக கொண்டு நாட்டில் மனித உரிமைகள் சம்பந்தமான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று செயற்பட்டுக் கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

மனித உரிமைகளை பாதுகாக்கும் செயற்பாட்டு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நீதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, சுகாதார அமைச்சு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றால் கூட்டுக் குழுவொன்று இயங்குவதாக அவர் தெரிவித்தார். (ம)

## ஊடகவியலாளருக்கு...

லாளர் ஒருவர் விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்டுள்ளார்.

சுவிஸ்குமாரை தப்பிக்க உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வட்க்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகிய பொலிஸ் அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல் தொடர்பான அறிக்கையின் பிரகாரமே ஊடகவியலாளர் இவ்வாறு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியாக கூறப்படும் சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலைமறைவாகி உள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பகிரங்கப பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் கடந்த ஜூன் 20ஆம் திகதி விசாரணைக்கு வந்தது.

இதன்போது வழக்குத் தொடுநர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி, "இந்த வழக்கின் விசாரணைகள் முற்றுப்பெற்று வழக்கின் கோவை தற்போது சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது" என மன்றில் தெரிவித்தார்.

இதையடுத்து இந்த வழக்கு வரும் ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதிவரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகிய பொலிஸ் அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாண ஊடகவியலாளர் நடராஜா குகராஜா என்பவரை விசாரணைக்கு வருமாறு கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைப்பு அனுப்பியுள்ளனர்.

கொழும்பு 01 இல் அமைந்துள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஊடகவியலாளரை சமுகமளிக்குமாறு அந்த அழைப்பில் கோரப்பட்டுள்ளது.(ம)

## வடக்கில் இராணுவம்...

அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனது தனிப்பட்ட கருத்தின்படி, இராணுவத்தின் குறைந்தபட்ச பலம், 150,000 இற்கு மேல் இருக்க வேண்டும். உள்நாட்டுப் பிரச்சினைக்காக மாத்திரமல்ல, வெளிநாட்டு அச்சுறுத்தல் உள்ளிட்ட எந்தவொரு நிலைமையையும் எதிர்கொள்வதற்கும் நாட்டின் இராணுவம் தயாராக இருக்க வேண்டும்.

சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு. அவர்கள் 3 மில்லியன் பேரைக் கொண்ட இராணுவப் படையை வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடிமகனும், போரிடுவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. எனினும் அவர்கள் அணிதிரட்டப்படவில்லை.

வடக்கில் சில பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை முழுமையாக வெளியேற்றக் கூடாது.

பொதுமக்களின் காணிகளை திரும்ப அவர்களிடம் ஒப்படைப்பதற்காக, சில இராணுவ முகாம்களை மூடி, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் அளவைக் குறைப்பது பற்றி இராணுவத் தளபதி பெருமையாகப் பேசியதைக் கேள்விப்பட்டேன். இது முட்டாள்தனமானது.

ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மக்களுக்கு மீள வழங்குவதற்காக, முகாம்களை மூடுவதையிட்டு பெருமைப்பட முடியாது. நாங்கள் ஆய்வு செய்ய வேண்டும். மக்களின் கருத்தை கேட்க வேண்டும். சரியான மதிப்பீட்டை செய்ய வேண்டும்.

இராணுவம் கைப்பற்றியுள்ள காணிகள் விடுவிக்கப்படும் விடயத்துடன் நீங்கள் இணங்கவில்லையா?

அரசியல் அழுத்தங்களுக்காக இதனைச் செய்யக் கூடாது, இதனை முறைப்படி செய்ய வேண்டும்.

இராணுவத் தளபதி இப்போது, இராணுவத்தினரை விலக்கி அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த முனைகிறார். அவர் முகாம்களை மூடி வருவது குறித்து, களமுனைத் தளபதிகள் சிலர் மகிழ்ச்சியடையவில்லை என்று கேள்விப்படுகிறேன். அது ஒரு பிரச்சினை.

ஆயுதப் படைகளின் பிரதம தளபதியான ஜனாதிபதியின், உத்தரவுகளை இராணுவத் தளபதி நிறைவேற்ற வேண்டியதில்லையா?

எல்லாச் சந்தர்ப்பங்களிலும், தமது மேலதிகாரிகளை இராணுவத் தளபதி திருப்திபடுத்த வேண்டியதில்லை. நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவத் தளபதியே பொறுப்பு.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியை அவர் புறக்கணிக்க அல்லது இணங்காமல் இருக்க முடியுமா?

இராணுவத்தை நிறுத்துவது பற்றிய அறிவு அரசியல்வாதிகளுக்கு இல்லை. அவர்கள் அதனை விளங்கிக் கொள்ளவில்லை.

நீண்ட காலத்துக்கு முன்னர், 2002இல், நான் யாழ்ப்பாண தளபதியாக இருந்த போது, உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள சில பகுதிகளில் உள்ள முகாம்களை மூடுமாறு அரசாங்கத்தினால் கேட்கப்பட்டேன். அப்போது நான் ஒரு மேஜர் ஜெனரல். பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதனை நான் நிராகரித்தேன்.

அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்துடன் தானே நீங்கள் இப்போது இருக்கிறீர்கள்?

அது வேறுபட்ட சிந்தனை. இப்போது அவர்கள் எனது வழியில் பணியாற்றுவதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றார். (ம)

## தகைமை பெற்றவர்...

அதை நிரப்ப முடியாமல் இருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு முதலமைச்சர் ஊடகங்களுக்கு வழங்கும் வாராந்த கேள்வி பதிலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்த கேள்வி பதிலில் முதலமைச்சர் மேலும் கூறியுள்ளதாவது,

பதவி வெற்றிடங்கள் என்பது ஒரு நிலை. வேலை வாய்ப்பற்றவர்கள் என்பது பிறிதொரு நிலை. இரண்டையும் சேர்த்து எம்மைக் குறை கூறாதீர்கள்.

குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு வேலைவாய்ப்பற்றவர்கள் தகைமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். வேலையற்றிருப்போர் யாவரும் எமக்கிருக்கும் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தகைமை பெற்றவர்கள் என்று நினைத்து எம்மைக் குறை கூறுவது முறையாகாது.

பல வெற்றிடங்களை நிரப்பத் தோதான தகைமை உடையவர்கள் இல்லை என்பதை மனதில் கொள்ளுங்கள். இது கல்வித் தேர்ச்சியில் உயர் நிலை அடைந்தவர்களுக்கும் பொருந்தும், கல்வி நிலையில் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கும் பொருந்தும்.

பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி பயின்று உயர் நிலையை அடையும் பலர் வெளிநாடுகளுக்குச் செல்வது உங்களுக்குத் தெரியும். அவர்களால் நிரப்பக்கூடிய வெற்றிடங்களும் எமது வெற்றிடப் பட்டியலில் இருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் இல்லாததால் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்ப முடியாதிருக்கின்றது. அதே போல் தொழிற்கல்வி கற்று சில தொழில்களில் தேர்ச்சி பெற்ற பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைகள் தேடிச் செல்வதால் இங்கு ஏற்படும் வெற்றிடங்கள் பல தொடர்ந்து நிரப்பப்படாது இருப்பதையும் நீங்கள் உணர வேண்டும்.

தொழில் திறன் உள்ளவர்கள் இல்லாததால் வடமாகாணம் படும் அவஸ்தையை நீங்கள் உணர வேண்டும். தாதிகளுக்கு வெற்றிடம் உண்டு. தகுந்த தமிழில் பேசும் தாதிகள் இல்லாததால் நாம் மாகாணத்திற்கு வெளியில் இருந்து தாதியரை அழைத்து வந்து வெற்றிடங்களை நிரப்புகின்றோம். நிரப்பிய பின்னரும் வெற்றிடங்கள் பல உண்டு என தெரிவித்தார். (ம)

## மாகாண சபைத்...

முஸ்தபா இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய முறையில் நடத்துவதா? அல்லது பழைய முறையில் நடத்துவதா? என்பது தொடர்பான முடிவு அன்றைய தினம் தெரிய வரும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ம)

### செவண

திகதி 2018/08/18
சீட்டிழுப்பு இலக்கம் 110
ஆங்கில எழுத்து: A
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 01 37 44 58
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 18-08-2018
சீட்டிழுப்பு இலக்கம் 866
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 4 5 4 6 7 1
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.08.18
சீட்டிழுப்பு இலக்கம் 1855
ஆங்கில எழுத்து: R
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 35 36 46 63
தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

திகதி 2018/08/18
சீட்டிழுப்பு இலக்கம் 1352
எழுத்து: 20
வெற்றி இலக்கம்: 06 07 47 50
01 48
தேசிய லொத்தர் சபை

## கோபி அன்னா...

பரிசு பெற்றவருமான கோபி அன்னான் உடல் நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 80.

மிகச் சிறந்த மனிதரை இழந்து விட்டோம் என்று அமெரிக்க ஊடகங்கள் கோபி அன்னானின் மறைவை உறுதி செய்துள்ளன.

1938ஆம் ஆண்டு கானாவில் பிறந்தார் கோபி அன்னான். ஐக்கிய நாடுகள் சபையின் 7ஆவது பொதுச் செயலராக 1997ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார்.

மனித உரிமைக்காக போராடிய தி எல்டர்ஸ் அமைப்பில் உறுப்பினராக சேர்ந்து 2013ஆம் ஆண்டு அதன் நிர்வாகியாக உயர்ந்தார்.

அமைதியான உலகை கட்டமைக்க பணியாற்றியதற்காக 2001ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளுடன் அமைதிக்கான நோபல் பரிசை கோபி அன்னான் பகிர்ந்து கொண்டார்.(ம)

## வயோதிபரை தா...

போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரெழு அம்மன் கோவிலடியில் 77 வயதுடைய வயோதிபரும் 70 வயதுடைய அவரது துணைவியாரும் வசித்து வருகின்றனர்.

அவர்களின் வீட்டுக்குள் நேற்று அதிகாலை 4 மணிக்கு 4 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் ஒன்று நுழைந்துள்ளது.

கொள்ளையர்கள் வயோதிபத் தம்பதியரைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த 6 பவுண் நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்டுத் தப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## காங்கேசன்து...



கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்த முற்பட்ட கஞ்சாவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம)


**CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை**

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-3497)



**அதிஉயர்தரமிக்க செவன் ஸ்டார் ஓடுகள் விற்பனையாளரும் ஏக விநியோகஸ்தரும்**

தொடர்பு:-
1075, கே.கே.எஸ்.வீதி
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
077 651 3299
(5388)

**FLC FRENCH LANGUAGE CENTRE**

**பிரெஞ்சு**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 01.09.18 சனி 8 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் 03.09.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-3543)

**எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வேலையாள் தேவை**

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு: 0762704959
(5418)

**விற்பனைக்கு**

யாழ்.அல்லைப்பிட்டியில் கலப்பின கறவைப் பசு ஒன்று (நாம்பன் கன்றுடன்), 2 வயது நிரம்பிய கலப்பின நாம்பன் மாடுகள் மூன்று, வண்டில் பழகிய 4 வயது எருது ஒன்றும் விற்பனைக்கு உண்டு. (பதிவு உள்ளது)
தொடர்புக்கு:- 0777560734
(A-3556)

**கடைகள் விற்பனைக்கு உண்டு**

வவுனியா மில் வீதியில் அடுத்தடுத்துள்ள இரண்டு கடைகள் விற்பனைக்கு உண்டு.
குறிப்பு:- ஒரே கடையாகவும் பயன்படுத்த முடியும்
நீளம் - 85 அடி, அகலம் - 12 அடி } ஒரு கடைக்குரியது
தொடர்புகளுக்கு:- 078 678 0145
(5355)

**உடன் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணக்குத் தெரிந்த இலிகிதராக (clerk) வேலை செய்யக் கூடிய பெண் பிள்ளை தேவை.

- அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
- ஆங்கில அறிவு தேவை.
- வேலைக்கேற்ப பயிற்சி பெற விரும்புகிறவரும் விண்ணப்பிக்கலாம்.

உங்களது விண்ணப்பத்தை கீழ் காணும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
Email : - sat37aero@gmail.com அல்லது
154, Brown Road, Jaffna. Tel: 0772444172
(C-3548)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள மேல் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775035549
(5382)

**வீடு வாடகைக்கு**

நல்லூர் செட்டித்தெருவில் 3 அறைகளுடன் இணைந்த குளியலறையுடன் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0779080354,
0761060311
(5214)

**விற்பனை பிரதிநிதிகள் தேவை**

இலங்கையில் முதல்தரமான உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை

MAHARAJA — LION




**தகைமைகள்**

இதே மாவட்டத்தில் 2 வருட விற்பனை அனுபவம் உள்ள பிரதிநிதிகள் தேவை

[FMCG]

மாவட்டம்
யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு : பி. ஞானகுமார் [சந்தைபடுத்தல் முகாமையாளர்]
Tel: 0766908994
Email -gk@maraja.org
Maharaja Foods [Pvt]Ltd.
No: 18/3 Dr. E.A Cooray Mawatha, Colombo-06
www.maharajafoodproducts.com
(C-3545)

**விற்பனைக்கு**

யன்மார் 2 சிலிண்டர் வள்ள எஞ்சின் ஸ்டாண்ட் கிறாங், யப்பான் கெட், பெயரிங், தரமான போர் இயங்கு நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0773573055
வேம்படி, வல்வெட்டித்துறை
(5283)

**கடை விற்பனைக்கு**

யும்மா மொஸ்க் லேனில் அமைந்துள்ள 117-ம் இலக்கம் கொண்ட கடை 1.3 குழியுடைய கடை விற்பனைக்கு உண்டு. (19சதுர அடி)
தொடர்பு: 0763197319
(5384)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS
(C-3472)

**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION MONEY TRANSFER — 070 330 5500 — WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை
(C-3495)

**உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை 24 மணி நேரத்திற்குள்**

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|
| 7.30 | 8.00 | 8.30 | 10.00 | 12.30 |

| Document | 25 -100Kg | 200 + Kg | 500Kg above |
|---|---|---|---|
| 100 Rs | 12 Rs /kg | 10 Rs /kg | 8 Rs /kg |




தொடர்புகளுக்கு: 0771271892
216 - கஸ்தூரியார் வீதி , யாழ்ப்பாணம்.
(C-3549)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 179

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 | 19.08.2018 | தொலைபேசி : 021 222 3378



# 10 நாட்களில் நடந்த பரிதாப மரணங்கள்

# தமிழினமே தடுக்க வேண்டாமோ!

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

## அரசியல் தலைமைக்கு பிரமச்சாரிகள்தான் தேவை



**பண்டிதர்** பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கத்தைத் தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று அறிவிக்க, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஒரு சிறந்த தலைவர். நேர்மையான அரசியல்வாதி. இத்தகைய தலைவர்களால்தான் இந்திய தேசம் இன்னமும் ஒற்றுமையாக இருக்கிறது.

**சாத்திரியார்:** இலங்கையில பேரினவாதம் பேசுகின்ற பதருகள் வாஜ்பாய் போன்ற தலைவர்களைப் பார்த்து தங்களை ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டும்.

**வாத்தியார்:** அதெங்க நடக்கப்போகுது. புத்த பிரானின்ர போதனையை பின்பற்றுகின்றோம் என்று காவி தரித்ததுகளே கண்ட பாட்டில நடக்கும் போது பேரினவாதிகள் எப்பிடித் திருந்துவினம்.

**கங்காணி:** இனவாதம், மதவாதம் கதைக்கிறவியளுக்கு கடுமையான தண்டனை வழங்கினால் தான் காவி உடுத்தவியள் சடுதியாகத் திருந்துவினம்.

**மூப்பர்:** அதுதானே ஒருத்தருக்கு 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டிருக்குது. இதோடயாவது காவியள் திருந்துகினமோ பாப்பம்.

**பண்டிதர்:** திருத்தம் என்பது ஒன்று அறிவால வரவேணும். இல்லையென்றால் ஆன்மீகத்தால வரவேணும். இரண்டும் இல்லை எண்டால் எப்பிடி வரும்.

**சாத்திரியார்:** ஆன்மீகத்திற்கு துறவு அவசியம் எண்டு தான் நான் நினைத்திருந்தனான். ஆனால் இலங்கையில பௌத்த பிக்குகளின்ர மிடுக்கைப் பார்க்கும்போது துறவைத் துறக்கிறதுதான் ஆன்மீகத்திற்கு நல்லது போல.

**மூப்பர்:** சாத்திரியார் பௌத்த பிக்குகளின்ர திமிர வைச்சுக்கொண்டு துறவைக் குறை சொல்லாதீங்க. ஆன்மீகத்திற்கு மட்டுமல்ல அரசியலிலும் பிரமச்சாரிகள் இருப்பதுதான் நல்லது என்று பிரதமர் வாஜ்பாய்க்குப் பிறகு நான் நினைக்கிறன்.

**சாத்திரியார்:** என்ன மூப்பர் சொல்லுறியள். பௌத்த பீடங்களில இருக்கிற துறவிகள் படுத்துற பாட்டைப் பார்த்து போட்டு அரசியலிலும் துறவிகள் இருக்க வேணும் எண்டு சொல்லுறியளே.

**பண்டிதர்:** சாத்திரியார், மூப்பர் அந்தக் கருத்தில சொல்லல்ல. பிரமச்சாரிகளின்ர ஆட்சியிலதான் அரசாங்கம் நன்றாக நடந்திருக்குது.

**விதானையார்:** அதெண்டால் உண்மைதான். இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஒரு பிரமச்சாரி. அதால அவர் யாருடைய பக்கமும் சாராமல், குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் ஆட்சி நடத்தக்கூடியதாக இருந்தது.

பிரமச்சாரியான வாஜ்பாயின்ர ஆட்சியில அவர் ஊழலற்ற ஒரு தூய தலைவன் என்று உலகம் அங்கீகரித்தது.

**மூப்பர்:** நான் சொல்ல வந்ததை விதானையார் சரியாகச் சொல்லுகிறார். குடும்பஸ்தன் அரசியலில இருக்கும்போது சொத்துச் சேர்க்கிறது, தன்ர பிள்ளைகளை அரசியலுக்கு கூட்டி வாறது என்ற சுயநலன்கள் மேலோங்கியிருக்கும். அதாலதான் பிரமச்சாரிகள் நாட்டை ஆள வேணும் எண்டு சொல்லுறன்.

**கங்காணி:** உண்மைதான். தமிழகத்தில முதலமைச்சராக இருந்த காமராஜர் ஒரு பிரமச்சாரி. அவற்ற காலம்தான் பொற்காலம் என்று போற்றப்பட்டது. அவர் இறக்கும்போது அவரிட்ட இருந்த காசு வெறும் நூற்றுச் சொச்சம்தான்.

**வாத்தியார்:** பார்த்தியளே வாஜ்பாய், காமராஜர் போன்றவர்கள் எப்படி எல்லாம் ஆட்சி நடத்தியிருக்கினம் எண்டு.

**சாத்திரியார்:** அப்ப கலைஞர் கருணாநிதி சிறப்பாக ஆட்சி நடத்தவில்லை எண்டு சொல்லுறியளோ.

**வாத்தியார்:** இறந்த பிறகு ஒருத்தரைப் பற்றி நல்லாக் கதைக்க வேணுமே ஒழிய பிழையான பக்கத்தைப் பார்க்கக் கூடாது. ஆனாலும் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை இந்தத் தத்துவம் பொருந்தாது எண்டுதான் நினைக்கிறன்.

**பண்டிதர்:** இறந்த பிறகு அரசியல் தலைவர்களைப் பற்றி அதிகமாகக் கதைக்க வேணும். அப்பதான் இருக்கிறவியள் தங்களுக்கும் இப்படி நடக்குமெண்டு நினைத்து தங்களை ஒழுங்குபடுத்துவினம். ஆகையால நீங்கள் தயங்காமல் சொல்லுங்க வாத்தியார்.

**வாத்தியார்:** கலைஞர் கருணாநிதி சிறந்த ஆட்சி நடத்தினவர் எண்டாலும் குடும்பம் என்பது அவரின் அரசியல் தூய்மைக்கு இடைஞ்சலாக இருந்ததென்பது உண்மைதான்.

**மூப்பர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** வன்னிப் பெருநிலப்பரப்பில தமிழினம் கொல்லப்பட்ட போது அப்போது தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞரின் ஆதரவோடதான் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி நடத்தினது. அந்த நேரம் முதல்வர் கருணாநிதி டில்லிக்குச் சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு வன்னி யுத்த த்தை நிறுத்துவிக்கும்படி கேட்பதற்கல்ல. மாறாக தன்ர பிள்ளைக்கு அமைச்சுப் பதவி வழங்கும்படி கேட்டுத்தான் அவர் டில்லிக்குப் போனார்.

**விதானையார்:** குடும்பஸ்தனாக இருந்ததால தன்ர பிள்ளைக்கு அமைச்சுப்பதவி பெற்றுக் கொடுக்க வேணுமென்ட சுய நலன் கலைஞருக்கு வந்திட்டுது.

(அதுமட்டுமல்ல என்று கூறிய விதானையார் சற்று தாமதிக்க, ஏன் விதானையார் தாமதிக்கிறியள் சொல்ல வந்ததைச் சொல்லி முடியுங்களன் என்றார் சாத்திரியார்)

**விதானையார்:** கலைஞர் கருணாநிதி உயிரோட இருந்தபோதே மு.க.ஸ்ராலினும் மு.க. அழகிரியும் மோதத் தொடங்கினவியள்.

இப்ப கலைஞர் இல்லை எண்டதும் அவர்கள் இருவருக்குமிடையிலான மோதல் உச்சமடைந்திருக்குது எண்டால் பார்த்தியளோ.

தமிழகத்தை ஆட்சி செய்த கலைஞரால தன்ர குடும்பத்தை ஒற்றுமைப் படுத்த முடியாமல் போயிற்று.

**கங்காணி:** அதுமட்டுமல்ல கலைஞரின்ர முதல் மனைவி பத்மாவதிக்குப் பிறந்த மகன்தான் மு.க. முத்து. இப்ப அவருக்கும் கலைஞர் குடும்பத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

கலைஞர் இறந்தபோது அவருக்கு நேரில் சென்று மு.க.முத்து அஞ்சலி செலுத்தவில்லை. அதுபற்றி மு.க.ஸ்ராலின், மு.க. அழகிரி ஒருத்தரும் கவனமெடுத்ததாகவும் இல்லை.

**சாத்திரியார்:** அப்ப மு.க. முத்து கலைஞர் கருணாநிதியின்ர மரணச் சடங்கிற்குப் போகவில்லையோ.

**கங்காணி:** எல்லாம் முடிந்த பிறகு இரண்டு மூன்று நாள் கழிய உறவினர்களின்ர உதவியோட மெரினா பீச்சுக்குச்சென்று கலைஞரின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினார். அப்பவும் முத்துவின்ர முகத்தில கலைஞரின் இறப்புத் தொடர்பில் எந்தக் கவலையும் தெரியல்ல. மாறாக சின்னவயதில தாயை இழந்த சோகம், அநாதையாக வளர்ந்த பரிதாபம், கலைஞரால் கைவிடப் பட்ட துன்பம் இவற்றின்ர எதிரொலிப்புத்தான் முத்துவில தெரிந்தது.

**வாத்தியார்:** இதுதான் உலகம். ஒருபிள்ளை அடுத்த முதலமைச்சராக வரத் துடிக்குது. மூத்தபிள்ளை கவனிப்பார் ஆருமின்றி அநாதையா நிற்குது. என்னதான் இருந்தாலும் கடவுள் தன்ர வேலையைக் காட்டத்தான் செய்றிறான்.

இவ்வாறு வாத்தியார் கூற, சரியாப் புரிஞ்சு கொண்டால் சரி என்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்





# முதலமைச்சருக்கு வைக்கப்படும் தடம்

கடலில் மிதக்கின்ற பனிக்கட்டிகளில் பத்தில் ஒரு பகுதி மட்டுமே வெளியில் தெரியும். மிகுதி பத்தில் ஒன்பதும் நீரில் அமிழ்ந்திருக்கும்.

கடலில் நின்று பார்ப்பவர்களுக்கு ஐஸ்கட்டியின் பத்தில் ஒரு பகுதி மட்டுமே தெரிவதால் அதுவே பனிக்கட்டியின் அளவு என்று நினைத்துக் கொள்வர்.

இதுபோன்ற ஒரு தோற்றப்பாடுதான் இன்றைய தமிழர் அரசியலில் உள்ளது. இதனை இரண்டு வகைப்படுத்திக் கூற முடியும். அதில் ஒன்று தமிழ் அரசியல் தலைமையில் இருக்கக்கூடிய சிலர் தமிழினத்திற்கு எதிராகச் செய்கின்ற நாசகாரங்களில் பத்தில் ஒரு பகுதி மட்டுமே வெளியில் தெரிகிறது. மிகுதி ஒன்பது பங்கும் எவருக்கும் தெரியாமல் உள்ளது. எனினும் இதனைத் தெரியப்படுத்துவதற்கும் தமிழர் தரப்பில் போதுமான அமைப்புகள் இல்லை எனலாம். இது ஒரு புறமிருக்க,

வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை அரசியலில் இருந்து வெளியேற்றுவதற்கான முயற்சியில் தமிழ் அரசியல் தரப்பு மிகக் கடுமையாக ஈடுபட்டுள்ளது.

எனினும் இதில் ஒரு பகுதி மட்டுமே வெளியில் தெரிகிறது. மிகுதி ஒன்பது பகுதியும் வெளியில் தெரியாமல் அமிழ்ந்துள்ளது.

இருந்தும் தமிழின அழிப்பாளர்களுக்குத் தோள் கொடுத்தவர்களும் வன்னி யுத்தத்தின்போது தமிழர்கள் கொல்லப்படுவது கண்டு புளகாங்கிதமடைந்தவர்களும் முதலமைச்சரை சாடத் தலைப்பட்டுள்ளனர் என்பதிலிருந்து தமிழின அழிப்பாளர்களின் பின்புலத்தில் செயற்படுகின்றவர்களே வடக்கின் முதலமைச்சரை எதிர்க்கின்றனர் என்பது தெளிவாயிற்று.

இவையாவற்றுக்கும் மேலாக, வடக்கு மாகாண சபையில் இப்போது முதலமைச்சரை எதிர்ப்பதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பின் உறுப்பினர்(கள்) முன்னிலை பெற்றுள்ளனர் என்பதிலிருந்து நிலைமை எவ்வாறாக உள்ளது என்பது புரிதற்குரியது.

இது தவிர, தமிழர்களின் அரசியல் என்பது தமிழ்மக்களின் உரிமையைப் பெற்றெடுத்தல் என்பதற்கப்பால்,



தமிழ் அரசியல்கட்சிகள் தங்களின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளல் என்பதிலேயே கடும் பிரயத்தனம் காட்டுகின்றன.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது இப்போது செயலிழந்துவிட்டது. கூட்டமைப்பைப் பதிவு செய்து அதற்குச் சட்டரீதியான கட்டமைப்பை உருவாக்காததன் பின்னணியில் கூட்டமைப்பின் உடைவு சாத்தியமாயிற்று.

இந்த உடைவு இயல் பாக ஏற்பட்டதன்று. மாறாக அது திட்டமிட்டுச் செய்யப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தனக்கிருக்கக்கூடிய மக்கள் செல்வாக்கில் ஏனைய கட்சிகள் குளிர் காய்ந்துவிடக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்த போது கூட்டமைப்பின் உடைவு தவிர்க்கமுடியாததாயிற்று.

இந்நிலையில் கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சியோடு சேர்ந்து ஒத்தூதுவதுதான் ஒரே வழி என்ற கட்டத்திற்கு வந்துவிட்டன. அதிலும் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஒரு காலத்தில் ஆயுதமேந்திப் போராடிய அமைப்புகள் என்ற அடிப்படையிலும் அவற்றை ஓரங்கட்டுவதொன்றும் தமக்குப் பாதகத்தை ஏற்படுத்தாது என்ற நினைப்பில் தமிழரசுக் கட்சியின் தனித்துவம் கூட்டமைப்பை தனியுரிமையாக்கியுள்ளது.

இந்நிலையில் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களே தமிழரசுக் கட்சியில் இருந்து கொண்டு சிலர் செய்கின்ற திருகுதாளங்களுக்குப் பதிலடி கொடுக்கக் கூடியவர் என்பதும் தமிழ் மக்களுக்கான மாற்றுத் தலைமையைப் பொறுப்பெடுக்கக்கூடிய அத்தனை பண்புகளும் கொண்டவர் என்ற அடிப்படையிலும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் முதன்மை பெற்றுள்ளார்.

இந்த நிலைமை தங்களின் எதிர்கால அரசியலுக்கு ஆபத்து என்று நினைப்பவர்கள் அவரை எப்பாடு பட்டும் அரசியலில் இருந்து வெளியேற்றிவிடவேண்டும் என்பதில் மிகவும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

அதேநேரம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமையை தானே அமைத்துக்கொண்டு தேர்தலில் களமிறங்கினால் சேர்ந்திருப்பதை விட அது பேரிடியாக அமைந்து விடும் என்பதிலும் கவனம் செலுத்துவோர், நீதியரசர் விக்னேஸ்வரன் எந்நிலையிலும் தனித்து அரசியல் கட்சி அமைத்துச் செயற்படக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதால், முதலமைச்சருக்கு வேறு வழிகளிலும் தடம் வைக்கப்படுகின்றது.

தவிர, வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவிப்பாராக இருந்தால், அது கூட்டமைப்பின் தலையில் இடியை விழுத்தும் என்பதால் அவரை எப்பாடுபட்டும் கூட்டமைப்பிற்குள் வைத்திருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் வலியுறுத்துகின்றன.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளியேறுவதற்கு அனுமதித்து விடாதீர்கள். அவ்வாறு அனுமதித்தால் நாங்களும் வெளியேற வேண்டியிருக்கும் என்ற கருத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரிடம் அவர்கள் தெரியப்படுத்தினர். கூட்டமைப்பின் தலைவர் என்ற அடிப்படையில் அவர்கள் இரா. சம்பந்தரிடம் தமது நிலைப்பாட்டை கூறியுள்ளனராயினும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாத நிலைமையில், தான் இருப்பதை சம்பந்தர் நன்கு அறிவார் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

எது எவ்வாறாயினும் கூட்டமைப்பில் இருக்கக் கூடிய புளொட், ரெலோ ஆகியவற்றின் நிதர்சனமான கருத்தை தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளாது என்பதும் நிறுதிட்டமான உண்மை.

ஏனெனில் தமிழரசுக் கட்சி வாழவேண்டும் என்ற நினைப்பு உள்ளவர்கள் இப்போது அந்தக் கட்சிக்குள் இல்லை. அந்தக் கட்சி எப்பாடு பட்டாலும் அது பற்றிப் பரவாயில்லை என்று நினைக்கக் கூடியவர்கள் இருக்கும்போது தமிழரசுக் கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் பாடுபடுவார்கள்- செயற்படுவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

ஆக, தமிழரசுக் கட்சி வாழவேண்டும் என்று கட்சிக்கு வெளியில் இருப்பவர்கள் நினைப்பதால்தான் இன்று வரை அந்தக் கட்சியின் பெயர் வாழ்கிறது.

மற்றும்படி அந்தக் கட்சியினதும் அதன் தலைமையினதும் நிலைமை காவேரி வைத்திய சாலையில் இருந்த கலைஞர் கருணாநிதியின் நிலைமை தான்.

**திருநீலகண்டன்**




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில்
உங்கள் ஆக்கங்கள் இடம்பெற
வேண்டும் என்றால் உங்கள் சுய
ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# உலக புகைப்பட தினம்





**ஆயிரம் வார்த்தைகளால் சொல்ல முடியாததை ஒரு புகைப்படம் உணர்த்தி விடும். எளிதாக மக்களின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலும் புகைப்படத்துக்கு உண்டு.**

20ஆம் நூற்றாண்டில் எடுத்த சில புகைப்படங்கள் உலக வரலாற்றையே மாற்றியது. 1989 ஆம் ஆண்டு ஜுன் 5ஆம் திகதி, சீன வீரர்களின் பீரங்கிகளை எதிர்த்து நின்ற "டேங்க் மேன்" புகைப்படம், வியட்நாம் போரை நிறுத்த காரணமாக இருந்த சிறுமியின் புகைப் படம், சூடானில் உணவுப்பஞ்சத்தை எடுத்துரைத்த பிஞ்சுக் குழந்தையின் புகைப்படம் என இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

19ஆம் நூற்றாண்டில் லூயிசு டாகுவேரே என்பவர்தான் "டாகுரியோடைப்" என்ற புகைப் படத்தின் செயல்முறையை வடிவமைத்தவர். இம்முயற்சிக்கு பிரான்ஸ் அகாடமி 1839ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி அனுமதி அளித்தது. அதன் பின்னர், 1839ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு அரசு, ஓகஸ்ட் 19ஆம் திகதி டாகுரியோடைப் செயற்பாட்டை உலக மக்கள் அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தலாம் என அறிவித்தது. அந்த ஓகஸ்ட் 19ஆம் திகதிதான் உலகம் முழுவதும் புகைப்பட தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அப் போது லூயிசு டாகுவேரே பரீஸில் உள்ள போல்வர்டு கோயிலைப் புகைப்படமாக எடுத் தார். அதுதான் தனிநபர் எடுத்த உலகின் முதல் புகைப்படம். சிறந்த புகைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பல அமைப்புகளால் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகப் பத்திரிகைத் துறையில் சிறந்த புகைப்படங்களுக்கு "வேர்ல்டு பிரஸ் போட்டோ", "டைம்" இதழ் மற்றும் புலிட்சர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல மணிநேரங்கள் பொறுமை காக்கும் புகைப்பட நண்பர்களுக்கு 178ஆவது புகைப்பட தின வாழ்த்துகள்...

# கிரிக்கெட்



19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் அறிமுகப்படுத் தப்பட்ட விளையாட்டு கிரிக்கெட் ஆகும். இது கனவான் களின் விளையாட்டு என சிறப்பித்துக் கூறப்படுகிறது. இது முறையே 11 வீரர்கள் கொண்ட இரு அணிகளுக்கிடையே ஆடப்படும் ஆட்டமாகும்.

தற்பொழுது, இந்த ஆட்டம் பொதுநலவாய நாடுகளில் பரவலாக ஆடப்பட்டு வருகிறது. இது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் மிகப் பிரபலமான விளையாட்டு ஆகும். துடுப்பாட்டம் முதலாவதாக 16ஆம் நூற்றாண்டில் தென் இங்கிலாந்திலேயே விளையாடப் பட்டது.

## திருக்குறள்

**கற்க கசடறக் கற் பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. (391)**

கற்பதற்குத் தகுதியான நூல்களைப் பழுதில்லா மல் கற்க வேண்டும். கற் றதன் பின்னர் கற்ற அக் கல்வியின் தகுதிக்குத் தகு ந்தபடி நடக்கவும் வேண் டும்.


**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (392)**

'எண்' என்று சொல்லப் படுவதும், 'எழுத்து' என்று கூறப்படுவதும், இவ்வு லகில் வாழும் உயிர்களுக் குக் 'கண்' என்பார்கள்.

**கண்ணுடையர் என்ப வர்கற்றோர்முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர். (393)**

'கண் உடையவர் என்று உயர்வாகக் கூறப்படுவோர் கற்றவரே ஆவர். கல்லாத வர்கள்தம்முகத்தில் இரண்டு புண் உடையவர்கள் ஆவர்.

# மனித உடலின் அற்புதங்கள்



மனித உடல்கள் பற்றி ஆராயப்பட்டதில் பல உண் மைகள் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன. அவற் றில் பல நமக்கு ஆச்சரியத் தையும் ஏன் அதிர்ச்சியை யும் கூட ஏற்படுத்தும்.

பொதுவாக நாம் பூரண ஆயுள் என்று கூறுகிறோம். பூரண ஆயுள் என்றால் 100 வருடங்கள் வரை உயிர் வாழ்வது என்று நினைக் கிறோம். ஆனால், பூரண ஆயுள் என்பது 120 வரு டங்கள் ஆரோக்கியமாக வாழ்வது.

அதேபோல ஒரு தலை முறை என்பது 20 ஆண்டு கள் கொண்டது என்று தான் பெரும்பாலானோர் நினைக் கிறார்கள். உண்மையில் ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்.

மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன. ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீற்றராகும்.

நுரையீரல் ஒரு நாளை க்கு 23,040 முறைகள் சுவா சத்தை உள்ளெடுத்து வெளிச் செலுத்துகிறது. நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கிறது.

மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல் களின் எண்ணிக்கை மூன்று ஆயிரம். கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொரு வருக்கும் வேறுபடும். மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.

கண் தானத்தில் கறுப்பு விழிகள் மட்டுமே அடுத்த வருக்கு பொருத்தப்படுகின் றன. மனித உடலில் மிக வும் பலமானவை விரல் நகங்களே. அதில் கெராடின் சத்து உள்ளது, இது காண் டாமிருகத்தின் கொம்புகளில் காணப்படுவது. மரணத்திற் குப் பிறகும் கூட நகத்திற்கு ஒன்றுமே ஆகாது.

இவையெல்லாம் மனித உடலின் அற்புதங்கள் பற் றிய சிறு தொகுப்புதான். மனித உடலின் அற்புதங் களைச் சொல்லிக்கொண்டே போக ஏராளமான சங்கதி கள் இருக்கின்றன.

# முதலை



ஊர்வன இனத்தின் பெரிய விலங்காக முதலை விளங்குகிறது. வெப்ப மண்டலங்களில் பெரிதும் வாழும் முதலைகள் நீரிலும், நிலத்திலும் வாழக்கூடியன. மற்ற ஊர்வனவற்றைப் போல் அல்லாமல் இவை நான்கு இதய அறைகள் கொண்டதுவை. நீந்தும்போது நீரின் வேகத்துக்கு ஈடுகொடுப்பதற்கு வசதியாக கால்களை மடித்துக் கொண்டே நீந்தும்.

தரையிலும் வாழும் என்றாலும், நீர்க்கரையோரமே இவற்றுக்கு வசதியானவை. இதனால் இவற்றின் இரை பெரும்பாலும் மீன்களும் நீர்நிலைகளைத் தேடிச் செல்லும் விலங்குகளுமே.

# உதவி



ஒரு யானை வாய்க்கா லில் தண்ணீர் குடிக்க வந் தது. அப்போது, யானை அண்ணா என்னைத் தூக்கி அந்தக் கரையில் விட முடி யுமா? என்று கேட்டது எறு ம்பு.

எப்படி வந்தாயோ அப்ப டியே போ எறும்பு என்றபடி தண்ணீர் குடித்தது யானை.

நான் வரும் போது வாய் க்காலில் தண்ணீர் இல்லை யானை அண்ணா. அத னால் உணவு தேடி வந் தேன். எங்கள் கூட்டத்திடம் செல்ல வேண்டும். உதவி செய்யுங்கள் என்று கெஞ்சி யது எறும்பு.

"சரி ஏறு" என்று தும்பிக் கையை நீட்டியது யானை. எதிர்க் கரையில் இறங்கிய எறும்பு, "உங்கள் உதவியை மறக்க மாட்டேன் யானை அண்ணா. என்றாவது ஒரு நாள் உங்களுக்கு உதவு வேன், நன்றி" என்று கிளம் பியது.

"சின்னஞ்சிறு எறும்பு நீ எப்படி எனக்கு உதவ முடி யும்? பத்திரமாக உன் கூட் டத்திடம் சேர் என்று சொல்லி விட்டு கிளம்பியது யானை.

மறுவாரம் யானை உணவு தேடி வந்து கொண்டிருந்தது. திடீரென்று பசுமையான புற் களைக் கண்டதும் மகிழ்ச்சி அடைந்தது. தன்னை மறந்து சாப்பிட ஆரம்பித்தது. சற்று நேரத்தில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. அதிர்ச்சி யோடு திரும்பிப் பார்த்தது யானை. வேட்டைக்கார ரைக் கண்டதும் ஓட்டம் பிடித்தது. அன்று மாலை ஓய்வெடுத்துக் கொண்டிருந்த யானையிடம் வந்தது எறும்பு.


யானை அண்ணா, வண க்கம், நீங்கள் தப்பித்த பிறகு தான் எனக்கு உயிரே வந்தது என்றது எறும்பு. அது எப்படி உனக்குத் தெரியும்?

வேட்டைக்காரர் உங்க ளைக் குறி பார்க்கிறதைப் பார்த்தேன். அவர் துப்பாக் கியை அழுத்தும் போது நறுக் கென்று கடித்து விட்டேன். வலியில் துடித்தவரின் குறி தவறியது. அதனால் நீங்கள் தப்பித்தீர்கள் யானை அண்ணா" என்றது எறு ம்பு.

"ஆ.. நீதான் என் உயி ரைக் காப்பாற்றியிருக்கி றாயா? உன்னைச் சாதா ரணமாக நினைத்திருந் தேன். மன்னித்துவிடு எறு ம்பு. உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரிய வில்லை என்று நெகிழ்ந் தது யானை.

இது ஒரு விடயமா யானை அண்ணா? அன்று எனக்கு உதவினீர்கள். இன்று உங் களுக்கு உதவினேன். நம க்குள் நன்றி எல்லாம் வேண் டாம் என்றது எறும்பு.








மனிதன். இதுபற்றி சிறு குறிப்பு தர முடியுமா?

தமிழன் அன்று ஆயுதத்தால் அழிந் தான் இன்று போதையால் அழிகிறான்....

எங்கள் போராட்டங்கள் தோற்றுப் போவது ஏன் வியாசரே?

தாமரை — வவுனியா

**மனிதன். இதுபற்றி சிறு குறிப்பு தர முடியுமா?**

முதலில் மேலே உள்ள படத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். கோவில் வாசலில் அநாதை பிள்ளையை நாய் அரவணைத்தபடி படுத்திருக்கிறது. வாசகம். இரண்டு நாய்கள் செய்த தவறுக்கு ஒரு தாயின் அரவணைப்பு.

சதீஸ் — சுழிபுரம்

**காதலி ஏமாற்றினால் என்ன செய்யலாம் வியாசரே?**

இதுவரை பிடித்திருந்த சனியன் தொலைந்து விட்டது என சிநேகிதர்களை அழைத்து ஒரு பார்ட்டி கொடுத்து விட்டு அடுத்த அலுவலைப் பார்க்க வேண்டியது தானே. சோ ஹேப்பி.. ☺

சுதன் — குப்பிளான்

**கூட்டமைப்பு மக்களையும் தன்னையும் விற்றுப் பிழைக்கிறதே?**

மகாபாரதத்தில் தன்னை இழந்தபின் என்னை இழந்தாரா? என்னை இழந்த பின் தன்னை இழந்தாரா? என்று கௌரவர் சபையில் நின்று திரௌபதை வினவுகிறாள்? இறுதியில் அவள் துயில் உரியப்படுகிறது.

அதைத்தான் இதற்கும் கேட்கிறேன். தங்களை இழந்த பின் எங்களை இழந்தார்களா? இல்லை எங்களை இழந்தபின் தங்களை இழந்தார்களா? ஏனென்றால் எங்கள் துயில் எப்போதோ உரியப்பட்டுவிட்டது.

கேதீஸ் — கீரிமலை

**எதிர்க்கட்சித் தலைமை என்பது?**

மத்தியிலும் சரி மாகாணத்திலும் சரி அது வாய்க்கவில்லை. பெயருக்கும் புரோகிறாமுக்கும் மட்டும் அந்த அடைமொழியை, அதுதான் ''எதிர்க்கட்சித் தலைவர்'' என பயன்படுத்துகிறார்கள். அதனால் தமிழருக்கு ஏதும் நன்மை உண்டோ என்று கேட்டால் அதன் விடை O. கூட்டவும் முடியாது, கழிக்கவும் முடியாது, வகுக்கவும் முடியாது, பெருக்கவும் முடியாது. மன்னிக்கவும் மக்கள் நினைத்தால் பெருக்கலாம், நன்றாக வழித்துத் துடைத்துப் பெருக்கி விடலாம் வாருங்கள்.

சயன் — யாழ்ப்பாணம்

**எங்கள் போராட்டங்கள் தோற்றுப்போவது ஏன் வியாசரே?**

கறுப்பு ஆடுகளால். ஆதிகால வரலாறுகளில் இருந்து முள்ளிவாய்க்கால் முடிவுவரை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். புனிதர் யேசுவுடனேயே ஒரு கறுப்பு ஆடு இருந்தான் எனின் நம் ஆட்சியாளர்களிடம் இருக்காதா என்ன.

கீர்த்தி — யாழ்ப்பாணம்

**உங்களுக்கு ஒருதடவை சொன்னால் மண்டையில் உரைக்காதோ வியாசரே. சும்மா ஒரே தத்துவங்கள் பேசிட்டிருக்கிறீர்களே?**

என்ன செய்ய தும்புத்தடியை காட்டி இதுதான் அது என்றால் புள்ளடி போடுற மந்தைக் கூட்டங்கள் மத்தியில் இருக்கிறோமே.

அதனால் பேசத்தான் வேண்டும், பேசிக் கொண்டிருக்கத்தான் வேண்டும். நான் பேசுவது மழை போன்றது. பொது நலத்திற்கானது. அதில் குடைபிடிக்கும் சுயநலவாதி நானில்லை. புரிகிறதா?




நந்தபுருசோத் — கரவெட்டி

**இன்றைய சூழ்நிலையில் மனிதனுக்கு முதுகெலும்பு அவசியம்தானா?**

மனிதனுக்கு அவசியம். ஆனால் தமிழினத்துக்கு அது இல்லாது போகிறதோ என்று எண்ணத்தோன்றுகிறது.

எங்கும் எதிலும் ஏன் நமக்கு வீண் தொல்லை என்று விலகிப் போகப் பழகிக் கொண்ட இனமாக தமிழினம் மாறி இருக்கிறதே. எதற்கும் பழக்கப்படக்கூடிய, தன்னை அதற்கு இசைவாக்கம் அடையச்செய்யும் ஒரு பச்சோந்தி இனமாக தமிழினம் மாறிக் கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

ஜூபா — கரவெட்டி

**உண்மையாக கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சி பதவி வேண்டுமா வியாசரே?**

கூட்டமைப்புக்கு வேண்டுமோ இல்லையோ இப்படிப்பட்ட, எதற்கும் தலை அசைக்கும் எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கு வேண்டும். அதனால் இந்த நல்ல ஆட்சி நிலைக்கும் வரை எமக்கு எதிர்க்கட்சிப் பதவி கன்போம். கூல்.

தோஜி — கிளிநொச்சி

**தமிழன் அன்று ஆயுதத்தால் அழிந்தான். இன்று போதையால் அழிகிறான். அழிவது தான் தமிழன் தலைவிதியா?**

காலா படத்தில் வில்லனின் பேத்தி காலா யார் என்று கேட்க, அதற்கு வில்லன் இராவணன் என்கிறான். அதற்கு பேத்தி அப்படி என்றால் காலா இறந்து விடுவாரா என்று கேட்க சிரித்தபடியே வில்லன் சொல்வான்.
''என்ன செய்ய வான்மீகி அப்படி எழுதி வைத்து விட்டேனே'' என்று.
கடவுளின் எழுத்தை மாற்ற முடியுமா என்ன.

இன்பா — சுழிபுரம்

**சேவை செய்யும் மனம் உள்ள மனிதரை உருவாக்குவது எப்படி?**

அது அடிமட்டத்தில் இருந்து கட்டி எழுப்ப வேண்டிய விடயம். மூன்று மாடிக்குப் போட்ட அத்திபாரத்தில் ஐந்து மாடி கட்டமுடியாதல்லவா. அது போலத்தான் அத்திபாரத்தை சரியாகப் போட்டால் எல்லாம் சரிவரும்.

கலை — மிருசுவில்

**கொள்கை-கொள்ளை இரண்டையும் ஒப்பிட முடியுமா?**

கொள்கை கொள்கை என்று கொள்ளை அடித்தோற்கு தொல்லை இல்லை. அவர் நாலு தலைமுறைக்கு சொத்துச் சேர்த்துவிட்டார்.

இந்த நாலு தலைமுறை அல்ல அடுத்த நாற்பது தலைமுறைக்கும் உமக்கு நிம்மதி இல்லை என்ற தத்துவம் புரியாத மடையர் அவர்.

ஜோன் — சண்டிலிப்பாய்

**இப்போதைய பெண்களின் கலாசாரம் எப்படி இருக்கிறது?**

நீங்கள் என்னத்தைச் சொன்னாலும் இந்த லெக்கின்ஸ் என்கின்ற கொடுமையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பெண்-ஆணுக்கு உடை அணிய உரிமை இருக்கிறது. அது அடுத்தவரை சங்கடப்படுத்தாத வரையறையில் இருக்கவேண்டும் என்பது எமது கருத்து. அவ்வளவுதான்.

மதீசன் — நல்லூர்

**நாட்டின் கடன் சுமையைக் குறைக்க சனிக்கிழமையும் அரச வேலை நாள் ஆக்கலாமே?**

இந்தத் திட்டம் கடன் சுமையை அதிகரிக்குமே தவிர குறைக்காது தம்பி.

உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்

## மீட்புக்காக

கனவா...?
நாங்கள் மலரில் உறங்கிய காலங்கள்
கனவாகி விட்டதா?
இதுதான் நிஜமா?
முள்ளில் கிழிபட்டுக் கொண்டிருக்கும்
இந்தக் காலங்கள்தான் நிஜமா
பறப்பதற்கு எங்கள்
வானம் எமக்குக் கிடைத்தால்
எங்களாலும் பறக்கமுடியும்
எங்கள் சுவாசங்களை விற்றாவது
எங்கள் மண்ணை வாங்க
நாங்கள் தயார்
ஆனால்...
ஏற்கனவே
விலைபோன சுவாசங்களின்
நிலை...?

எஸ்.ஆர்.ஆனந்தன்

## காலச் சோதனைகள்

உள்ளதெல்லாம் அள்ளுகின்ற
கள்ள மனிதரிடை
குள்ளமனிதரும் வந்திட்டார்!
குழப்பத்தை ஏற்படுத்த
இனியா பஞ்சம்?
கேட்கும் உரிமைகளை
போட்டு இழுத்தடிக்க
வாட்டும் வாள்வெட்டு!
மீண்டு எழக்கற்பவர்க்கு
மிரட்டும் மின்வெட்டு!
நூலகத்தைப் பொசுக்கியும்
தரப்படுத்தித் தாழ்த்தியும்
கொத்தாய்க் கொன்றொழித்தும்
உரம் குன்றா மாணவரை
பரீட்சையிலே பழுதாக்க
கயமைகள் தரும் தடையோ?

இரா.ஜெயக்குமார்

கவிதைக்கலசம்

## தந்தைக்காய்



தந்தையே! உன் புகழ்பாட வார்த்தைகளை தொகுத்தேன்
அடடா! என்ன ஒரு அதிசயம்
வார்த்தைகளிலும் ஒரு கவிதை வாசம்
ஏழு ஸ்வரங்களும் இசையமைக்க
நடன பேதங்கள் சுவையமைக்க
அரங்கேறியது என் பரத நாட்டியம்
நாட்டியம் முடிந்து விட்டது
அதற்காக நீ பட்ட கடனோ முடியவில்லை
புரிந்துகொள்கிறேன் இன்று நீ மாடாய் உழைத்து
ஓடாய்த் தேய்வதெல்லாம் எனக்காகத்தான்
குறித்து வைத்துக்கொள் கழியட்டும் சில வருடம்
முடியட்டும் என் கல்வி என்னை நெஞ்சில் சுமந்த உன்னை
நானும் சுமப்பேன் ஒரு தாய்போல உன் மகள் நான்

ஸ்ரீ.லாதுஷா, அச்சுவேலி மத்திய கல்லூரி.

## சுதந்திர நாட்டின் அடிமைகள்

அந்நியனிடம்
வாங்கிய சுதந்திரம்
இரு இனங்களுக்குள்
அடகு வைத்தோம்...


ஒரு உலகில் பிறந்த நாம்
என்றொருபோதும்
எண்ணியதில்லை...

இரு இனம் ஆகிவிட்டோம்
இருக்கவேண்டிய இடத்தில் இல்லை?
இணக்க சபை...

இன்னும் இருக்கிறது சுதந்திரம்...
என்று எண்ணுகின்றோம்- எம்
மூக்கின் துவாரத்தை
முடக்க இல்லை இரு விரல்
என்றெண்ணும் போதெல்லாம்

இருந்தும்;
சுதந்திரமாய் காற்றைச் சுவாசிக்கும்
நாம் யாவரும்...
சுதந்திர நாட்டின் அடிமைகளே...!

ஸ்ரீயோதா, மண்டைதீவு



## வாள் எடுத்த ராசாவே

07

வாள் எடுத்து பிறர்
வாழ்வழிக்கும் ராசாவே

அன்றொரு நாள்
தாய் மண்ணை நேசித்த
சரித்திர நாயகர்கள்
நினைவு நாளது

ஊர்தி வருவது கண்டு
நீ ஓடோடி வந்து
மல்லிகை மலர் பறித்து
அவர்தம் பாதம் தூவி
அஞ்சலித்தாயே!

ஆண்டவா!
என்மகன்
மண் பற்றுக்கொண்டவனாய்
மலர்ந்திருக்கிறானே என்று
நான் அடிவயிறு வருடினேனே!

இன்றோ- நீ
அண்டாதவர்களை
எல்லாம் அண்டி
அடி வருடியாய்
மண்டியிட்டுக் கிடக்கிறாய்

உண்மை நாயகர்கள்
இலையில் மறைந்த
கனியாய் எங்கோ மறைந்திருக்க
உன்னை நீ நாயகனாய்
எண்ணி எண்ணி
எதைக்கண்டாய்
உன்வாழ்வைத்தான் அழித்தாய்

விஜயும் அஜித்தும்
வருவார்களா உன்
வாழ்வைச் சீர்செய்ய
வீணாய்ப் போனவனா நீ?
விளங்காது போனாயே!

(அடுத்தவாரம் ராசா வருவான்...)

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 409



## இதயம் மட்டும் இயங்குபவை

ஊனுண்ணிக் கழுகுக்கும்
உனக்கும் தான் போட்டி
தானுண்டு பசி தீர்க்க
தருணம் பார்த்திருக்கிறது

பட்டினியால் நின் வாழ்வு
பட்ட நிலை யாயிற்று
எட்டுதற்கு ஏதுமில்லா
இவ்வாழ்வு நிலைத்ததனால்

எல்லாம் வலுவிழந்து
இதயம் மட்டும் இயங்குவதைப்
பொல்லாச் சமூகம் உனைப்
பொழுது போக்காய்ப் பார்க்கிறது.

வாகை வளவன்
நாரந்தனை

## மனித மேன்மை!

பசியைப் போக்க
காத்திருக்கும் கழுகு!
விதியை வெல்ல முடியாது
மாண்டு கொண்டு
இருக்கும் மானிடம்!

அழிக்கும் போதும்
அள்ளிக் கொடுக்கும்
போதும் இயற்கை
ஆள்பார்த்து செய்வதில்லை
பகிர்ந்துண்டு வாழ்வதில்
தான் இருக்கின்றது
மனித மேன்மை!

இ.ஜெ.பாலன்

## அபாயம்

தூரத்தில் கழுகு தன்
இரைக்காகக் காத்திருக்கின்றது
அதுவே கொஞ்சம் அருகில்
வந்தால் அமர்ந்திருக்கும்
இச்சிறுவனின் நிலையோ
அதோ கதி

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

## சுத்தம் பேணு

சுத்தம் என்பதிங்கே
உனக்கிருந்தால்தான்
சுற்றம் என்பது என்றும்
சுகமாய் வாழும்
குந்தியிருந்து குனிந்து நீ
எலும்பும் தோலுமாய்
தேய்ந்து போகமாட்டாய்

சி.திவ்வியா, யா/ ப.மெ.ம.வி

## எலும்புக்கூடு

சோமாலியாவின் அடையாளச்
சின்னம் இது
பஞ்சமும் பசியும்
பரட்டை விரித்து ஆடுகின்றது
பூச்சிகளும் புழுக்களும்
இவர்களின் உணவாகும்
இதனை தேடி அலையும்
சிறுவன் நம் நாட்டில்
கோயில்கள் தோறும்
அன்னதான மடங்கள்
பசிப் பிணியை போக்கும்
இங்கே மனித எலும்புக்
கூறுகளை கிளறுகின்றனர்


பா.கலாதேவி
சண்டிலிப்பாய்

## திரும்பிப்பார்

சின்னஞ்சிறு தம்பி
மண்ணைத் தோண்டி
தேடுவது எதுவோ
உன் கள்ளம் கபடமற்ற
உள்ளமதில் புதைந்துள்ள
திறமைகள் வயது வர
வெளிக்கொணரத் துடிக்கிறாயா?
உன் பின்னால்
கெட்ட குணம் படைத்த
கழுகுவின் பார்வைக்கு
இலக்காகி விடாதே!
திரும்பிப்பார்! தவறிக்கொள்
நாளை உலகு உன்கையில்

அபிகுலமாலிகா
சங்கானை

# இவ்வார மௌனத்தின் தேடல் -410



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## பசியும் பலியும்

இறப்பின் நேரம்
பரம ரகசியமானாலும்
பலியெடுப்பவருக்கு
தெரிந்திருக்கின்றது
வறுமை மட்டுமல்ல
தனிமையும் கூட
இதற்கு உடந்தை
வசதிகள் குறைதலும்
அசதிகள் வருகையும்
செய்திகளாகின்றன
தனியொருவனுக்கு
இல்லை உணவெனில்
இவ்வுலகையழித்திடும்
கவிஞரின் பொங்கும்
தார்மீகக் கோபம்
யாருக்கும் புரிவதில்லை

க.நாகராசா
நுணாவில்

## பஞ்சமற்ற கருணை

உறவில்லை:உடையில்லை
வெண்பனி உருகுமளவில்
வழி மறிக்கும் தோற்றம்
வெருவி அப்பால் விதிர்த்து
வினை வேண்டி ஓயும்
விதியறியா புண் பயிரை
மேயவந்த சிறு பட்சி
அதன் கோலத்தை நோக்கி
முகவரி தேடியது...
பட்சியின் பசி ஓய்ந்து
கருணைக்கு சிப்பியானது

சு.சுருத்திகா
யா/வ.ம.க.

## முறையோ?

சூடானில் இருந்த
கழுகு குழந்தையை
நான் உண்ணவில்லை என
பொய்யுரைக்கவில்லை
படம் பிடித்த கெவின் கார்ட்டரும்
கழுகை நான் கலைத்தேன்
குழந்தைக்கு உணவு
கொடுத்தேன் என
பொய்யுரைக்கவில்லை
ஆனால் இறைவா!
பல்லாயிரம் தமிழ் மக்களையும்
நாம் கொல்லவில்லை
என செப்புவது முறையோ.

எம்.டிவாகரன், பருத்தித்துறை

# காலதேவி

என் விதி காலதேவியின் போர்வைக்குள் சிக்குண்ட சிறு விலங்காய் தத்தளித்தபடி இருக்கின்றது. அருவமான என் தோற்றத்துடன் காலத்தின் கோலங்களைக் கணிப்பீடு செய்து கொண்டிருக்கின்றேன். சாதாரண சமத்துவக்குடியில் ஜனித்த நானோ காலதேவியின் காதலனாக காலசஞ்சாரம் செய்து கொண்டிருக்கின்றேன். என் சொந்தம், பந்தம், உறவு, காதல், நட்பு ஆகிய மனித துறவுகோல்களை விடுத்து தூரத்தே கோள்களை கடக்கும் இந்த அறிவியல் தாண்டிய நிலை; இறைவன் எனக்களித்த வரமா! சாபமா!

2007 ஆம் ஆண்டு புவத்தோரிக்கோ தீப கற்ப ம




வழியாக புளோரிடா நகரை அடையவிருந்த AMD-007 ரக விமானத்தில் விஞ்ஞான ஆய்வாளன் போட்டிக்கு தெரிவாகியிருந்த நானும் என் குழுவும் பயணத்தை மேற்கொண்டிருந்தோம். புளோரிடா நகரில் நடைபெறவிருந்த போட்டிக்கு தயாராகிய நிலையில் நாம் சல்லாபனைகளை சஞ்சலமற்ற மனதுடன் பகிர்ந்து கொண்டோம். நாம் எம் குடாநாட்டில் இருந்து புறப்படும் சமயம் எமக்குக் கிடைத்த வரவேற்புகள், பாராட்டுகள் எம்மை மெய்சிலிர்க்க செய்துவிட்டமை ஒருகணம் எண்ணிவிட்டு பிரம்மித்து போனோம்.

திடீரென்ற நடுக்கம்! விமானம் புரள்வதைப் போன்ற எண்ணத்தை எம்மில் ஊடுருவச் செய்தது. தரைமார்க்கமாகச் சென்ற எம் விமானப் பாதை, தொழிற்சாலைகள் வெளியிட்ட மீதேன் ஐதரசன் வாயுவால் சங்கடத்தை எதிர்கொள்ளவே கடல் மார்க்கத்தை விமானிகள் தெரிவு செய்தனர். அங்கேதான் மர்மத்தின் பாசக்கயிறால் எம் விதி கட்டுண்டது. ஆம்! இதுவரை நாளும் பல செய்திகளிலும் பத்திரிகை விமர்சனங்களிலும் நாம் கேட்டிருந்த பர்மியூடா பிரதேசம் எம் கண்முன்னே பிரதிபலித்தது. கட்டுக்கதை என்று அறிவியல் ரீதியாக பர்மியூடாவை பரிபாவனை செய்த அச்சமின்றிய எம் பயணிகள் மனம் ஆழ்ந்த அதிர்ச்சியை அடைந்ததை நான் கண்ணூடாக கணித்தேன்.

ஆம்! திடீரென்ற புயல் நாம் சென்ற விமானத்தை கடல்நடுவில் ஈர்க்குமாறு பலத்த சூறாவளியால் உருவானது. விமானத்தில் செய்வதறியாது இருந்த எமக்கோ ஆறுதல் சொல்ல எவரும் இல்லை. சூட்சுமமான சூழல் கடல் நடுவே அத்தராட்சசனின் அகண்ட தாடையைப் போல எம் விமானத்தை விழுங்கியது வரை என் கண்ணின் கருமணி செயற்றிறனுடன் காட்சிப்படுத்தியது. ஆனால் சுழலுக்குள் சிக்குண்ட பின் என் கண்களின் ஆலிங்கணம் நீண்ட நேரம் நீடித்திருந்தது... கடும் பனிக்காலத்தில் இருட்டை விலக்கியபடி வெம்மை தணிந்த சூரியன் மங்கலாக உதயமாவதைப் போல அந்தக் கடும் விந்தையான நிகழ்வுகளைக் காட்சிப்படுத்திய என் கண்கள் அகல விரித்தன.

அங்கே நான் கண்டதோ ஒரு அதிசயிக்கத்தக்க காட்சி. என் உடலில் கடலில் நனைந்த ஈரம் ஒருதுளி கூடக் காணப்படவில்லை. என் ஸ்பரிசம் காற்று, நீர், நிலம் போன்ற பஞ்சபூதங்களை எட்டியதாய் தென்படவில்லை. ஆம்! நான் வெற்றிடம் எனும் குறிப்பிட்ட பிரபஞ்சப் பகுதியில் நைந்து கொண்டு நின்றேன். என்னால் என் உடல் தசைகளை கொண்டு தர்க்க வேலைகளைச் செய்யமுடியவில்லை. என்னுடைய பரிமாணம் மாறியதாக உணர்ந்தேன். உண்மைதான்! முப்பரிமாணமாய் உலக சுகங்களை அனுபவித்த என் உடல்; தேஜஸ்; கட்டழகு என்பவற்றை மறைத்து காலச்சக்கரத்தில் சுழறப்படக்கூடிய எண் பரிமாணத் தோற்றத்தை எட்டியிருந்தது. என்னைச் சுற்றிலும் நீல நிறக்கதிர்கள் அறுசுவை உணர்வை ஈக்கள் மொய்ப்பதைப் போல உடலற்ற அருவமான என்னை ஸ்பரிசித்தவாறு இருந்தன. திடீரென்று கதிர்களின் வெப்பத்தன்மை அதிகரிக்கவே அவை என்னை மகரந்தமணியை சூலகம் ஈர்ப்பது போல காந்தவிசைமூலம் காரிருள் கொண்ட பகுதியை நோக்கியபடி நகர்த்தியது. அந்தக் கணம், தமிழீழ மக்கள் அரசாங்க தேசியத்துவத் திணிவால் அகதிகளாய் வேதனைகளின் மத்தியில் புலம்பெயர்ந்த துன்பத்தை பரீட்சயமாக உணர்ந்தேன். அந்தக் காலங்களில் இலங்கையில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட போரை; அது நிகழ்ந்த தினங்களை; கறுப்பு ஜூலை என்று அழைத்தார்கள். கறுப்பு என்றால் துன்பம் போலும். அந்த ஈர்ப்பின் விசை என்னை கருங் குழியில் (பிளாக் ஹோலில்) பரித விக்க விட்ட போது என் மனம் படபடப்புடன் பறந்து திரிந்தது.

கருங்குழியானது கருஞ்சுழலாய் என்னை தன்வசம் ஈர்த்தது. என் உடலற்ற எண் பரிமாணம் எண்ணிலடங்காச் சோதனைகளை அனுபவித்தது தொடரற்றதாக அமையும் என்று எண்ணிய என் பயணம் இறுதியில் நீல ஒளியின் பிரவாகத்துடன் மூர்ச்சையடைந்தது. அந்த ஒளியின் வேகத்தால் சிறிது நேரம் என் கண்கள் ஆலிங்கணம் செய்து கொண்டன. அதன் பின் நான் கண்ட காட்சியோ என்னை பிரம்மிக்கச் செய்துவிட்டது. ஆம்! முரசுகள் கொட்டியபடி ஒரு கம்பீரக்கூட்டம் என் முன்னே. இயற்கை அன்னை தன் எழில் எனும் முந்தானை விரித்தபடி பரவசமூட்டும் வளங்களை எய்திருந்தாள். நான் நீல ஒளிக்குள் அகப்பட்ட பின் என்னை வருடிய காற்றோ என் மயக்கத்தைத் தெளித்தது. அருவமான என் உடல் காற்றில் மிதந்த வண்ணம் அந்த அழகை ரசித்து களிப்பெய்தியது. அங்கே; ஒரு கம்பீரமான கட்டழகு கொண்ட வீரன்; கைகளில் மங்கள வாள்- மங்கள வாள் என்பதன்மூலம் வாசகர்களுக்கு வாஞ்சையாக நான் எண்ணியதை கூற விளைகிறேன். அன்று தன் குடிநாட்டைக் காக்கவும் எதிர்வினைகளை அழித்து தர்மத்தை நிலைக்கச் செய்யவும் மட்டுமே இந்த மங்கள வாளானது குறியீடாகியது. ஆனால் இன்றோ துரோகம், கோபம், பகை போன்ற உள் குதர்க்கங்களுக்காக எம் குலத்தவர் அர்த்தமின்றிய அற்புதக் குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர். ச்சே! என்னே ஒரு அவலம்; என் விந்தையான சிந்தை இன்றைய எம் தமிழர் சீர்கெடும் விதத்தை சற்றே எண்ணி வெட்கித்தது. அங்கே சூரியத் திலகம் இட்டபடி முன்னோக்கி நடந்தவனை; சோழர் திலகம், குலசேகர மகாவீரன் வாழ்க! என்ற கோஷங்கள் உற்சாகப்படுத்தின. உண்மையில் அங்கே நான் வியூகித்தது சோழர்கால கலை மரபையே. ஆம்! ஆயிரம் நூற்றாண்டுகள் காலசஞ்சாரம் செய்து காலதேவியின் காதலனாய் இந்த இடத்தை அடைந்தேன். அந்தச் சோழ மன்னனின் பின்னே என்னை ஒத்த தேஜஸ், வடிவம், கட்டழகு கொண்ட ஒரு ஆண்மகன். அநேகமாக அவன் மன்னனின் மகவாக இருக்க வேண்டும். அவன் பின்னே ஒரு பெண்- மன்னிக்கவும் அழகில் அமுதுபோல் உறைந்த ஒரு பெண். அவளது உடல் சூரிய ஒளியில் கனிந்த மாங்கனி பட்டுப் பிரகாசிக்கும் தேஜஸ்களைக் கொண்டிருந்தது. அணங்கு என்ற சொல்லுக்கு அர்த்தத்தைத் தருபவள் போல அவளது முகம் அமைந்தது. அந்தத் தேவதை முடிசூடா சோழ இளவரசனின் மனைவி போல் எனக்குத் தெரிந்தது. ஆனால்... என் வாஞ்சையோ வறண்ட நிலத்தில் நீர் தேடும் நீர்ப்பறவை போல மாறிவிட்டதோ உண்மை. ஆம்! அத்தனை புடைசூழ அழைத்துவரப்பட்ட அந்தப் பெண் நீலப்போர்வையான தென் கடலில் அஸ்தி கரைப்பதைப் போல கைவிடப்பட்டு செல்லப்பட்டாள். அவளது கணவனோ; வீரம் தளைத்த சோழனோ அதர்ம, அநீதியை முறுகிய மீசையுடன் கண்களின் களிப்புடன் கண்டு களித்தார்கள். ஆம்! அன்றைய சோழர் வழக்கப்படி கடற்கோள் ஏற்படுவதாக கணிக்கப்பட்டால் நாட்டின் திலகமிடப்பட்ட பருவப் பெண்ணை கடல்தாய்க்குப் பலி கொடுத்து ஆற்றுப்படுத்தி தம் மூட நம்பிக்கையின் சாகசத்தை முறைசேரியாக அறிவிப்பார்கள். இவ்விதமே, இந்தப் பெண்ணும் தன் கணவன், சோழன் போன்ற கல்நெஞ்சம் படைத்த மனித வர்க்கத்தினரிடம் விடைபெற்று கடலில் மூழ்கி உயிரை விட்டாள்... உருவமற்ற எனக்கும் கண்ணீரின் வலி புரிந்தது. திடீரென்ற இடிமுழக்கம்; மின்னல் கீற்று; கடல் கொந்தளிப்போ கதிரவனை மறைப்பதாய் நிலத்தைத் தாக்கியது. அற்புதம்! என் கண்ணீர் கரைந்தது வீண் போகவில்லை. சோழ சாம்ராச்சியம் இயற்கை அன்னையின் முதல் கடற்கோள் சீற்றத்தை எதிர்கொண்டு அழிந்து போனதை சங்க காலத்தில் நிறைவை- என் கண்ணூறக் கண்டேன்; இயற்கையும் ஒரு பெண் தானே. பெண்ணின் கதறலை பெண் அறிவாளே என்ற ஆனந்தம்; இன்றைய எம் சூழலில் பெண்களைத் துச்சமாக மிதிக்கும் கொடூரர்கள், காம போதையில், பலீக வெறியில் பெண்களை வயது பேதமின்றி பலாத்காரம், கொலை செய்யும் சமூக விரோதிகள் எவ் வாறு இயற்கை யின் பிடியில் தத்தளிப்பார்கள்! அவர்களின் துரதிர்ஷ்ட விதியின் நிறைவு என்ன! என்ற பற்பல கேள்விகள் என்



மனதில் கணீர மணியாய் ஒலித்தன. மீண்டும் அதே நீல ஒளி என்னை வேறோர் காலத்தில் புகுத்துவதற்காக ஆயத்தம் செய்து கொண்டது. நீலத்தெறிப்பு உடலெங்கும் ஈர்ப்பு விசையை செலுத்தி என்னை தன் ஆளுகைக்கு ஈர்த்தது. முன்பிருந்த படபடப்பு அச்ச உணர்வு என்னுள் இல்லை. தமிழன் வீரத்தின் விளைமரம்; தைரியத்தின் ஊற்று. ஆகையால் என்னவோ என்னி டம் பதற்றம் விடை சொல்லிப் போய்விட்டது. இந்தப் பயணம் என்னை அழைத்துச் சென்றதோ பல வருடங்கள் கழியப்போகும் எதிர்காலம் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. கருங்குழியின் சுழலின் வேகத்தை மிஞ்சிய என் விவேகம் அடியெடுத்து வைத்ததோ ஒரு புது உலகில். ஆம்! இயற்கை எனும் பூமியின் போர்வை தடையின்றி காணாமல் போயிருந் தது. கண்டுபிடித்துத் தரச் சொல்வதற்கு கைப்பொம் மையோ கைக்கிரீடமோ இல்லையே. மனிதன் வாழ்க்கை எனும் அத்தியாயத்தை ஆரம்பிக்க உதவி புரிந்ததே இந்த இயற்கைதான். ஆனால் முகப்புத் தெரிய ஆல மரமோ, வேப்பமரமோ வேரூன்றி நின்ற நிகழ்காலம் மாற்றம் பெற்று மொகலாயப் பெண்கள் முக்காடு அணிவதைப் போல வான்ளாவிய கட்டடங்கள் இயற்கையான சூரியக் கதிர்களை மறைத்து எழுச்சி பெற்றன. ஆறடி நீளமுள்ள தொலைக்கதிர் உற்பத்திகளே பல் மடங்கு சூரிய ஒளியின் சக்திப் பிரவாகத்தை அளித்திருந்தன. கண்ணுக்கெட்டிய வரை கல்லோ; மண்ணோ; கடலோ இல்லை. சுவாசிக்க முடியாதவனாய் சுத்தமான காற்றை மட்டும் என்னால் பிரித்தறிய முடியவில்லை. என்னைப் போன்ற மனித வர்க்கத்தவர் வேற்றுக்கிரகத்தவர் போல பெருத்த தலைகளையும் சற்றுக் குறுகிய உடலமைப் பையும் கொண்டிருந்தனர். ஆனால்! நான் கண்ட பரிதாபமான காட்சியே மீண்டும் என் அருவக்கண்களில் அரும் கண்ணீரை ஊற்றெடுக்கச் செய்தது. ஆதி மூல மான நீர் அரும் சொத்து. சிறு குவளையில் அடைக்கப் பட்டு வறண்ட நாவுகளை சாந்தப்படுத்த பெட்டிகளில் அடுக்கப்பட்ட பணப்பங்குகளு க்கு குவளை முறையில் வழங்கப்பட்டது. அன்று பொய்யாமொழிப்புலவர் செப்பியது என் நினைவை எய்தது. சாதாரணமாக நான் நிகழ்கால உலகில் நீரைத் துஷ்பிர யோகம் செய்ததன் விளைவு எதிர்கால உலகில் அருகிய நீரை அடைந்து பருக முற்படும் தொழில்நுட்ப அறிவாளர்களின் வாழ்க்கையின் சாராம்சத்தை தீமானித்ததை எண்ணி ஒருமுறை வெட்கித்தேன். இயற்கை அன்னை தன் மலட்டுத்தன்மையை அனுகியிருந்த சோதனை என்னை மேலும் மேலும் விரக்தியடையச் செய்தது. இந்தக் காலத்தில் மீண்டும் அதேஒளி; அதே சூழல் எங்கே போகிறேன் என்ற வியூகம்; யூகிப்பு இல்லை- காலதேவியின் காதல னாக அண்டத்தின் வெளியில் அலைந்து கொண்டிருக்கின்றேன், சாபமல்ல பெரும் வரமாய்...




தி.பிரசன்னா
யாழ்.இந்துக் கல்லூரி

# கேரளாவை புரட்டிய பேய்மழை

கேரளாவின் இயற்கை அழகையும், அந்த மாநில மக்களின் இயல்பு வாழ்க்கையையும் புரட்டிப்போட்டிருக்கிறது இயற்கைச் சீற்றம். கடவுளின் தேசத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே வெள்ளக்காடு. சரிந்துகிடக்கும் மலைகளையும், நொறுங்கிப் போயிருக்கும் குடியிருப்புகளையும் காணும் போது, நெஞ்சம் பதறுகிறது. மழையால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை இருநூறை நெருங்குகிறது என்பது இந்திய தேசத்துக்கே பெரும் சோகம்.

ஓகஸ்ட் 8 ஆம் திகதி ஆரம்பித்த மழை, விடாமல் பல நாட்கள் பெய்ததால், மத்திய - வட கேரளப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி மூச்சுத் திணறுகின்றன. அணைகள் அனைத்தும் நிரம்பியதால், 22 அணைகள் திறக்கப்பட்டன. ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

26 ஆண்டுகளுக்குப் பிறகு, முழுக் கொள்ளளவை எட்டிய இடுக்கி அணை திறக்கப்பட்டது. அதனால், செருதோணி ஆற்றில் வெள்ளம் பாய்ந்தது. சிறிய நகரமான செருதோணி பெரும் வெள்ளத்தில் மூழ்கியது. கேரளா வின் மிகப்பெரிய ஆறு என வர்ணிக்கப்படும் பெரியாறில் வெள்ளம் ஏற்படவே, ஆலுவா மற்றும் கொச்சி நகரங்கள் மூழ்கின. ஒரே நாளில் ஆயிரக்கணக்கான மக்களைத் தண்ணீர் சூழ்ந்து கொள்ள சிலர் உயிரிழந் னர். மலை மாவட்டங்களான வயநாடு மற்றும் இடுக்கியில் நிலச்சரிவு ஏற்படவே, பலி எண்ணிக்கை உயர ஆரம்பித்தது. பலர் காணாமல் போயினர். இடுக்கி, வயநாடு உட்பட எட்டு மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டு, மீட்புப் பணியை முடுக்கி விட்டது கேரள அரசு.

தமிழர்கள் அதிகளவில் வாழும் இடுக்கியை மழை வெள்ளம் மிகக் கடுமையாகப் பாதித்துள்ளது. அடி மாலியில் ஏற்பட்ட நிலச் சரிவில் இரண்டு குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பலியானார்கள்.

"கேரளாவில் அதிக பாதிப்பை சந்தித்தது இடுக்கி மாவட்டம் என்றால், இடுக்கியில் அதிக சேதங்களைச் சந்தித்தது தமிழர்கள் வசிக்கும் தேவிகுளம்தான். மழைக்கு பலர் உயிரிழந்துள்ளனர். 500 இற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து முகாம்களில் தங்க் வைக்கப்பட்டுள்ளனர். விவசாய நிலங்கள் அழிந்து விட்டன. நிலம் மற்றும் வீடு இழந்தவர்களுக்கு ரூ.10 இலட்சமும், உயிரி ழுந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 இலட்சமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீட்புப் பணி தீவிரமாக நடந்து வருகிறது. மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் முகாம்களில் செய்து தரப்படுகின்றன" என்றார்.

தமிழர்கள் அதிகம் வாழும் தேவிகுளம், பீர்மேடு, உடும்பன்சோலை போன்ற பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. உணவு, தண்ணீர், உடை போன்ற அடிப்படை வசதி கள்கூட கிடைக்காமல் மக்கள் சிரமப்பட்டனர். இப்போது நிலைமை பரவாயில்லை. பலர் தங்கள் உறவினர்களையும் உடைமைகளையும் இழந்துள்ளனர். வாழ்வாதாரமாக இருந்த நிலங்களை மண்சரிவு காவு வாங்கி விட்டது. மாநில அரசு அறிவித்திருக்கும் நிவாரணத் தொகை என்பது போதுமானதாக இருக்காது" என்றார். உடும்பன் சோலை பகுதியில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏலக்காய் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளில் முக்கால்வாசிக்கும் அதிகமானோர் தமிழர்கள்.

தொடர் மழை மற்றும் நிலச்சரிவால் ஏலத்தோட்டங் கள் முற்றிலுமாக அழிந்துள்ளன. "ஏல விவசாயம் மிகப்பெரிய அழிவைச் சந்தித்துள்ளது. ஜூன் கடைசியில் வீசிய பேய்க்காற்றில், பெரும்பாலான ஏலத்தோட்டங்கள் சேதமடைந்தன. காற்றிலிருந்து காப்பாற்றி வைக்கப்பட்ட ஏலச் செடிகள், தற்போதைய மழையால் முற்றிலும் அழுகி விட்டன. இதே நிலைதான் மிளகுத் தோட்டங்களுக்கும். ஹெக்டேயர் ஒன்றுக்கு வெறும் ரூ.80 ஆயிரம் தருவதாக மாநில அரசு கூறுகிறது. ஆனால், ஓர் ஏக்கர் வைத்துள்ள விவசாயிக்கு ரூ.5 இலட்சம் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒருபுறம் மழையால் வீடுகளை இழந்து, மறுபுறம் விவசாய நிலத்தையும் இழந்து நிற்கிறார்கள் தமிழ் மக்கள். இந்த மழையா னது தமிழகத்தின் தேனி, கேரளாவின் இடுக்கி மாவட்டங்களின் பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும்" என்று சோகத்துடன் கூறினார், ஏல விவசாயியும், உடும்பன் சோலை சட்டமன்றத் தொகுதியின் பி.ஜே.பி.தலைவருமான குமார்.


கடுமையான பாதிப்பில் மாநிலம் சிக்கியுள்ள சூழலில், தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் ரமேஷ் சென்னிதாலாவுடன் ஹெலிகொப்டரில் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார் முதல்வர் பினராயி விஜயன். பாதிப்புகள் மிகமோசமாக இருப்பதை அறிந்து மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் கேரளா வந்து பினராயி விஜயனுடன் பாதிப்புகள் குறித்துக் கேட்டறிந்ததுடன், முதல்வருடன் ஹெலிகொப்டரில் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நடவடிக் கைகளில் மாநில அரசுக்கு உதவுமாறு பி.ஜே.பியினருக்கு அதன் மாநிலத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த ஒற்றுமை, வெள்ள பாதிப்புகளிலிருந்து கேரள மக்களை நிச்சயம் மீட்கும்.


மீட்புப்பணி...


வெள்ளம் சூழ்ந்த வீடுகள்...


நிவாரண முகாம்....

# தீதும் நன்றும் பிறர் தர வாரா...



★ முன்பு ஜெர்மனி நாடு பிளவுபட்டிருந்தபோது பெர்லின் நகரத்தை கிழக்காகவும் மேற்காகவும் பெரிய மதில் சுவர் பிரித்தது.

★ஒருநாள் கிழக்கு பெர்லினை சேர்ந்த சிலர், ஒரு லொறி நிறைய குப்பை கூழங்களை கொண்டு வந்து மதில் தாண்டி மேற்கு பெர்லின் பக்கம் கொட்டினார்கள். அவ்வளவு குரோதம் !

★மேற்கு பெர்லினை சேர்ந்த மக்களும் அதே மாதிரி செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை. மாறாக ஒரு லொறி நிறைய உணவு பொருட்கள், ரொட்டிகள், பால் பொருட்கள் மற்றும் மளிகை சாமான்களை கொண்டுவந்து மதில் தாண்டி இந்த கிழக்கு பெர்லின் பக்கம் அழகாக அடுக்கி வைத்துவிட்டு போனார்கள்.

மேலும் அதன் மீது இவ்வாறு எழுதி வைத்து விட்டு போனார்கள்

★ "ஒவ்வொருவரும் தன்னிடம் என்ன இருக்கிறதோ அதைதான் கொடுப்பார்கள்"

★"EACH GIVES WHAT HE HAS"

எவ்வளவு நிதர்சனமான உண்மை....! உங்களிடம் இருப்பதை தான் உங்களால் கொடுக்க முடியும்.

★ உங்களுக்கு "உள்ளே" என்ன இருக்கிறது?

★அன்பா பகையா ?

★அமைதியா - வன்முறையா

★வாழ்வா - சாவா ?

★ உங்கள் திறமை, பலம் அழிவுப் பாதையை நோக்கியா - வளர்ச்சிப்பாதையை நோக்கியா

★ இத்தனை காலங்களில் நீங்கள் அடைந்தது என்ன ?

★ஒவ்வொருவரும் தன்னிடம் என்ன இருக்கிறதோ அதைத்தான் கொடுப்பார்கள்.

# இந்தியாவை ஒளிர வைத்த தலைவர்

# வாஜ்பாய்

ஆறு வெவ்வேறு தொகுதிகளிலிருந்து 10 முறை மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 3 முறை இந்தியாவின் பிரதமராக பதவியேற்றவர். இந்தியாவின் தவிர்க்க முடியாத அரசியல் தலைவர் வாஜ்பாய். "இந்தியா ஒளிர்கிறது" என உரக்க முழங்கியவரின் குரல்கள் இப்போது ஓய்வெடுக்கத் தொடங்கியுள்ளன .

வாஜ்பாய் எனும் உன்னதத் தலைவரின் வாழ்க்கை இந்திய அரசியலின் தவிர்க்க முடியாத காலம். இந்தியாவில் பி.ஜே.பி. காலூன்றக் காரணமாக இருந்த தலைவர். 1996 ஆம் ஆண்டு 13 நாட்கள், 1998 ஆம் ஆண்டு 13 மாதங்கள் எனப் பிரதமராகி பல சோதனைகளைச் சந்தித்தாலும் 1999 முதல் 2004 வரையிலான பி.ஜே.பியின் ஆட்சிக்கு அச்சாரம் வாஜ்பாய்தான். காங்கிரஸ் அல்லாத ஒரு பிரதமர் 5 ஆண்டுகள் ஆட்சிப் பீடத்தில் இருந்தார் என்றால் அவர் வாஜ்பாய் மட்டும் தான்.

வாஜ்பாய் எனும் கம்பீரமான மனிதனின் கணீர் குரலை இந்தியா கடைசியாக 2007 ஆம் ஆண்டு லக்னோ பாராளுமன்றத் தொகுதியில் கேட்டது. இந்தியாவின் நம்பிக்கைக்குரல், வளர்ச்சிக் குரல் என்று கூறப்பட்ட வாஜ்பாயின் குரல்கள் சிறு சத்தங்களாகக் கிருஷ்ண மேனன் மார்க்கில் அருகில் இருப்பவரின் காதுகளைக்கூட எட்டாத ஒலியாக இருந்தது. அவருக்குப் பாரத ரத்னா கிடைத்த போதுகூட அவரது ஒரு புகைப்படம் மட்டும் வெளியானது. அதிலும் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அதைத் தாண்டி எந்தப் புகைப்படமும் வெளியாகவில்லை. 9 ஆண்டுகளாக வாஜ்பாய் முகம் மக்கள் கண்ணில் படவே இல்லை. பி.ஜே.பியின் பிரசார விளம்பரங்களிலும் சிறியதாகவோ அல்லது சில நேரங்களில் பெயரோடோ சுருங்கிப் போனது வாஜ்பாய் எனும் இந்தியாவின் மூத்த அரசியல் முகம்.


2009 இற்கு முன்பு வரை ஓரளவு செயற்பாட்டில் இருந்த வாஜ்பாயின் உடல் நிலை 2009 இற்குப் பிறகு, சற்றுத் தளர்ந்து போனது. அவ்வப்போது பி.ஜே.பியின் இரண்டாம் கட்ட தலைவர்கள் வந்து சென்று கொண்டிருந்தனர்.

பின்னர் அதுவும் குறைந்தது. கை, கால் செயற்பாடுகள் முற்றிலுமாகக் குறைந்து படுக்கையில் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதவராய் இருந்தார் வாஜ்பாய். வாஜ்பாய் உடல்நிலை மோசமாகத் தொடங்கிய போதும்கூட தினசரி செய்திச் சனல்களை பார்ப்பது. லதா மங்கேஷ்கர் இசையில் நனைவது எனத் தன்னை உற்சாகத்தோடு வைத்திருந்தார். 2018 ஆம்ஆண்டு ஓகஸ்ட் 16 வாஜ்பாய் உடல்நலக் குறைவால் காலமானார். இந்தியாவை ஆளும் தேசியக் கட்சியும், இந்தியாவும் ஒரு மூத்த அரசியல்வாதியை இழந்து தவிக்கிறது.


பொக்ரான் அணு சோதனைக்கு முன்னின்றவர். பாகிஸ்தான் பேச்சுவார்த்தைக்கு வித்திட்டவர். இன்று ஆளும் பி.ஜே.பியின் ஆதி. தங்க நாற்கரச் சாலைத் திட்டம்தான் இந்தியச் சாலைகளின் தரத்தை உயர்த்தியது. இன்னும்சொல்லப்போனால் இந்திய நகரங்களை இணைக்க இந்தத் திட்டம் பெரும் உதவியாக இருந்தது. 'இந்தியா ஒளிர்கிறது" என்று உரக்க முழங்கினார், கல்விக்காக சர்வ ஷிக்ஷா அபியான் திட்டத்தைக் கொண்டு வந்தார். இந்தியாவின் வளர்ச்சி என்பது அபரிமிதமாக இருந்தது இவரது காலத்தில்தான். ஜிடிபியை 7 புள்ளிகளுக்கு மேல் கொண்டு சென்ற இந்தப் பிரதமரும் இவர்தான். வளர்ச்சியை நோக்கிய இந்தியாவை வழிநடத்த விரும்பியவர்.

"இந்த இளைஞன் நிச்சயம் ஒரு நாள் பிரதமர் பதவியை அலங்கரிப்பான்" என்ற ஜவஹர்லால் நேருவின் கனவை நிஜமாக்கியவர் அடல் பிகாரி வாஜ்பாய். 'பொக்ரான் நாயகன்', 'தங்க நாற்கரச் சாலை நாயகன்" என்றெல்லாம் அழைக்கப்படும் வாஜ்பாய்க்கு இன்னொரு பெரும் புகழும் உண்டு.

இந்தியப் பிரதமராக முழுப் பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்த முதல் காங்கிரஸ் கட்சியைச் சாராத பிரதமர் என்பதுதான். வாஜ்பாய் முழுநேர அரசியலிலிருந்து விலகி கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் ஆன பின்னும் அவரைப் பற்றிப் பேசுவதற்கு முக்கிய காரணம் அவர் அறிவித்த திட்டங்களும், செய்த சாதனைகளும்தான்.



> இந்த இளைஞன் நிச்சயம் ஒருநாள் பிரதமர் பதவியை அலங்கரிப்பான்" என்ற ஜவஹர்லால் நேருவின் கனவை நிஜமாக்கியவர் அடல் பிகாரி வாஜ்பாய்.



### வாஜ்பாய் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட முக்கிய திட்டங்கள்/சாதனைகளின் தொகுப்பு

**தங்க நாற்கரச் சாலை**

நாட்டின் வளர்ச்சியில் சாலைகளுக்கும் முக்கிய பங்கு இருப்பதை மனதில்கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டம்தான் தங்க நாற்கரச் சாலை திட்டம். கொல்கத்தா, டில்லி, மும்பை, சென்னை ஆகிய நான்கு பெருநகரங்களை இணைக்கும் இந்தச் சாலை 5,846 கி.மீ. தூரம் கொண்டது. உலகின் 5 ஆவது நீளமான சாலையும் இதுதான். 2001 ஆம் ஆண்டு வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் 2012 ஆம் ஆண்டு நிறைவுபெற்றது. இந்தச் சாலையானது அகமதாபாத், பெங்களூர், கிருஷ்ணகிரி, புவனேஷ்வர், கட்டாக், ஜெய்ப்பூர், கான்பூர், புனே, சூரத், விஜயவாடா, அஜ்மீர், விசாகப்பட்டினம், புத்தகயா, வாரணாசி, ஆக்ரா, காந்தி நகர், உதய்பூர் ஆகிய நகரங்களையும் கடந்து செல்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் எரிபொருள் சிக்கனம், விபத்துகள் குறைப்பு, பயண நேரம் குறைவு ஆகிய பலன்கள் எட்டப்பட்டு சாலை போக்குவரத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தார் வாஜ்பாய்.

**சர்வ ஷிக்ஷா அபியான்**

6 முதல் 14 வயது கொண்ட குழந்தைகளுக்கு இலவசக் கல்வி என்பதுதான் இந்தத் திட்டம். இந்தத் திட்டம் 2001 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த 4 ஆண்டுகளில் பள்ளி செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை 60% குறைந்தது குறிப்பிடத்தக்கது.

**தொலைத்தொடர்பு புரட்சி**

பி.எஸ்.என்.எல்.நிறுவனம் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியது. விதேஷ் சஞ்சர்நிகாம் நிறுவனம் மூலம் சர்வதேச தொலைத் தொடர்பையும் ஏற்படுத்தினார் வாஜ்பாய். கைப்பேசிகள் இந்தியாவில் அதிகளவில் பயன்படுத்தப் பட்டதும், அதற்கான கட்டணங்களை குறைத்து அலைபேசி தொலைத்தொடர்பை வலுப்படுத்தியதும் வாஜ்பாய் ஆட்சிதான்.

**பொக்ரான் அணுகுண்டு சோதனை**

1998 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலத்தில், பொக்ரான் என்ற பாலை வனப் பகுதியில் 5 அணுகுண்டுகளை அப்துல்கலாம்தலைமையிலான குழு வைக்கொண்டு சோதனை மேற்கொண்டனர். இந்த பொக்ரான் சோதனையின் மூலம் மிகப் பெரிய அணு ஆயுதம் கொண்ட நாடுகளையும், இந்தியாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார் வாஜ்பாய்.

**பிரதான்மந்திரி கிராமின் சதக் யோஜ்னா**

கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட திட்டம்தான் இது. அனைத்துக் கிராமங்களுக்கும் சாலை அமைப்பது போன்றவை இந்தத் திட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது. மிகவும் பின்தங்கிய மாநிலங்களான வட கிழக்கு மாநிலங்களை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல அவர்களுக்கென தனி அமைச்சகம் ஒன்றையும் ஏற்படுத்தினார் வாஜ்பாய்.

**டில்லி மெட்ரோ**

இன்று டில்லி நகரத்தின் முக்கிய போக்குவரத்தாக இயங்கி வருவது மெட்ரோ ரயில்கள்தான். அந்த மெட்ரோ ரயில் சேவையை முதன்முதலாகத் தொடங்கி வைத்தவர் வாஜ்பாய். சாலைப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து என அனைத்திலும் உள்கட்டமைப்புகளை மேன்மைப் படுத்திய பெருமையும் இவரையே சாரும்.

**தனியார்மயமாக்கல்**

அரசு, தொழில் செய்வது மற்றும் தொழிற்சாலைகள் நடத்துவது ஆகியவற்றைக் குறைத்துக்கொண்டு, முதலீடுகளை திரும்பிப் பெறுவதற்கென தனியாக ஓர் அமைச்சகத்தை நிறுவினார் வாஜ்பாய். இதன்மூலம் பாரத் அலுமினியம் கம்பெனி, ஹிந்துஸ்தான் ஜிங்க், இந்தியன் பெட்ரோ கெமிக்கல் கார்ப்பரேஷன், வி.எஸ்.என்.எல்.உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் இந்தியாவில் வரத்தொடங்கின.

**நிதிப் பொறுப்புச் சட்டம்**

நிதிப் பொறுப்புச் சட்டம் என்று ஒரு சட்டத்தை இயற்றி அதன்மூலம் நிதிப் பற்றாக்குறையைக் குறைத்தது வாஜ்பாய் அரசு. இந்தச் சட்டத்தின் மூலம் 2000 ஆம் ஆண்டு -0.8% ஆக இருந்த ஜி.டி.பி 2005 ஆம் ஆண்டு 2.3% ஆக உயர்ந்தது.

**லாகூர் ஒப்பந்தம்**

இந்தியா - பாகிஸ்தான் இடையே நட்புறவு ஏற்படுத்துவதற்காக லாகூர் - டில்லி இடையே பேருந்து சேவையை 1999 ஆம் ஆண்டு பெப்ரவரியில் தொடங்கி வைத்தார் வாஜ்பாய். அதே ஆண்டு லாகூரில் நடைபெற்ற கூட்டத்தில் இரு நாடுகளும் ஓர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. "லாகூர் ஒப்பந்தம்" எனப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமான பிரச்சினைகளைத் தீர்க்கவும், வர்த்தக உறவை மேம்படுத்தவும், இருநாட்டு நட்புறவை வலுப்படுத்தவும் உறுதியளிக்கும் விதமாக அமைந்தது.

**கார்கில் விஜய் திவாஸ்**

1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், கார்கில் போர் நடைபெற்றது. ஆப்ரேஷன் "விஜய்" என்ற பெயரில் பாகிஸ்தானுடன் யுத்தம் நடத்தி வெற்றிபெற்றது இந்தியா. இந்தியா வளர்ச்சியடையும் போதெல்லாம் வாஜ்பாய் பேசப்படுவார், வாஜ்பாய் இந்தியாவின் வளர்ச்சியில் வாழ்வார். ஓய்வெடுங்கள் வாஜ்பாய் இந்தியா நிச்சயம் ஒளிரும்...

# ஈழமும் கலைஞரும்

அப்போது தூய தேசியவாத சிந்தனையுடனேயே செயற்பட ஆரம்பித்தோம். தமிழ் பிரச்சினைகள் பற்றிப் பேசுபவர்கள் அண்ணாத்துரை, கருணாநிதி, தமிழரசுக்கட்சி என்பதே எமக்குத் தெரிந்திருந்தவை" - இவ்வாறு தொடங்கித் தனது சுயசரிதையை எழுதியிருப்பவர் புலிகள் இயக்கத்தின் நிறுவனர்களில் ஒருவரும் புலிகளின் முதலாவது மத்தியகுழு உறுப்பினருமான கணேசன்.

ஈழத்தில் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் பரந்துபட்ட இளைஞர்களிடையே முதன்மையான தமிழ் உணர்வுப் படிமம் கலைஞர் மு.கருணாநிதி. இன உணர்வு, மொழிப்பற்று, கடவுள் மறுப்பு, கலையை சமூக நீதிக்காகவும் அரசியலுக்காகவும் இலாகவமாகப் பயன்படுத்திக்கொள்வது போன்றவற்றில் அவர் இளைஞர்களுக்கு முன்னோடியாக இருந்தார்.

உணர்வு நரம்புகளை மீட்டிவிடும் கலைஞரின் வசனங்கள் திரும்பத் திரும்ப ஈழத்துத் திரையரங்குகளில் ஒருபுறம் ஓடிக்கொண்டிருக்க, கலைஞரின் எழுச்சியுரைகள் ஒலிநாடா வழியாகவும் அவரது எழுத்துக்கள் பத்திரிகைகள் வழியாகவும் ஈழத்தை வந்தடைந்து கொண்டேயிருந்தன. அப்போது ஈழத்தில் அநேகமான தமிழ் மக்களின் வீடுகளில் கலைஞரின் படம் தொங்கிக் கொண்டிருக்கும்.

எழுபதுகளில் இலங்கையில்திமு.கவின் இருப்பு, சிங்கள இனவாதிகளுக்கும் இலங்கை அரசுக்கும் அச்சுறுத்தலாயிருந்தது. இனவாத அமைப்பான ஜே.வி.பி. தன் உறுப்பினர்களுக்கு நடத்திய ஐந்து வகுப்புகளில் இரண்டாவது வகுப்பு, தமிழக தி.மு.கவால் சிங்களவர்களுக்கு ஏற்படவிருக்கும் அபாயத்தைச் சொல்வதாக இருந்தது. கடைசியில் இலங்கை தி.மு.க. தலைவர் இளஞ்செழியன், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசால் கைதுசெய்யப்பட்டுக் கட்சியும் நசுக்கப்பட்டது.

ஈழத் தமிழ்த் தேசியக் கருத்தியல் எழுச்சியில் கலைஞருக்கு ஒரு பங்குண்டு. கடல் கடந்து ஈழத் தமிழரை அணுக்கமாக எட்டியது அந்தக் கரகரத்த குரல். ஈழத்தில் முதலில் தனி ஈழக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர், மேடைப்பேச்சு, முழக்கங்கள், பத்திரிகைகள், தேர்தல் சின்னம் எல்லாவற்றையும் தி.மு.கவிடமிருந்தே பிரதி செய்தனர்.

காசி ஆனந்தன் போன்ற உணர்ச்சிப்பாவலர்களும் தீப்பொறி அந்தனிசில் போன்ற பேச்சாளர்களும் கோவை மகேசன் போன்ற பத்திரிகையாளர்களும் கலைஞரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் அடியொற்றியே உருவானவர்கள். தந்தை செல்வா முதல் அனைத்துத் தமிழ் அரசியல் தலைவர்களுடனும் போராளி இயக்கத் தலைவர்களுடனும் கலைஞருக்கு நல்லுறவும் தோழமையும் இருந்தது.


அப்போது, ஈழத்தில் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாலும் சிங்கள இனவாதிகளாலும் வன்முறைகள் ஏவிவிடப்பட்டபோதெல்லாம் தமிழகத்திலிருந்து எழும் முதல் வலுவான கண்டனக் குரல் கலைஞருடையதுதான். அடுத்த குரல் திராவிடர் கழகத்தினருடையது.

இந்தக் கண்டனக் குரல்கள் வெறுமனே குரல்களாக மட்டும் நின்றுவிடவில்லை என்பதுதான் முக்கியமானது. எந்தவொரு தமிழகத் தலைவருக்கும் முன்னாலேயே கலைஞர் தமிழ்ப் போராளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். பிரபாகரன் தனது 23ஆவது வயதில் 1977ஆம் ஆண்டு கலைஞரைச் சந்திக்கிறார். அழைத்துச் சென்றவர்கள் காசி ஆனந்தனும் மாவை சேனாதிராஜாவும்.

இந்தக் காலப் பகுதியிலே பல்வேறு வழிகளில் தி.மு.கவினர் ஈழப் போராளிகளுக்கு உதவினர். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதி, சென்னையில் புலிகளின் உறைவிடங்களாக இருந்தன. இந்த உதவிகள் தொடர்ந்தன. புலிகளுக்கு உதவியதற்காக தி.மு.கவினர் சிறைக்கும் சென்றனர்.

எதிரும் புதிருமாக நின்ற ஈழப் போராட்ட இயக்கங்களை ஒற்றுமைப்படுத்த கலைஞர் பலவாறு முயன்றிருக்கிறார். பாண்டி பஜார் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட போராளிகளை இலங்கைக்கு நாடுகடத்தும் முயற்சியை எதிர்த்து பழ.நெடுமாறன் கூட்டிய சர்வகட்சிக் கூட்டத்தை வரவேற்றுக் கடிதம் எழுதியது தொடங்கி எத்தனையோ தடவை கலைஞர் போராளித் தலைவர்களைச் சந்தித்து ஒற்றுமையை வலியுறுத்தியிருக்கிறார், நிதி வழங்கியிருக்கிறார்.

ஈழப் போராட்டத்துக்கான கலைஞரின் முக்கிய பங்களிப்பு, மே 1985இல் 'தமிழீழ ஆதரவாளர் அமைப்பு' என்ற டெசோவை உருவாக்கியது. டெசோ தமிழகம் முழுவதும் தமிழீழ ஆதரவுப் பிரசாரங்களை நடத்தியது. 23-08-1985இல் அன்ரன் பாலசிங்கம், சந்திரஹாசன், சத்தியேந்திரா ஆகியோரை நாட்டை விட்டு வெளியேற்ற இந்திய அரசு ஆணையிட்டபோது உடனடியாகவே கலைஞரின் தலைமையில் டெசோ கண்டனப் பேரணியையும் தமிழ்நாடு தழுவிய ரயில் மறியலையும் செய்தது. 'பிரதமருக்குக் கறுப்புக்கொடி காட்டப்படும்' என்றார் கலைஞர். நாடு கடத்தும் உத்தரவை இந்திய அரசு திரும்பப் பெற்றது.



கலைஞர் அரசியல் தளத்தில் தமிழீழப் போராட்டத்தை நியாயப்படுத்திப் பரப்புரை செய்துகொண்டிருந்த அதேவேளையில் திரைத்துறையிலும் தன் கைவண்ணத்தைக் காட்டினார். அப்போது அவர் எழுதிய ஒரு படத்தின் தலைப்பு 'வீரன் வேலுத்தம்பி'. 'பாலைவன ரோஜாக்கள்' படத்தின் நாயகனுக்குப் பெயர் 'சுபாரத்தினம்.'

1986 மே. மதுரையில் கலைஞரின் தலைமையில் அனைத்திந்தியத் தலைவர்களை அழைத்து டெசோ, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடத்தியது. மாநாட்டில் ஈழப் போராளி இயக்கத் தலைவர்களும் கலந்துகொண்டார்கள். புலிகள் சார்பில் பேபி சுப்பிரமணியமும் திலகரும் கலந்துகொண்டார்கள். மதுரையில் மாநாடு நடக்கும்போது ஈழத்தில் ஸ்ரீசபாரத்தினம் புலிகளால் கொல்லப்பட்டார். அங்கேதான் கலைஞர் "சகோதரப் படுகொலைகளை நிறுத்துங்கள்" என்றார். புலிகளை ஆதரித்த வேறெந்தத் தமிழகத் தலைவரும் அதுவரை சொல்லாத ஆழமான அறிவுரையது. ஆனால் கேட்பார் யாருமில்லை.

இந்தக் காலகட்டம்வரை சீராக இருந்த கலைஞரின் புலிகள் ஆதரவுக் குரல் சகோதரப் படுகொலைகளுக்குப் பின்பு விமர்சனக் குரலாகவும் மாறத் தொடங்குகிறது. ஈழத்திலும் தமிழ் அரசியல் தலைவர்களும் எழுத்தாளர்களும் ஜனநாயகவாதிகளும்' இந்தக் காலப்பகுதியிலேயே புலிகள்மீதான தங்களது விமர்சனங்களை வைக்கிறார்கள்.

இதற்குப் பின்னான ஈழப் போராட்டம் ஈழத்திலும் சரி இந்தியாவிலும் சரி, கொந்தளிப்பான காலத்திற்குள் நுழைகிறது. அரசியல் காட்சிகள் கற்பனைக்கும் எட்டாதவாறு தாறுமாறாக மாறுகின்றன. இந்திய அமைதிப்படை ஈழத்திற்குள் நுழைகிறது.

இந்தியப் படைகள் ஈழத்தில் நடத்திய கொடூரங்களைக் கலைஞர பகிரங்கமாகக் கண்டித்தார். இந்தியப் படையை இலங்கையிலிருந்து திருப்பி அழைக்க வி.பி.சிங் எடுத்த முடிவுக்குக் கலைஞரும் ஒரு காரணமாய் இருந்தார். உச்சகட்டமாக மாநில முதல்வராக இருந்தபோதும் நாடு திரும்பிய இந்தியப் படைக்கு வரவேற்பு அளிக்க மறுத்தார். மாறாக, கலைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சென்னைக்கு வரவேற்றார்.

அப்போது கொழும்பில் தங்கியிருந்த அன்ரன் பாலசிங்கம் சென்னைக்குச் சென்றார். கலைஞருடன் மூன்று தடவை சந்திப்பு நிகழ்ந்தது. மாகாணசபை அதிகாரத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ்வோடு சரிசமமாகப் புலிகள் பங்கிடவேண்டும் எனக் கேட்டார் கலைஞர். பாலசிங்கம் மறுத்துவிட்டார். மாகாணசபை அதிகாரத்தை முழுவதுமாகப் புலிகளிடம் ஒப்படைத்துவிடுமாறு வரதராஜப் பெருமாளையும் கேட்டார் கலைஞர். எந்தச் சமரசமும் சாத்தியமாகவில்லை.

இதற்குப் பின் சென்னையில் பத்மநாபாவும் தோழர்களும் புலிகளால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி கொலை. இத்துடன் அரசியல் அரங்கில் மிகப்பெரும் துன்பியல் சம்பவங்கள் நடக்கின்றன. இந்திய மத்திய அரசு, புலிகளை அழித்துவிட முடிவெடுக்கிறது. அதுவரை அரசியல் நடுவர் பாத்திரமேற்றிருந்த இந்திய அரசு, இலங்கை அரசுப் பக்கம் சாயத் தொடங்குகிறது. அமெரிக்காவின் இரட்டை கோபுரத் தாக்குதல்களை அடுத்து புலிகளையும் அழித்துவிட சர்வதேச அரசுகள் அளவிலான வலை பின்னப்படுகிறது. இதைப் புலிகள் புரிந்துகொள்ளவில்லை.

தொடர்ந்து நடந்த கொடும் போரையும் இனப்படுகொலையையும் நிறுத்த யாருக்கும்தான் வழி தெரியவில்லை. ஆனால் கலைஞர் நிலவரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டார் என்றுதான் எண்ணுகிறேன். அவர் மற்றைய தமிழ்நாட்டுத் தலைவர்களைப்போல 'போர்! போர்! வெற்றி புலிகளுக்கே' என்றெல்லாம் அறைகூவவில்லை. பேச்சுவார்த்தையையே வலியுறுத்தினார். அவருக்கு எல்லா ஜனநாயக அரசியல்வாதிகள் போலவே புலிகளின் மீது விமர்சனமிருந்தது. ஆனால், அது ஒருபோதும் வெறுப்பாக மாறியதில்லை. புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மறைந்தபோது கலைஞர் அஞ்சலிக் கவிதை எழுதினார்.

இறுதிப் போர் நாட்களில் கலைஞர் அதிகாரத்தில் இருந்தபோதும் அவரது அதிகார எல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டவையே என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. தமிழகத்தில் நடந்த எழுச்சிகளை கலைஞரின் அரசு ஒடுக்கியது. ஆட்சியையும் கட்சியையும் பாதுகாக்க வேண்டிய நிலையில் அவர் இருந்தார். கலைஞர் ஆட்சியைத் துறந்திருந்தாலோ மத்திய அரசிலிருந்து விலகியிருந்தாலோ ஈழப் போரின் முடிவு வேறாக இருந்திருக்கவே வாய்ப்பில்லை. உண்மையில் அது கலைஞரின் கையறு நிலைதான்.

கலைஞர் போர்நிறுத்தம் வேண்டி சில 'மணிநேரமே மெரினா கடற்கரையில் உண்ணாவிரதம் இருந்தார் என்றொரு விமர்சனமுண்டு. ஆனால், கலைஞர் உண்ணாவிரதம் இருந்தபோது, தாக்குதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்திருப்பதாகவும் கனரக பீரங்கிகள், தாக்குதல் விமானங்கள், ஏவுகணைகள் உட்பட பொதுமக்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இலங்கை ஜனாதிபதி செயலகம் அறிவித்தது. இந்த அறிவிப்பின் நகலை வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கலைஞருக்கு' அனுப்பிவைத்ததன் பின்னாகவே கலைஞர் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் .

போரின் இறுதி நாட்களில் நிகழ்ந்த பல மர்மங்கள் இன்னும் அவிழவில்லை. ஆயினும் அந்த நாட்களில் புலிகளின் சார்பாகச் சில தி.மு.க. தலைவர்கள் இந்திய அரசிடமும் சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளிடமும் பேசினார்கள் என்பதும் அவர்களில் கனிமொழி முக்கிய மானவர் என்பதும் இன்று பலர் அறிந்த உண்மை.

ஒரு தேர்தல் அரசியல் கட்சியினதும் அதன் தலைவரதும் எல்லைகள் வரையறுக்கப்பட்டவை. இந்த எல்லைக்குள் இருந்துதான் கலைஞர் செயற்பட்டிருக்கிறார். அவரது செயற்பாடு போராட்ட வடிவங்களாகவும் உதவிகளாகவும் இருந்தது என்பதோடு ஈழப் போராட்டத்தின் நாற்றங்காலில் கருத்தியல் நீர் பாய்ச்சியவர் அவர்.

ஈழப் போராட்ட வரலாற்றில் விமர்சனங்களுக்குத் தப்பக் கூடியவர்கள் யார்? ஆனால், அந்த விமர்சனம் ஒருவரது வரலாற்றுப் பாத்திரத்தை முழுவதுமாகக் கவனத்தில் எடுத்தே வைக்கப்பட வேண்டும். ஈழத்தை முன்வைத்துக் கலைஞரை அணுகும் மனச்சாட்சியுள்ள எவருமே இதை மறந்துவிடக் கூடாது.

'மனச்சாட்சி உறங்கும் சமயத்தில்தான் மனக்குரங்கு ஊர்சுற்றக் கிளம்புகிறது!'

**ஷோபாசக்தி**

# சிறந்த வீரன் விராட் கோலி



விராட் கோலியின் ஆட்டிட்யூடில் எதுவும் தவறாகத் தெரியவில்லை. இந்த விளையாட்டின்மீது உச்சகட்ட தாகம் கொண்டவர்களை எனக்குப் பிடிக்கும். விராட்டை ரொம்பப் பிடிக்கும் என்றார் சேர் விவியன் ரிச்சர்ட்ஸ். அவர் கண்களுக்கு விராட்டின் நேசம் மட்டும்தான் தெரிகிறது. அது அவரது ஆட்டிட்யூடை வரையறுக்கவில்லை. ஆனால், நாம் வரையறுத்திருக்கிறோம்!

எந்த விளையாட்டாக இருந்தாலும், அங்கு உளவியல் ரீதியில் பல முடிவுகள் எடுக்கப்படும். விளையாட்டு உளவியலோடும் இரண்டற கலந்தது தான்.

டோனி எத்தனை இடங்களில் எதிரணி வீரர்களின் உளவியலைப் பயன்படுத்தியிருப்பார். 2008 ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா அணிக்கெதிரான போட்டியில் லக்ஷ்மிரத்தன் சுக்லாவை ரன் அவுட் செய்தது அதற்கான மாஸ்டர் பீஸ் எடுத்துக்காட்டு.

அதேபோல், 2006 உலகக் கோப்பை ஃபைனலில் ஜிடேன் ஹபனேன்கா பெனால்டி அடித்ததையும் சொல்லலாம். பந்துவீசும் முன் டி வில்லியர்ஸ் கிரீஸுக்குள் நகர்ந்துகொண்டே இருப்பது, பௌலரை உளவியல் ரீதியாகத் தாக்குவதற்காகத்தான். அவுஸ்திரேலிய வீரர்கள் ஸ்லெட் ஜிங் செய்ததும் அதற்காகத்தான்.

அதேபோல்தான், கோலியும். அவர் நினைப்பது - எந்த இடத்திலும் எதிரணிக்கு ஹசைக் காலஜிக்கல் அட்வான்டேஜ கொடுத்துவிடக் கூடாது என்பது தான். 2014 இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் தொடர்ந்து சொதப்பினார்.

ஆனால், அந்தத் தொடரின் கடைசி டெஸ்டில் களமிறங்கியபோதும், முதல் டெஸ்டில் இருந்த அதே நம்பிக்கையை தன் முகத்தில் படர வைத்திருந்தார். பௌலருக்கு எந்த இடத்திலும் வாய்ப்பு கொடுத்திடக் கூடாது என்று நினைப்பார்.

பீல்டிங் செய்யும்போதும் அதே தான். எதிரணி நல்ல நிலையில் இருக்கையில் அவர்களின் விக்கெட்டை வீழ்த்தும்போது, இன்னும் எங்களின் ஸ்பிரிட் அப்படியேதான் இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகவே தன் மகிழ்ச்சியை ஆக்ரோஷமாக வெளிப்படுத்துவார். உண்மையில் கப்டனாக அவரது அந்த ஆக்ரோஷ கொண்டாட்டங்கள் இந்தியாவுக்கு ரொம்பவே அவசியம்.

இந்த ஆக்ரோஷ கொண்டாட்டமெல்லாம் அவரது கிரிக்கெட் மீதான தாகத்தின் வெளிப்பாடு தான். அதேசமயம், வெஸ்ட் இண்டீஸ் வீரர் டுவைன் பிராவோ, விக்கெட் வீழ்த்தியபின், எதிரணியினரின் முகத்துக்கு அருகே சென்று கிளம்பு கிளம்பு என்று சைகை காட்டுவார். அவர் அதைச் சிரித்துக்கொண்டே செய்வதனால் அது கொண்டாட்டமாக மட்டுமே பார்க்கப்படுகிறது.



கோலி செய்வது எல்லை மீறல் எனும் போது பிராவோ செய்தது எல்லை மீறல் இல்லையா, கோலி கோபமாகச் செய்வதால் அது பிரச்சினையாகிறதா, கோலி என்றாலே அந்த முகம் மட்டும் தான் தெரிகிறதா, அந்த மனிதனுக்கு நாம் கொடுத்திருக்கும் முகத் திலிருந்து நூறு சதவிகிதம் வேறுபட்ட முகம் இருக்கிறது. அதைப் பற்றி யாரேனும் பேசியதுண்டா, அதையும் பேசியாக வேண்டும்.

சில தினங்களுக்கு முன்பு, இங்கிலாந்து ஹோட்டலுக்கு வெளியே, இந்திய வீரர்கள் அனைவரும் புறக்கணித்த பின், ஒரு ரசிகர் கோலியிடம் ஆட்டோகிராஃப் வாங்கிய வீடியோ வைரலானது. 2016 ஆம் ஆண்டு டில்லியில் நியூசிலாந்து அணியுடனான போட்டிக்குப் பின், வீரர்களின் பேருந்தைப் பார்த்தோம்.

நாங்கள் அவர்களை நோக்கி கையசைத்தபோது, கோலியைத் தவிர யாரும் கண்டுகொள்ளவேயில்லை. அவர் மட்டுமே புன்னகையுடன் எங்களைப் பார்த்து கையசைத்தார்" என்று பதிவிட்டிருந்தார் விபுல் குப்தா என்ற ரசிகர்.

விளையாட்டு வீரர்களால் எல்லோருக்கும் ஆட்டோகிராஃப் போட்டுத்தர முடியாது. ஆனால், கையசைக் கலாம். அதையும் கூட செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. அங்கு அவர்களுக்கான ஸ்பேஸ் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால், விராட் அப் படியல்ல. தங்களைக் கடவுள்களாகப் பார்க்கும் முட்டாள் ரசிகனுக்கு வரம் தராவிட்டாலும், காட்சியேனும் தர நினைப்பவர்.

கடந்த ஆண்டு இந்தியா, அவுஸ்திரேலியா ஒருநாள் தொடர் தொடங்குவதற்கு முன்பு சென்னையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், சிறுவர்கள் கேட்டால் மறுக்காமல் ஆட்டோகிராஃப், போட்டோ என உங்கள் நேரத்தை அவர்களுக்காகச் செலவிடுகிறீர்களே என்று ஒருவர் கேட்க, எனக்கு அது ஒருசில நொடிகள்தான். ஆனால், அவர்களுக்கு அப்படியில்லை. அது அவர்கள் குழந்தைப் பருவத்துக்கான நினைவு. அதை என் கடமையாக நினைக்கிறேன் என்று சிரித்தார் விராட். ஒவ்வொருவரின் உணர்வுக்கும் மதிப்பளிக்கத் தெரிந்தவர் அவர்.

இவ்வளவு ஏன், முகம்மது ஆமிர், முகம்மது இர்ஃபான் என தன்னைத் திணறடித்த பௌலர்களை எத்தனையோமுறை மனமுவந்து பாராட்டியிருக்கிறார். அதுவும் ஆமிரை களத்திலேயே பாராட்டியிருக்கிறார்.


கோலி, மிகச்சிறந்த இதயம் கொண்ட மிகச்சிறந்த வீரர் என்று முகம் மது இர்ஃபான் ட்வீட் செய்திருக்கிறார். இதிலிருந்தே கோலி மற்ற வீரர்களை எப்படி மதிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒருமுறை, சச்சினுடன் தன்னை ஒப்பிடுவதைப் பற்றி கோலியிடம் கேட்கிறார்கள்... அவரையும் என்னையும் ஒப்பிடுவது தவறு. அவர் ஜாம்பவான் என்கிற ரீதியில் அவர் பதில் சொல்லியிருக்கலாம். ஆனால் கோலி சொன்ன பதில்...



ஒப்பிடுவதற்குத் தகுதியே இல்லாத இரண்டு வீரர்களை ஒப்பிடுவது மிகவும் தவறு. யாரைப் பார்த்து நான் கிரிக்கெட் விளையாடத் தொடங்கினேனோ அவரோடு என்னை ஒப்பிடுகிறீர்கள்.

என்னோடு ஒப்பிட்டு அவரது தரத்தைக் குறைத்துவிடாதீர்கள் என்று தன்னைத்தானே தரம் தாழ்த்திக்கொண்டவர் விராட்.



அவ்வளவு மோசமான ஆட்டிட்யூட் கொண்டவராக இருந்தால், தான் கிரிக்கெட்டின் உட்ச நட்சத்திரமாகக் கொண்டாடப் படும் போதும் சீனியர்களுக்கு மரியாதை கொடுப்பாரா. ஒருநாள் போட்டிகளில் டோனியின் ஆலோசனைகளைக் கேட்க அவரது ஈகோ இன்னமும் இடம் கொடுக்கிறதே. நான் தான் கப்டன் என்று தனிச்சையாக முடிவுகள் எடுக்கலாமே! ஒவ்வெரு பிரஸ் மீட்டிலும் டோனிக்கு ஆதரவு அளிக்க வேண்டிய அவசியம் இல்லையே. அவ்வப்போது களத்தில் வீரர்களிடம் கோபப்பட்டுள்ளார். ஆனால், அந்த விடயத்திலும் இப்போது தன்னை மாற்றிக் கொண்டிருக் கிறார்.

மற்றபடி ஒவ்வொரு வீரரையும் தவறாமல் ஆதரிக்கிறார். சக வீரர்களை, சீனியர்களை, முன்னாள் ஜாம்பவான்களை, கடைக் கோடி ரசிகர்கள் வரை ஒவ்வொருவரையும் மதிக்கும் இந்த வீரனின் ஆட்டிட்யூட் தவறானதா?

ஒரு நல்ல வீரராக திறமை முக்கியம். ஒரு மிகச் சிறந்த வீரராக கோலியைப் போன்ற ஆட்டிட்யூட் முக்கியம் என்றார் கவாஸ்கர். தன் மகனிடம் உனக்கு ஒரு ரோல் மாடல் இருக்கவேண்டும் என்றால் அது விராட் கோலிதான் என்றார் ஸ்டீவ் வாஹ். அவர்களுக்குத் தெரிந்தது கோலியின் விளையாட்டு தாகம் மட்டுமே. மற்றபடி கோலியின் ஆட்டிட்யூடை அவர்கள் கொண் டாடுகிறார்கள். ஏனெனில், அவர்களுக்கு விளையாட்டும், அதற்குள் இருக்கும் உளவியலும் தெரியும். விளையாட்டையும் அதன் உளவியலையும் முழுதாகப் புரிந்துகொண்டாலே விராட் எனும் மகத்தான வீரனைப் புரிந்துகொள்ள முடியும். சில இடங்களில் தன் டெம்போவை அவர் இழக்கிறார் தான்.



# இது நம்ம கதைகள்... 12

## பேரறிவாளரும்,பேருந்து ஓட்டுநரும் (அபிமன்யு & பசாசு)

பேரறிவாளர் என்பது யாரும் சூட்டிய பட்டம் அல்ல. தானாகவே தேடித் தரித்த நாமம். ஆனால் அவரின் வாட்ட சாட்டமான உருவமும், அகன்ற நெற்றியில் நேர்த்தியாக வரையப்பட்ட நீறும், வெள்ளியாக மிளிரும் நரைத்த தாடி - மீசையும், கம்பீரமான குரலும், அவரைப் பார்ப்போர் மனங்களில் அந்தப் பட்டத்தை நியாயப்படுத்தின.

பேச்சாளர் என்பதே அவரது முழுநேரத் தொழில். கிருபானந்த வாரியாரைப் பார்த்து வரிந்த இலட்சிய வேட்கையது. தெருக்கோடி பிள்ளையார் முதல் முச்சந்தி முனியப்பர் வரை எந்தக் கோவில் உற்சவம் என அழைத்தாலும் பெரிசு - சிறிசு என்று பாகுபாடு பார்க்காமல் சொற்பொழி வாற்றுவார். பெரும் நகைமாடம் முதல் சிறிய தேநீர்க் கடை வரை எந்த நிகழ்வென்றாலும் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் பிரசன்னமாகி பேருரையாற்றுவார். இதனால் எளிமையானவர் என மக்கள் மத்தியில் அவருக்குத் தனி மதிப்பிருந்தது.

அவருடைய பேச்சில் அர்த்தமில்லாவிட்டாலும், சர்ச்சைகளுக்குப் பஞ்சமிராது. அடுக்குமொழிகளும் எதுகை - மோனைகளும் அரை குறையாகப் பேச்சைக் கேட்போருக்கு அற்புதமான பேச்சாளராக அவரை இனங்காட்டின. சில சமயம் ஆலாபனைகளுடன் அட்டகா சமாகத் தொடங்கி இறுதியில் சொதப்பி விடுவதால் சங்கேதமாக "அபிமன்யு" என அன்பர்களால் விழிக்கப்படுவதுமுண்டு. ஆயினும் எல்லா இடங்களிலும் ஒரேவிதமாகத் தொடர்ந்து பேசியதால் காலப் போக்கில் அவர் பேச்சில் சலிப்புற்று மக்கள் ஆழ்ந்து உறங்கத் தொடங்கினர்.

அவ்வூரிலொரு பேருந்து ஓட்டுநருமிருந்தார். அசுர வேகத்தில் வாகனத்தை செலுத்துவதால் "பசாசு" என மக்களிடையே பிரபல்யம் பெற்றார். பசாசு பேருந்தில் ஏறியமர்ந்தால் விமானமோட்டுவதாகவே கற்பனை செய்து கொள்வார். விபத்துக்கள் என்பது அவருக்கு அத்துப்படி. பசாசு ஓட்டும் பேருந்தைக் கண்டால் மக்கள் ஏறவே அஞ்சுவர். தற்சமயம் தப்பித் தவறி ஏறுபவர்களும் தாங்கள் இறங்குமிடம் வரும்



வரை எந்த இடரும் நேரக்கூடாது என்று தம் இஷ்ட தெய் வங்களை வேண்டிக் கொண்டேயிருப்பர்.காலப்போக்கில் பேரறிவாளரும், பேருந்து ஓட்டுநரும் இயற்கை யெய்தினர். எமலோகத்தில் தீர்ப்பிற்காக காத்திருந்தனர். சித்திரகுப்தன் இவர்களிருவரின் பூலோக செயற்பாடுகளையும் எமதர்மராஜாவிற்கு அறிக்கையிட்டார்.

எமதர்மராஜன் ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் தன் தீர்ப்பை வாசித்தார். பேருந்து ஓட்டுநருக்கு சொர்க்க வாசம் தீர்க்கப்படுகிறது. பேரறிவாளருக்கு நரக வாசம் தீர்ப்பிடப்படுகின்றது என்றார் சாவின் அரசன்.

திகைத்து, நிலைகுலைந்து போனார் பேரறிவாளர். "இது அநியாயத்தீர்ப்பு. நான் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன். குடித்துவிட்டு தாறு மாறாக வாகனம் ஓட்டி பலரைக் கொன்று, இன்னும் சிலரை அங்கவீனமாக்கிய, இறை சிந்தனையே இல்லாமல் வாழ்ந்த இந்த பேருந்து ஓட்டுநருக்கு சொர்க்கமா......? ஆனால் சதா இறைவனை நினைந்து, நல்ல கருத்துக்களை மக்கள் மனதில் விதைத்த ஆச்சார சீலனாகிய எனக்கு நரகமா.....? என்ன விந்தையிது. பூலோகம் போல எமலோகத் தீர்ப்புக்களிலும் செல்வாக்கு தலைவிரித்தாடுகிறதா....... " என மதுரையை எரித்த கண்ணகியாகினார் பேரறிவாளர்.

எமதர்மராஜன் தன் மீசையை முறுக்கிக் கொண்டு "பெரியவரே, நீர் சொன்னதெல்லாமே உண்மைதான். இவன் குடிகாரன்தான். கண்- மண் தெரியாமல் வெறித்தனமாக வாகனம் செலுத்தி பலரின் வாழ்வை பாதியில் பறித்தவன் - சீரழித்தவன், இறைபக்தியில்லாதவன். ஆனால் இவன் வாகனம் ஓட்டும் போது அதில் பயணித்தவர்கள் எல்லோரும் தங்களை இடையூறின்றி உரிய இடத்தில் சேர்ப்பிக்கும் படி சிவனைப் பார்த்து சிவ சிவா.... சிவசிவா....என்று ஓயாமல் பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தனர். இவன் நாத்திகனாகவிருந்தாலும் மற்றவர்கள் சிவன் நாமத்தை ஓயாது ஓத காரணமாகினான். ஆனால் நீரோ சொற்பொழிவாற்றிய போது மக்கள் சிவனையே மறந்து ஆழ்ந்து சயனித்தனர். மக்களை இறை சிந்தனையேயின்றி நித்திரையிலாழ்த்திய உம் செயலா... அல்லது சிவனைப் பயத்தின் நிமித்த மாவது சிந்திக்க வைத்த இவன் செயலா மேலானது......?" என்று கேட்டார். பேரறிவாளர் வாயடைத்துப் போனார்.

கவர்ச்சிகரமான பேச்சுக்களை விட
கடுகளவு செயலே மேலானது.

எப்.எக்ஸ்.அன்ரன்

# யார் பத்தினி?



சராசரி கடமைகளில் இருந்து மனிதனை அப்புறப்படுத்தாமல் அவன் இருக்கும் இடத்தையே கோவில் ஆக்க முடியும் என்று காட்டியது இந்து மதம். மழையை வரவழைப்பவளும் வாழைத் தண்டை எரியச் செய்பவளும் மட்டுமே பத் தினி அல்ல. கணவன் கண்களில் கண்ணீர் வராமலும் அவன் உள்ளத்தில் கனல் எரியாமலும் பார்த்துக் கொள்பவளே பத்தினி. அத்தகைய பத்தினி இருக்கும் இடம் குடிசையாக இருந்தாலும் அது கோவிலாகி விடுகிறது.

வெறும் கையில் விபூதியை வரவழைப்பவன் ஞானியல்ல. வெறும் உள்ளத்தில் விவேகத்தை வளர்த்துக் கொள்பவனே ஞானி. வளர்த்த விவேகத்தை பயனுள்ள வகையில் விநியோகிப்பவனே விஞ்ஞானி. இவர்கள் ஆண்டவன் வகுத்த சாலையையே அறியக் கூடியவர்கள். எந்த பயணத்தையும் நிர்ணயிக்கக் கூடியவர்கள். அதனால் தான் மற்ற ஆத்மாக் களை விட அவர்கள் மகாத்மாக்களாக காட்சியளிக்கிறார்கள்.

கவியரசு
கண்ணதாசன்

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ரத்தத்திலகம்
இசை : கே.வி.மகாதேவன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



பசுமை நிறைந்த நினைவுகளே பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே பறந்து செல்கின்றோம்
பசுமை நிறைந்த நினைவுகளே பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே பறந்து செல்கின்றோம்

குரங்குகள் போலே மரங்களின் மேலே தாவித்திரிந்தோமே
குரங்குகள் போலே மரங்களின் மேலே தாவித்திரிந்தோமே
குயில்களைப் போலே இரவும் பகலும் கூவித் திரிந்தோமே
குயில்களைப் போலே இரவும் பகலும் கூவித் திரிந்தோமே
வரவில்லாமல் செலவுகள் செய்து மகிழ்ந்திருந்தோமே
வரவில்லாமல் செலவுகள் செய்து மகிழ்ந்திருந்தோமே
வாழ்க்கைத் துன்பம் அறிந்திடாமல் வாழ்ந்து வந்தோமே
நாமே வாழ்ந்து வந்தோமே

பசுமை நிறைந்த நினைவுகளே பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே பறந்து செல்கின்றோம்

எந்த ஊரில் எந்த நாட்டில் என்று காண்போமோ
எந்த ஊரில் எந்த நாட்டில் என்று காண்போமோ
எந்த அழகை எந்த விழியில் கொண்டு செல்வோமோ
எந்த அழகை எந்த விழியில் கொண்டு செல்வோமோ
இந்த நாளை வந்த நாளில் மறந்து போவோமோ
இந்த நாளை வந்த நாளில் மறந்து போவோமோ
இல்லம் கண்டு பள்ளி கொண்டு மயங்கி நிற்போமோ - என்றும்
மயங்கி நிற்போமோ

பசுமை நிறைந்த நினைவுகளே பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே பறந்து செல்கின்றோம்
பசுமை நிறைந்த நினைவுகளே பாடித்திரிந்த பறவைகளே
பழகிக் கழித்த தோழர்களே பறந்து செல்கின்றோம் நாம்
பறந்து செல்கின்றோம்

மூன்று வருடகால

# அளப்பரிய சேவை

சுவாசித்த மூன்று ஆண்டுகள் 2015 - 2018





V2025 வளமான நாடு

இலங்கையை இந்துசமுத்திர பிராந்தியத்தின் சர்வதேச பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றி செழிப்புமிக்க சகாப்தத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் ஒரே நோக்கமாகும். நாட்டு மக்களுக்கு நிலையான மற்றும் சமாதானமான நாட்டை கட்டியெழுப்பி 2025இல் வளமான ஒரு இலங்கையை உருவாக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தின் மூலம் செழிப்புமிக்கதொரு இலங்கையை கட்டியெழுப்புவதன் மூலம் வளமான ஒரு நாட்டை உருவாக்க முடியும்.

## சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை ஊக்குவிப்பதில் தற்போதைய அரசாங்கத்தின் பங்களிப்பு.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக காணாமல் போனோர் தொடர்பான நிரந்தர அலுவலகமொன்றை நிறுவுதல்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு சொந்தமான 41,412 ஏக்கர் நிலத்தை மீள் வழங்குதல்.

சட்ட விதிகளை பலப்படுத்தல்

நல்லிணக்க செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காகவும் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தை மேம்படுத்துவதற்காகவும் 2750 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தல்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 12 மாவட்டங்களைச் சேர்ந்த 75000 பெண்கள் பெற்றுக்கொண்ட ஒரு இலட்சம் ரூபாவிற்கும் குறைவான கடன்களுக்கு விளக்களிப்பு.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்காக 50,000 வீட்டுத் திட்டத்தின் கீழ் 19,957 வீடுகள் நிர்மாணித்து கையளிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு படையினர் நடத்திய வியாபாரங்களை பொதுமக்களிடம் கையளித்தல்.

அனைத்து இன மக்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல்.

சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை வலுப்படுத்தும் பொருட்டு நிறுவனங்களை மறுசீரமைத்தல் மற்றும் புதிய நிறுவனங்களை நிறுவுதல்.

அரசாங்க தகவல் திணைக்களம்

# உலகுடன் போட்டியிடுவதற்கு இலங்கை தயங்கவேண்டியதில்லை




ஜிஎஸ்பி+ இழப்பு பற்றி முழுமையான பகுப்பாய்வு வழங்குவது கடினம் என்றாலும், ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் எவ்வாறு இலங்கையின் போட்டியாளர்கள் பங்குபெற்றார்கள்என்பதை நோக்குமிடத்து ஆசிய ஆடை உற்பத்தியாளர்களிடம் இலங்கை எவ்வாறு தோல்வியடைந்தது என்பது பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தை அளிக்கின்றது.

சர்வதேச வர்த்தக மையத்தின் அடிப்படையில், 2009 ஆம் ஆண்டில் வியட்நாம், பாகிஸ்தான் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளினால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஏற்றுமதிகள் முறையே 2.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், 1.09 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், இலங்கையின் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு எதிராகவும் இருந்தது.

எவ்வாறாயினும், 2015 இற்குள், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் வியட்நாம் நாட்டின் ஏற்றுமதி 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், பாகிஸ்தானின் ஏற்றுமதி 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் மற்றும் கம்போடியாவின் ஏற்றுமதி 3.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் உயர்ந்துள்ளதுடன், இலங்கையின் ஏற்றுமதி வெறும் 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மட்டுமே உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் **GSP** பிளஸ் வசதியானது இலங்கைக்கு மீள்கொண்டுவரப்பட்டு ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்டது. முக்கியமாக, இது இலங்கைக்கு, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளுடனும் மற்றும் முன்னுரிமை சந்தை அணுகலை அனுபவிக்கும் பல ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா நாடுகளுடனும் போட்டியிடும் களத்தை அமைத்துக் கொடுக்கும்.

வெவ்வேறு துறைகளில் இருந்து பெறப்படும் மேலதிக சலுகைகள் ஒன்றுக்கொன்று மாறுபடும். பல் வகையான ஆடை துறைகளில் வரி 9.6 சதவீதத்திலிருந்து பூச்சியம் வரையும், கடல் உணவுத் துறையில் 18.5 சதவீதத்திலிருந்து பூச்சியம் வரையும், புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறித் துறையில் 12.5 சதவீதத்திலிருந்து பூச்சியத்திற்கும் , பீங்கான் மற்றும் மட்பாண்டத் தயாரிப்புப் பிரிவுகளில் 8.4 சதவீதத்திலிருந்து பூச்சியம் வரையும் விளையாட்டுப் பொருட்கள் துறையில் 1.2 சத விகிதத்திலிருந்து பூச்சியத்திற்கும் அறவிடப்படுகின்றது.

**GSP** மனிதவள மற்றும்உழைப்பாளர் உரிமைகள், நிலையான அபிவிருத்தி மற்றும் நல்ல ஆட்சி என 27 முக்கிய சர்வதேச மரபுகளை நிலைநிறுத்த உறுதிப்பாடு அளித்துவரும் வளரும் நாடுகளுக்கு வெகுமதி எனும் பெயரில் ஏற்றுமதிப் பொருட்களுக்கு குறைந்தளவு வரிகளை வழங்கி ஊக்கத்தை வழங்கி வருகின்றது. பின்னர் இந்த நாடானது பின்வரும் இரண்டு நிலைமைகளின் கீழ் "பாதிக் கப்படக் கூடியது" எனக் கருதப்பட வேண்டும். ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் போட்டியிட முடியாத நாடாக இருத்தல் வேண்டும் (இறக்குமதி வீதமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் மொத்த **GSP** இறக்குமதிகளில் 6.5 சத வீதத்திற்கும் குறைவானதாக இருத்தல் வேண்டும்) மற்றும் நாட்டின் பல்வகைப்பட்ட ஏற்றுமதிக்கான அடித்தளமற்ற நாடாக இருத்தல் வேண்டும். (ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மொத்த நாட்டின் **GSP** இறக்குமதிகளில் 75 சத வீதத்திற்கும் மேலாக கொண்ட ஏழு தயாரிப்புகள்).

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மிகப் பெரிய ஏற்றுமதி ஆடை உற்பத்திகளாகும். **GSP** கீழ் தோற்றம் பற்றிய விதிகளின் அடிப்படையில் ஆடைக்கான துணிகள் இலங்கையில் இருந்து அல்லது **GSP** பெற தகுதி பெறும் பிராந்திய தொகையில் இருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். சீனா போன்ற நாடுகளிலிருந்து பெறப்படும் துணிகளை விட இலங்கையின் ஆடைத் தொழிற்சாலைகளில் இருந்து பெறப் படும் துணிகளுக்கு கேள்வி அதிகம்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மற்றும் ஆளுமைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எந்தவொரு எதிர்ப்பையும் ஐரோப்பிய ஒன்றியத் தால் எடுத்துக்காட்டாது இருக்குமிடத்தும் மற்றும் அவ்வப்போது வரவிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய மதிப்பீடுகளின் அடிப்படையிலும் (முதலாவது வெளியீடு ஒரு வருடத்திற்குள்) **GSP** சலுகைக்கு இலங்கை தொடர்ந்தும் தகுதியுடையதாக இருக்கும். இருந்தாலும், மேல் நடுத்தர-வருமான பொருளாதாரத்தின் நிலைக்கு இலங்கை முன்னேறு மிடத்தும் (உலக வங்கியால் வகைப்படுத்தப்பட்டுள்ளது) , தொடர்ந்து மூன்று வருடங்களாக அந்த நிலையை தக்கவைத்து கொள்ளுமிடத்தும் **GSP** சலுகையை மேலும் பெறுவதற்கு தகுதியற்றதாகின்றது (தயவு காலப் பகுதி இரண்டு வருடங்களாலும்). எனவே, 2023 வரை **GSP** பயன் களை பெற முடியும்.

**GSP** ஐ திரும்பப் பெற்று 12 மாதங்களில் ஐரோப்பிய ஒன்றியத் திற்கான ஏற்றுமதி 11 வீதமாக ஆக உயர்ந்துள்ளது.

ஏறக்குறைய ஏற்றுமதியின் 60 வீத ஆடை விற்பனையாகும். இது 8 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

ஆடைத் துறைகளின் வளர்ச்சியானது 1-2 வீத வருவாயைக் கடந்து விட்டது. அத்துடன் எளிமையான வாடிக்கையாளர்களுடனான விலையிடல் நன்மைக்கு வழிகாட்டுகின்றது.

கடந்த 2 மாத ஏற்றுமதி அதிகரித்து வருகிறது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துணியை தவிர்த்து ஆடைத் துறையின் வேலை வாய்ப்பு அதிகரிப்பு பற்றிய மதிப்பீடு குறைந்த பட்சம் 7,500 ஆகும்.

ஏற்கனவே ஏற்றுமதியில் அமெரிக்க 150 மில்லியன் அதிகரித்துள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட அமெரிக்க 500 மில்லியன் இலக்கின் ஆடை உற்பத்தியின் 1/3 அதிகமானதாகும்.

பிற குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடைய துறைகள் மீன்பிடி மற்றும் டயர்கள் ஆகும்.

மீன் தொடர்பான தடை நீக்கம் மற்றும் **GSP** - வியாபார இணைப்புகள் மீட்டெடுக்கப்பட்டதிலிருந்தும் ஏற்றுமதிகளில் மீன்வகையின் அளவு உண்மையில் இருமடங் காகி விட்டது.

இறப்பர் டயர்கள் மற்றும் கையுறைகளின் வளர்ச்சியானது மதிப்பை விட குறைவாக உள்ளது. இது விலையுயர்வு மற்றும் வலுப் படுத்தும் யூரோ ஆகியவற்றின் நன்மைகளை பரிந்துரைக் கின்றது.

பதப்படுத்தப்பட்ட உணவுகள் முக்கியமாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸில் தயாரித்து பரிமாறப்படும் உணவுகள் உட்பட ஜேர்மனிக்கும் பிரான்ஸிற்குமிடையில் குறைவான சேவைகள் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ளன.

முன்னணி ஆடை ஏற்றுமதியாளரான பிரண்டிஸ் குரூப் குழுவின் நிதி இயக்குநரான ஹசிதா பிரேமரத்ன, "ஆடைத் துறையானது ஒரு முழுமையான வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கின்றது. **GSP** சலுகையினால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு (பிரண் டிஸ், மாஸ் , ஹிட்ரமணி) போன்ற மூன்று முக்கிய ஆடை உற்பத்தி நிறுவனங்கள் மட்டுமல்லாது மற்றைய சிறிய நடுத்தர நிறுவனங் கள், டீஜெய் மற்றும் ஹேய்லீஸ் பப்ரிக் போன்ற உள்ளூர் ஆடை உற்பத்தியாளர்கள், மதிப்பீட்டு சங்கிலியில் உள்ள மற்ற பங்கேற் பாளர்களான (டிரிம் சப்ளையர்கள், பக்கேஜிங், லாஜிஸ்டிக்ஸ்) போன் றோருக்கும் ஐரோப்பிய ஒன்றியத் தால் நன்மைகள் பெற செய்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்" எனக் குறிப்பிட்டார்.

உயர்தர உற்பத்திகளை உற்பத்தி செய்தல் மற்றும் ஒழுங்கு நெறிகளை பின்பற்றுவது இலங்கையின் முக்கிய பலமாக மாறும்.

மேலும், இலங்கையின்நிறுவனங்கள் படிப்படியாக நிலையான உற்பத்திகள், பச்சை உற்பத்தி, சேதன உற்பத்திகள் மற்றும் உலகளாவிய ரீதியிலும் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தால் மதிக்கப்படுகின்ற நியாயமான வர்த்தக நடைமுறைகள் போன்றவற்றை பின்பற்றி உற்பத்தி செய்து வருகின்றன. அடிப்படை மனித உரிமைகள், சட்ட விதிமுறை மற்றும் நல்ல ஆட்சி ஆகியவற்றை மதித்து ஐரோப்பிய ஒன்றிய சந்தையை ஊடுருவக்கூடிய திறன் வாய்ந்த ஒரு வலுவான நாடானது சர்வதேச முதலீட்டாளர் சமூகத்திற்கு ஒரு வலுவான சமிக்ஞையை அனுப்புவதன் மூலமும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈர்ப்பை பெற எளிதாக்குகின்றது.

**GSP** திட்டம் இலங்கையில் அதிகமதிகமான வலுமதிப்பீட்டை ஊக்குவிப்பதோடு அதன் மூலம் பின்தங்கிய ஒருங்கிணைப்பையும் ஊக்குவிக்கிறது. இதன் விளைவாக புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், நாட்டில் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இது உதவுகிறது.

**GSP** நன்மைகள் இலங்கையின் கிராமப்புற தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும். **GSP** இன் கீழ் வழங்கப்படும் சலுகைகள் இலங்கையின் விவசாய மற்றும் மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டுள்ள நிதி ரீதியாக குறைந்த சலுகையை பெரும் விவசாயிகளுக்கு உதவுகின்றது. புதிய ஏற்றுமதி வாய்ப்புகள் இறுதியில் வாழ்வாதாரங்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளின் வருமான அளவுகளை உயர்த்தக் கூடியது.

இலங்கை ஏற்றுமதியாளர்கள், வேளாண்மை சார்ந்த பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை ஐரோப்பிய கூட்டு நிறுவனங்களுடன் இணைந்த கூட்டு முயற்சிகள் மற்றும் தொழில்நுட்பத்தை மாற்றுவதன் மூலம் உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்ள முடியும். சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களின் மதிப்பு சங்கிலிகளின் பகுதியாக இன்னும் திறம்பட வேலைசெய்ய ஊக்குவிக்கபட வேண்டும்.

வேலைப்பளுவை இரட்டிப்பாக்குவதன் மூலமும் உற்பத்தி செயல் முறைகளைத் தன்னியக்கப்படுத்துவதன் மூலமும் அதிகளவான உற்பத்தி திறன் பற்றிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் உற்பத்தியாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதே நேரம், கடல் மீன் ஏற்றுமதியாளர்கள் புதிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கையின் ஆழ்கடலில் வாழும் மீன்களில் கவனிக்கத்தக்க குறைவர்னது நடுத்தர மற்றும் நீண்ட கால திறனை அச்சுறுத்தும் என்று வலியுறுத்து கின்றனர்.

ஏற்றுமதிகளில் மூன்றில் ஒரு பங்கு இங்கிலாந்தின் சந்தையாகும். வரவிருக்கும் பிரெக்ஸிட் **(Brexit)** கருத்தில் கொண்டு, இந்த முக்கிய பிராந்தியத்தில் முன்னுரிமை சந்தை அணுகலை பராமரிக்க ஒரு பொறிமுறையை நிறுவுவதுபற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

திருமதி மல்வத்தே , **EDP** யின் தலைவரது கருத்துப்படி, **GSP** பிளஸ் மீண்டும் பெறப்பட்டதன் பின்னர் 12 மாதங்களில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நாம் ஏற்றுமதி செய்யப்பட்ட ஏற்றுமதி வளர்ச்சியை அனுபவித்திருந்த போதிலும், புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் ஏற்றுமதி விரிவாக்கத்தை எளிதாக்கவும் மத்திய ஐரோப்பிய சந்தைகளில் ஊடுருவதற்கும் கவனம் செலுத்த வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச வர்த்தக மையத்தின் ஆதரவுடன் புதிய தேசிய ஏற்றுமதி மூலோபாயம் கடந்த மாதம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, மின்னணு, ஒளி பொறியியல் தயாரிப்புகள், மின் பொருட்கள், ஆரோக்கிய தயாரிப் புகள் மற்றும் சில வேளாண்மை பொருட்கள் போன்ற புதிய புது மையான தயாரிப்புக்கள் , ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்குள் வரி யற்ற முறையில் விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றன".

# facebook

## ஆசை

ஞானி ஒருவர்.நீண்ட நேரம் கண்களை மூடி தியானம் செய்த பின் , தன் கண்களை திறக்கிறார். எதிரில் ஒருவன் நிற்கிறான். அவன் அவரையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறான்.



ஞானி எந்த ஒரு சலனமும் இல்லாமல் அவனையே உற்று பார்க்கிறார்.

சற்றும் எதிர்பாராத விதமாக அவன் ஞானியின் முகத்தில் காரி உமிழ்கிறான். ஞானி, அவன் உமிழ்ந்த உமிழ் நீரை துணியால் துடைத்துவிட்டு, அவனையே பார்க்கிறார்.

மீண்டும் ஒருமுறை ஞானி மீது காரி உமிழ்கிறான். இம்முறையும் ஞானி எதுவும் நடவாது மாதிரி, திரும்பவும் ஒருமுறை தன் முகத்தை துணியால் துடைத்து விட்டு அவனை நோக்குகிறார். என்னடா இது , இரண்டு முறை துப்பியும் இந்த ஆள் சலனமற்று காண்கிறார். அவன் ஞானியை உற்று பார்த்து விட்டு. உனக்கு கோபமே வராதா என்று கோபமாக உரக்கக் குரல் கொடுத்தான். ஞானியிடம் இருந்து மயான அமைதி மட்டும் தான். அவன் அங்கிருந்து புறப்பட்டு யாருமில்லா அந்த கூடாரத்தை அடைந்தான். கண்களை மூடி உறங்க சென்றான்.

தூக்கம் வரவில்லை. கண்களை மூடியதும் , தன் ஞானியிடம் நடந்து கொண்ட அந்த காட்சிகள் திரும்பத்திரும்ப வந்தது. எவ்வளவு மோசமாக நடந்து கொண்டேன். இதற்கு மேல் மோசமாக நடந்து கொள்ள முடியுமா. நான் செய்த தவறு, தவறுக்கெல்லாம் ராஜா.

தவறின் உச்சம். மகாபாவம் செய்து விட்டேன். ஞானிகளுக்கும் கோபம் வரும் என்று எண் நண்பனிடம் பந்தயம் கட்டினேன், அதன் செயற்பாடே நான் அவரிடம் செய்த அறுவருக்கும் செயல். பந்தயத்தில் தோற்றுவிட்டேன். கோபமே இல்லாமல் ஞானி போல் வாழ முடியுமா. உத்தமரே என்னை மன்னியுங்கள்.

உங்களுக்கு தான் கோபமே வராதே. பின் எப்படி என்னை மன்னிப்பீர். மகாபாவி ஆகிவிட்டேன். இதற்கு ஒரே தீர்வு அவரை சரணடைவது தான். அவர் வழியைப் பின்பற்றுவது தான். என்னை ஏற்றுக்கொள்வாரா. சூரியன் உதயமானது. ஓடினான் ஞானியிடம். சாஷ்டாங்கமாக காலில் விழுந்து, மன்னிப்புக் கேட்டான்.

ஞானி அவன் தோல்களை தொட்டு அவனை எழுப்பினார். அமைதியாக இரு, என்று கூறி தன் பக்கத்தில் அவனை அமர சொன்னார். நான் உங்களை மிகவும் இழிவுபடுத்திவிட்டேன்.

நீங்கள் அதற்கு தண்டனை தர மாட்டீர்கள் என்பது எனக்கு தெரியும். நான் உங்கள் காலடியில் விழுந்து கிடக்க முடிவு செய்து விட்டேன். ஐயனே இந்த பாவியை ஏற்றுகொள்ளுங்கள். இந்த உலகில் யாரும் பாவி இல்லை. நேற்று நீ செய்த காரியமும், இன்று நீ செய்த செயலும் விதி படி நடந்தது. கடமை ஆற்றுவது நம் வேலை. விதி நம்மை வழி நடத்தி செல்லும். வாழ்க்கையில் நல்லதும் இல்லை, கெட்டதும் இல்லை. காரண காரியம் இன்றி எதுவும் நடக்காது. நீ கெட்டவன் இல்லை. நான் நல்லவனும் இல்லை. எல்லாம் சமம்தான். உன் ஆசை தான் அனைத்துக்கும் காரணம். ஆசையை துறந்தால் அனைத்தும் உனது என்று ஞானி கூறினார். எனக்கு எதுவும் புரியவில்லை அவன் சொல்ல,

சரி உன்னை என் சீடராக ஏற்கிறேன். நீ கண் முடி தியானம் செய்து முடித்த பிறகு, யாரோ ஒருவன் நீ என்னை செய்தது போல் செய்தால் அமைதி காக்க வேண்டும் சம்மதமா என்று ஞானி கேட்க, அதற்கு அவன் ......?

## எது வளர்ச்சி?

ஒரு அழகான சமவெளி, அதை சுற்றிலும் அரண் போல் வானுயர்ந்த மலைகள், கிணற்று தவளைகள் போல் வெளி உலகம் தெரியாத, தனக்கு தெரிந்த கலைகளைக் கொண்டு செழிப்புடனும் அன்புடனும் ஒற்றுமையுடனும் கூடி வாழும் மக்கள். விவசாயம் ஒன்றே அவர்கள் செய்யும் தொழில், செழிப்பான பூமி என மகிழ்ச்சியுடன் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தனர். காலங்கள் பல கடந்து சென்றும், அந்த மலையை தாண்டி வெளியுலக மக்களோடு தொடர்பு கொள்ளாமல் இருந்ததோடு யாரையும் தங்கள் பகுதிகளுக்குள் அனுமதிக்காமலே வாழ்ந்தனர்.

மறுபுறம் வளர்ச்சி அடைந்த உலகம்அறிவார்ந்த மக்கள், எண்ணற்ற போர்கள், போட்டிகள், பொறமைகளைத் தாண்டி நகர மக்கள் பலவகைகளிலும் முன்னேற்றம் அடைந்திருந்தனர். இருப்பினும் வளர்ச்சியில், தேவைகளை பூர்த்தி செய்வதில் அவர்கள் காட்டிய தீவிரம், இயற்கை வளங்களையும் விவசாயத்தையும் காக்க, சிறு முயற்சியை கூட செய்யவில்லை அதனால் அடுத்த ஐம்பது வருடங்களில் விவசாயம் முற்றிலும் அழிந்து விட்டது. இளம் தலைமுறையினர் விவசாயம் என்றால் என்னவென்று கேட்கும் அளவிற்கு அடியோடு அதை மறந்து விட்டனர்.

அனைவரும் இயற்கைக்கு மாறாக செயற்கை மற்றும் மரபணு மாற்றப்பட்ட உணவுகளையும்.அதிகமாக அசைவ உணவுகளையும் உண்டனர். இதனால் ஏகப்பட்ட நோய்கள் புதிது புதிதாக வந்து மனிதனின் சராசரி ஆயுள் காலம் குறைய தொடங்கியது.

மறுபுறம் சமவெளி மக்கள் இயற்கையோடு இணைந்து ஆரோக்கியமாக நீண்ட நாட்கள் வாழ்ந்தனர். மேலும் விவசாயத்திலும், சற்று சூழலை பாதுகாப்பதிலும் பல வகையில் முன்னேற்றம் கண்டனர்.

ஆண்டுகள் செல்ல செல்ல நகர மக்கள் வாழும் சுற்றுச்சூழல் மாசுபட்டு வாழ முடியாத சூழல் உருவானது. அம்மக்கள் தாங்கள் எந்த மாதிரியான உலகில் வாழ்கிறோம் என்பதை உணர தொடங்கினர். மேலும் எண்ணற்ற வளர்ச்சிகள் கண்டபோதும் தாம் வாழும் சூழல் பாலைவனமாகவே மாறி இருப்பதை உணர்ந்தனர்.

பலர் இயற்கையைத் தேடி ஓட ஆரம்பித்தனர், சிலரோ சுயநல நோக்கத்தோடு அவர்களின் இலாபத்திற்காக மக்களின் மனதை மாற்ற முற்பட்டனர். பல்வேறு விதமான நோய்களையும் இன்னல்களையும் அனுபவித்த மக்கள் அந்த கயவர்களின் அறிவுறைய்ய கேட்காமல் புதிய பூமியை, இயற்கை வளமிக்க பூமியை உருவாக்க கிளம்பினர்.


இயற்கை வளங்கள் மொத்தமும் அழிந்து விட்ட நிலையில் புதியதோர் உலகை உருவாக்க சமவெளி மக்களின் உதவியை நாடினர், அவர்களும் உதவினர். நகர மக்கள் பல விதமான விதைகளையும் மரக் கன்றுகளையும் சமவெளி மக்களிடம் இருந்து பெற்றனர். அடுத்த 150 வருடங்கள் மக்கள் விவசாயத்திலும் இயற்கை வளத்தை பெருக்குவதிலும் தங்கள் அறிவையும் ஆற்றலையும் உப யோகித்தனர். அதில் வெற்றியும் பெற்றனர் தொடர்ந்து அதை பாதுகாத்தும் வந்தனர்.

இக்கதையில் இருந்து நான் கூற வருவது வளர்ச்சியை சுயநலத்திற்கும் தனிமனித சுரண்டலுக்கும் உபயோகிப்பதை விட சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் இயற்கையை பாதுகாப்பதற்கும் பயன்படுத்தினால் நம் மனித சமுதாயம் நலம் பெறும்.

அன்பை வழங்குவோம் அன்பை பெறுவோம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1488

### துஷாந்தன்



நாளை பார்ப்போம் என்று தள்ளி வைக்காமல் இன்றைய செயலை இன்றே செய்பவர்கள் தோல்வி அடைந்தாலும் மகிழ்ச்சியாக உறங்குவார்கள்

### தர்சிகன்

மகன்: நான் ஒரு விடயம் சொல்லனும்
அப்பா: சாப்பிடும் போது பேசக்கூடாது



(சாப்பிட்ட பிறகு)
அப்பா:என்னடா? சொல்லு
மகன்: உங்க சாப்பாட்டில அம்மா விஷம் வச்சிருக்காங்க

### சிவா

டை கட்டி வேலை செய்யும் படிப்பாளியைவிட எவருக்கும் கைகட்டாமல் வேலை செய்யும் உழைப்பாளியே மேல்



### மிமிக்கிரி ஆதி

தான் சிறந்த மனிதன் என்று யாருக்கும் நிரூபிக்க ஆசைப்படாத மனிதன் எவனோ அவனே உண்மையில் சிறந்த மனிதன்- ஓஷோ



### சொரூபன்



அடுத்த நொடி ஒழித்து வைத்திருக்கும் அதிசயத்தில் மரணம் கூட இருக்கலாம் என்பதால் வாழும் வரை ஆணவம், அகங்காரம், கோபம், செருக்கு, தற்பெருமை போன்ற குப்பைகளின்றி வாழ்வோம்

### லக்ஷன்

பஞ்சர் கடை என்று டயர்ல எழுதி, வெளிய வச்சிருக்காங்க



நகைக்கடை என்று நகையில எழுதி வெளிய வைக்கலாம்ல.. அப்பதான் கடை சீக்கிரம் டெவலப் ஆகும்


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 144

## நீரிழிவு மருந்துகளை எப்போது நிறுத்திக்கொள்ள முடியும்





நீரிழிவை குணப்படுத்த முடியுமா? அதாவது நீரிழிவு நிலைக்கு மருந்து பாவித்த ஒருவர் அந்த மருந்துகளை முற்றாக நிறுத்திக் கொள்ளக் கூடிய நிலை ஏற்படுமா? இது நடைமுறைச் சாத்தியமாகுமா? என்பன பொதுவாக பலராலும் கேட்கப்படும் ஒரு விடயமாக இருந்து வருகிறது.

நீரிழிவு நிலைக்கான மருந்துகளை சிலசமயம் நிறுத்திக் கொள்வது சாத்தியம் ஆகக்கூடிய ஒரு விடயமே. சிலருக்கு நீரிழிவுக்கான மருந்துகளை முற்றாக நிறுத்தக்கூடிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாக பின்வரும் நிலை உள்ளவர்களுக்கு இது சாத்தியப்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது.

- கர்ப்ப காலத்தில் நீரிழிவு ஏற்பட்டவர்கள் - கர்ப்ப காலம் முடிவடைந்ததும் நீரிழிவு மருந்துகளை நிறுத்திக்கொள்வது சாத்தியப்படலாம்.
- அழுத்தங்கள் தொற்றுகள் என்பவற்றுடன் நீரிழிவு கண்டறியப்பட்டவர்கள்- அந்த நிலைமைகள் கட்டுப்பாட்டிற்கு வந்த பின்னர் நீரிழிவுக்கான மருந்துகளை நிறுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.
- அதிகரித்த உடல்நிறையுடன் ஒழுங்காக உடற்பயிற்சி உணவுக்கட்டுப்பாடு என்பவற்றில் ஈடுபடாத ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்ட நீரிழிவு நோயாளர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்து நிறை குறைந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் இது சாத்தியப்படலாம்.
- சில மருந்துகள் காரணமாக நீரிழிவு ஏற்பட்டவர்கள் அந்த மாத்திரைகளை நிறுத்தியவுடன் நீரிழிவு நிலை தானாக குறைவடையலாம்.
- சில ஓமோன்களின் அதிகரித்த சுரப்பால் ஏற்படும் நீரிழிவு நிலை அந்த அடிப்படை காரணம் நிவர்த்தி செய்யப்பட்டவுடன் தானாக மறைந்து விடும்.

ஒழுங்கான உடற்பயிற்சி, ஒவ்வொரு உணவுடனும் பச்சை இலை வகைகளை சேர்த்துக் கொள்ளுதல்இசரியான உடல் நிறையை பேணுதல்இநீரிழிவு ஏற்படுவதற்கான அடிப்படை காரணிகளை அகற்றுதல்இ மன அமைதியை பேணுதல்இ சீனிஇ சர்க்கரை பனங்கட்டி அதிகமுள்ள உணவு வகைகளைத் தவிர்த்தல் போன்ற சிறிய நடவடிக்கைகள் மூலம் நாம் பெரிய பலன்களை பெற்றுக்கொள்ளலாம்.

பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் மருந்துகளை குறைத்துக் கொள்வதோ நிறுத்திக் கொள்வதோ சாத்தியமாகும்.


ஒரு தடவை நீரிழிவுத் தன்மை இருப்பது கண்டறியப்பட்டவர்கள் தொடர்ந்து வரும் காலங்களில் அவர்களின் நீரிழிவு நிலை கட்டுப்பாட்டில் இருந்தாலும் 2-3 மாதங்களுக்கு ஒரு தடவையாவது குருதி குளுக்கோசை சோதித்துப் பார்த்துக் கொள்வது அவசியமாகும். வாழ்க்கை முறையில் சிறுசிறு மாற்றங்களை செய்து பாரிய நன்மைகளை பெற்றுக்கொள்ள முயற்சி எடுப்போம்.

நீரிழிவு நிலை ஒரு பாரிய நோய் என்று எண்ணி மனக் குழப்பம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதனை கட்டுப்படுத்த வழங்கப்படும் மருந்துகளும் பக்கவிளைவு குறைந்தவை. எனவே மருத்துவ ஆலோசனை இன்றி இதற்கான மருந்துகளை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ முயற்சி எடுப்பது பாதுகாப்பானது அல்ல. இந்த நிலையை நாம் மன ஊக்கத்துடன்வெற்றிகரமாக எதிர்கொண்டு சுகதேகியாக வாழ முடியும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## மனச்சுமைகள் மடிந்துவிட





நிலவுமகள் உலவிவர மௌனமொழி பேச
குழுமிநின்ற விண்மணிகள் கண்சிமிட்டி பேசும்
கரைதவழும் கடலலைகள் தரைதடவிப் பேசும்
கருமைநிற முகில்பேசி மழைக்காற்று வீசும்

மகரந்தம் தேடி வண்டு மலர் மருவி பேசும்
மலையருவி சலசலத்து வழிநெடுக பேசும்
விடிகாலை துயில் எழுந்து குருவிகளும் பேசும்-எம்
குறுகுறுத்த விரல் அசைவில் இசைக்கருவி பேசும்

பேசாத பொருளுண்டோ? நீயுமெனி பேசு
பேச்சு எங்கள் மூச்சு என்று முரசுகொட்டிப் பேசு
தெளிந்தமனம் துணிந்துவர துயர்மடிந்து போக
மடைதிறந்த வெள்ளமென மனம்திறந்து பேசு.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்




உங்கள் வெளிநாட்டு பணத்தை செலான் வங்கியில் வைப்புச் செய்து
நட்சத்திர அந்தஸ்துள்ள ஹோட்டலில் விடுமுறையை இலவசமாக அனுபவியுங்கள்
அத்துடன் மேலும் பல அனுகூலங்கள்

5 வருடங்களுக்கு அமெரிக்க டொலர் பெறுமதியான நிலையான வைப்புகளுக்கு 6% வ.வ

1 வருடத்துக்கு அமெரிக்க டொலர் பெறுமதியான நிலையான வைப்புகளுக்கு 4.25% வ.வ

GRACE

விரையுங்கள்! புதிய தனிப்பட்ட வெளிநாட்டு பணத்தில் (PFCA) கணக்கை ஆரம்பியுங்கள் அல்லது ஏற்கனவேயுள்ள கணக்கை செலான் வங்கிக்கு மாற்றி இவ்வனுகூலங்களை அனுபவியுங்கள்

SEYLAN 30

www.seylan.lk 077 200 88 88 011 200 88 88

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி